DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue
Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1414 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 12, 2023

# தமிழ்நாடு அரசின் கலைப் பண்பாட்டுத்துறையின் இயக்குனர் சே. ரா. காந்தியை நடனக் கலைஞர் சாகிர் உசைன் சகிதம் சந்தித்த "உதயன்" பிரதம ஆசிரியர்




தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கிய வண்ணம் தமிழ் மொழி . தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் மொழியை தமிழர்கள் வாழும் நாடுகளில் கற்பிக்கும் திட்டத்திற்கு பொறுப்பானவரும் தமிழ் மொழி ஆர்வலருமான கலைப் பண்பாட்டுத்துறையின் இயக்குனர் சே. ரா. காந்தி அவர்களை சந்திக்கு வாய்ப்பு எமது கனடா உதயன் குழுவினருக்கு சில நாட்களுக்கு முன்னர் கிடைத்தது.

தமிழக அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இசை நடனக் கல்லூரிகளின் கௌரவ ஆலோசகரும் நடனக் கலைஞருமான சாகிர் உசைன் அவர்கள் சகிதம் சந்தித்த கனடா "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களுடன் உதயன் குழுவினரும் இருந்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

# புதிய வடிவமைப்பை கொண்டதாக வெளிவரவுள்ள கனடிய கடவுச் சீட்டு



புதிய வடிவமைப்பை கொண்டதாக வெளிவரவுள்ள கனடிய கடவுச் சீட்டு கனடியர்களின் நலன் கருதி அதிநவீன பாதுகாப்பு அம்சங்களுடன் அச்சாகி வருவதாக கனடிய குடிவரவு அமைச்சகம் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளது

இது தொடர்பாக கனடிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு வழங்கப்பெறும் கடவுச் சீட்டானது.

உலகின் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் மரியாதைக்குரிய பயண ஆவணங்களில் ஒன்றாகும். சிலருக்கு, தங்களைப் பிரிந்து வாழும் உறவு-களோடு மீண்டும் இணைவதற்கும், , சாதனை-களைச் செய்வதற்கும் இது பயன்படுகிறது. மற்றவர்களுக்கு, இந்தக் கடவுச் சீட்டானது அவர்களை குடியேற்றப் பயணத்தின் அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்கின்றது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

உ
சக்திமயம்



# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம்
# ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்
## 23வது ஆண்டு விழாவும் (2023)

ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் - டொரொன்ரோ
3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8
e-mail: sakthi1226@gmail.com Tel: 416-293-1226 Fax: 416-293-1215





கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைாத நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது
தங்கையே

அம்பிகை அடியார்க்ளே!

ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து திகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவளம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி (ஸ்ரீகனகதுர்க்கா) அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் வைகாசித் திங்கள் 6ம் நாள் (20.05.2023) சனிக்கிழமை ரோகிணி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:00 மணிக்கு மேல் 8:30 மணிக்குள் துவஜாரோகத்துடன் (கொடியேற்றத்துடன்) ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற அம்பாள் திருவருள் ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மகாபெரியவாள் பரிபூரண அநுக்கிரஹத்துடன் கொடியேற்றம் நடைபெறவுள்ளது.

## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் 2023

| | |
|---|---|
| 19.05.2023 வெள்ளி<br>உபயம்<br>திருமதி. சுலோச்சனா கிருஸ்ணமூர்த்தி | காலை 7:00 விக்னேஸ்வர பூஜை அனுக்ஞை கணபதி ஹோமம் 108 சங்காபிஷேகம் கும்ப பூஜை அங்குரார்ப்பணம் ரக்ஷபந்தனம்<br>9:30 வசந்த மண்டப பூஜை<br>10:00 பூர்வாங்க பூஜை அபிஷேகம் சமஸ்த தேவதா ஆவாஹனம்<br>மாலை 5:00 கிரஹ சாந்தி வாஸ்து சாந்தி மிருத்யுசங்கிரணம் |
| 20.05.2023 சனி | 11:25 துவஜா ரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும் |

### நிகழ்ச்சி நிரல் மற்றும் பிரம்மோத்ஸவ உபயதாரர்கள்

| | Day & Date | Utsavam / Utsava Vahanam | Morning Maha utsava Sponsors | Evening Maha utsava Sponsors |
|---|---|---|---|---|
| 1 | May 20 - Sat. | சிம்மவாகனம் | திரு. செல்வகுமார், திரு பரராஜசிங்கம் பொன்னுத்துரை குடும்பங்கள் | திரு. R. K. மூர்த்தி குடும்பம் |
| 2 | May 21 - Sun. | ஓங்கார வாகனம் | திரு. சத்யேந்திரன் குடும்பம் | திரு. தியாகராஜன் குடும்பம் |
| 3 | May 22 - Mon. | சூரியபிரபாவக் காட்சி | திரு. கைலாசபிள்ளை குடும்பம் | திரு. திருமதி செந்தூரன் கங்கா குடும்பம் |
| 4 | May 23 - Tue. | சந்திரபிரபாவக் காட்சி | திரு. அனுராக் குடும்பம் | திரு. திருமதி பிருந்தவன் குடும்பம் |
| 5 | May 24 - Wed. | நாகவாகனம் | திரு. சினனத்துரை குடும்பம் | திரு. நாதன் தியாகராஜா குடும்பம்<br>திரு. சுஜி சபாநாதன் குடும்பம் |
| 6 | May 25 - Thu. | மயில்வாகனம் | திரு. வசந்தன் ராஜா ஐயா குடும்பம் | திரு. கணேஸ்வரன் குடும்பம் |
| 7 | May 26 - Fri. | கப்பல் திருவிழா | திரு. திருமதி செந்தூரன் குடும்பம்<br>திரு. திருமதி ராம்குமார் குடும்பம் | திரு. திருமதி மோகன் மதி குடும்பம்<br>திரு. திருமதி கௌரி தவபாலசிங்கம் |
| 8 | May 27 - Sat. | அன்னவாகனம் | திரு. தி திருக்கேஸ்வரன் குடும்பம் (ரஞ்சனி சட்ட அலுவலகம்) | திரு. லோகேந்திரலிங்கம் குடும்பம் |
| 9 | May 28 - Sun | மஞ்சத் திருவிழா | திரு. தில்லையீசன் குடும்பம் | திரு திருமதி சொரூபா குகநாதன்<br>திரு திருமதி கார்த்திகா அன்று<br>திரு திருமதிவைதிகா அர்ஜீன்<br>செல்வி துவரரகா குகநாதன் |
| 10 | May 29 - Mon. | கஜ(யானை)வாகனம் | திரு. திருமதி சிவசோதிநாதன் குடும்பம் | திரு. கமலநாதன் குடும்பம் |
| 11 | May 30 - Tue. | சிவலிங்க வழிபாடு கைலாச வாகனம் | திரு. திருமதி சிவலிங்கம் குடும்பம் | திரு. தவபுத்திரன்,<br>திரு. சிறீஸ்கந்தராஜா குடும்பங்கள் |
| 12 | May 31 - Wed. | பூந்தண்டிகை | திரு. லிங்கேஸ்வரன் குடும்பம் | திரு. முத்துக்குமாரு<br>திரு. ஜெகதீஸ்வரன்,<br>திரு. சந்திரகுமார்<br>திரு. லோகேஸ்வரன் குடும்பங்கள் |
| 13 | June 01 - Thu. | வேட்டைத்திருவிழா | திருமதி தில்லைநாயகி குடும்பம் | திரு. குணசேகர் குடும்பம் |
| 14 | June 02 - Fri. | சப்பறத்திருவிழா | திரு. கனகரத்தினம் குடும்பம் | திரு. மகாலிங்கம் குடும்பம் |
| 15 | June 03 - Sat. | தேர்த்திருவிழா | திருமதி யோகேஸ்வரி குடும்பம் (அம்பாள் தேர் உபயம்)<br>திரு. சுதாகர் குடும்பம் (பிள்ளையார் தேர் உபயம்) | திரு. தேவகாந்தன் குடும்பம் (ஊஞ்சல் பிராயச்சித்த அபிஷேகம்) |
| 16 | June 04 - Sun. | தீர்த்தத் திருவிழா | திரு. குமரகுருபரன் குடும்பம் சூர்ணோற்சவம், தீர்த்தம் யாக கும்பாபிஷேகம் | திரு. விஜயராஜா குடும்பம் கொடியிறக்கும் வைபவம் |
| 17 | June 05 - Mon. | பூங்காவனம் | திரு. சிவகுமார் குடும்பம் (Suruthy Takeout & Catering) | பூங்காவனம் |
| 18 | June 06 - Tue. | பிராயச்சித்த அபிஷேகம் | திரு. கந்தசாமி கிரிசாந்தன் குடும்பம் | வைரவர் மடை |

ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி மகா பெரியவர் தேர் ஆலய அடியார்களால் உலாவரும்.

### காலை

8:45 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:45 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

### குருமார்கள் விபரம்:

ஆலய ஸ்தாபகர் பிரதமகுரு வேத கலா பூஷணம், ப்ரம்மஸ்ரீ. ஜம்புநாத சந்திரமௌலி சாஸ்த்திரிகளின் நல்லாசியுடன்
மகோற்சவ பிரதம குரு: சிவகாம ப்ரவீண சிவஸ்ரீ சுரேந்திர சிவாச்சாரியார் (சுரேன் ஐயா)
ஆலய குரு: ப்ரம்மஸ்ரீ. ஜம்புநாதன் சேதுராமன் சர்மா (ஸ்ரீ சுரேஷ் ஐயா),
அனந்தநாராயணசர்மா (கார்த்திக்), அனுராக் ஜம்பநாதசர்மா, சிவஸ்ரீ சாரங்கன் சுரேந்திரசர்மா,
பிரம்மஸ்ரீ தினகர்பட், பிரம்மஸ்ரீ மகேஷ்பாபு, ப்ரம்மஸ்ரீ. சர்வ லோகேஸ்வரக்குருக்கள் (ஈசன் ஐயா),
மற்றும் கனடாவிலுள்ள குருமார்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

மங்கள இசை: சிவமயம் குழுவினர்
நித்திய புஷ்ப அலங்காரம் - பரந்தாமன் ஐய சாயி மலர்க்களஞ்சியம்

### மாலை

5:00 மணிக்கு கும்ப பூஜை
5:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6:00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8:00 மணிக்கு வெளிவீதி வலம்வருதல்
8:45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

Canada

We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# தமிழின அழிப்பின் 14ம் ஆண்டு நினைவு நாள் வலிகளுடன் எம்மை வரவேற்கிறது?

ஈழத் தமிழர்களுக்கு இலங்கையின் பேரினவாத அரசிடமிருந்து அவர்களை விடுவித்து விடுதலை பெறுவதே இனி உள்ள ஒரே வழி என்ற தீர்மானத்தோடு இதயங்களில் விடுதலை வேட்கையும் கைகளில் கனதியான ஆயுதங்களையும் தாங்கிய வண்ணம் போராடத் தொடங்கின. எமது இளைஞர்களின் எழுச்சி மிக்க அணிகள். உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த இராணுவ பலத்தை விட்டு வைப்பதற்கு தென்னிலங்கை பேரினவாதிகளுக்கு மட்டுமல்ல உலக முதலாளித்துவ சக்திகளுக்கும் எள்ளளவும் விருப்பம் இல்லாது வளர்ச்சியடைந்தது எமது இனத்திற்கான விடுதலையை பெற்றிட எழுந்து நின்ற வேங்கைப் படைகள்.

2009ம் ஆண்டு வரை வெற்றிகளையும் தோல்விகளையும் தழுவி நின்றாலும். ஆயிரக்கணக்கான போராளிகளையும் பொதுமக்களைம் விடுதலைப் போரில் பறிகொடுத்தாலும் முப்படை கொண்ட முழு நாடு போன்று படைகளை அணிவகுத்துக் காட்டியது வன்னியின் இரா'ணுவத் தலைமை.
ஆனால் தங்களுக்குள்ளே குரோத மனப்பான்மை கொண்டு அரசியல் செய்து வந்த நாடுகள் கூட ஈழத் தமிழர்களின் இராணுவ பலத்தை அடக்கி அழிப்பதற்காக ஒன்று திரண்டன. தங்கள் குரோதங்களை ஒரு புறத்தே வைத்து விட்டு தமிழர்களின் விடுதலை போராட்டத்தின் வளர்ச்சியையும் அதன் வேட்கையையும் தெரிந்து கொண்டு எமது இராணுவ பலத்தையும் மக்களின் தியாக நெறியையும் நிர்மூலமாக்கும் நோக்கோடு நமது மண்ணில் அடவாடித் தனமாக இறக்கப்பட்டன வேற்று நாட்டுப் படைகள்.

விடுதலைத் தாகத்தோடு போராடிய போராளிகளும் பொது மக்களும் எதிர்பாராத விதமாக கொன்றழிக்கப்பட்டனர். வன்னி மண்ணில் அரங்கேறியது தமிழின அழிப்பு. இரத்த ஆறாக ஓடிய அந்த வீரம் செறிந்த மண்ணில் செங்குருதி ஆறு பெருக்கெடுத்தது. தியாக உணர்வுள்ளவர்களின் உயிர்கள் கொரூரமாகப் பறிக்கப்பட்டன.
ஆமாம்! 2009ம் ஆண்டு மே மாதம் எமது வீரம் செறிந்த மண்ணில் அரங்கேறிய தமிழின அழிப்பிற்கு எதிராக எமது மக்கள் ஐக்கிய நாடுகள் சபையிலும் சர்வதேச குற்றவியல் நீதி மன்றிலும் நியாயத்திற்காக குரல் எழுப்பினர். 'குலத்தைக் செடுக்க வந்த கோடறிக் கம்புகள் போன்றவர்கள் எம் பக்கத்தில் நிற்பது போல நின்று போர்க்குற்றவாளிகளுக்கு 'குடை' பிடிக்கத்தான் செய்தனர்.

இவ்வாறான வலிகள் நிறைந்த பயணத்தில் இனப் படுகொலையின் 14ம் ஆண்டு நினைவு நாள் வலிகளுடன் எம்மை வரவேற்கிறது.
இவ்வாறு ஒவ்வொரு வருடத்திலும் மே மாதத்தில் கூடி நின்று கண்ணீரை மட்டும் தரையில் தெளித்து விடாது நாம் ஏனைய பல காரியங்களிலும் இறங்கிச் செல்ல வேண்டும்.

இவ்வாரத்தின் தனது கட்டுரையில் யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுரையாளர் நிலாந்தன் குறிப்பிடுவது போன்று நாம் அந்த வழியில் காரியங்களை ஆற்ற முன்வர வேண்டும்.
இரண்டாவது, இறுதிக்கட்டப் போரில் சிக்கிச் சின்னாபின்னமாகிய குடும்பங்களுக்கு உதவிசெய்வது. பதினான்கு ஆண்டுகளின் பின்னரும் போரின் விளைவுகளில் இருந்து எழ முடியாமல் தத்தளிக்கும் குடும்பங்கள் பல உண்டு. போரில் குடும்பத் தலைவரை, அல்லது குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த நபரை,அல்லது உழைக்கும் நபரை, அல்லது வருமான வழியை இழந்த குடும்பங்கள் உண்டு.

போரில் ஏற்பட்ட சொத்திழப்பிலிருந்து மீண்டெழாத குடும்பங்கள் பல உண்டு. அவர்களுக்கெல்லாம் உதவி வேண்டும். தியாகிகளின் வீடுகளில் அல்லது முன்னாள் இயக்கத்தவர்களின் வீடுகளில் அடுப்பெரியாதபோது முள்ளிவாய்க்காலில் சுடரை ஏற்றுவதில் எந்தப் பொருளும் இல்லை. எனவே போரால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எல்லாருமாகச் சேர்ந்து உதவ வேண்டும்.

அது தானதர்மம் அல்ல,கருணைச் செயலும் அல்ல. மாறாக அது ஒரு தேசியக் கடமை. தேசத்தைக் கட்டியெழுப்புவதின் ஒரு பகுதி. இடிந்துபோன குடும்பங்களை, நொறுங்கிப் போன உள்ளங்களை மீளக்கட்டி எழுப்புவது. இறந்தவர்களின் ஆத்மாக்கள் அப்பொழுதுதான் சாந்தி அடையும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

(முன்பக்கத் தொடர்ச்சி)

## புதிய வடிவமைப்பை கொண்டதாக வெளிவரவுள்ள கனடிய கடவுச் சீட்டு

குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் கௌரவ சீன் ப்ரேசர் மற்றும் குடும்பங்கள், குழந்தைகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கரீனா கோல்ட் ஆகியோர் புதிய கனடிய கடவுச் சீட்டின் வடிவமைப்பு மாதிரியை நேற்று வியாழக்கிழமை ஒட்டாவா மாநகரில் வெளியிட்டனர். புதிய கனடிய கடவுச் சீட்டானது. அதிநவீன பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் புதிய கலைப்படைப்புகளுடன் அட்டையிலிருந்து மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது, இது அனைத்து கனேடியர்களுக்கும் உலகில் மிகவும் பாதுகாப்பான மற்றும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயண ஆவணங்களில் ஒன்றாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க வல்லது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய கடவுச்சீட்டில் கனடியர்களின் அடையாளங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வடிவமைக்கப்பட்ட அதிநவீன பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன, அதாவது பாலிகார்பனேட் தரவுப் பக்கம்-கனடாவின் ஓட்டுநர் உரிமங்களைப் போன்ற தொழில்நுட்பம். பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களின் தனிப்பட்ட தகவல்கள் இப்போது மையால் அச்சிடப்படுவதற்குப் பதிலாக லேசர் பொறிக்கப்பட்டிருக்கும்.

புதிய கடவுச்சீட்டு கனடாவின் பாரம்பரியம் மற்றும் அடையாளத்தை நான்கு பருவங்கள் முழுவதும் கனடாவின் இயற்கை அழகின் சின்னமான படங்களுடன் கொண்டாடுகிறது. மேப்பிள் இலையை வெளிப்புற அழகாகக் காட்டும் மெற்படி புதிய கடவுச்சீட்டு அட்டை வடிவமைப்பும் இதில் அடங்கும்காப்பாகவும் நம்பகத்தன்மையுடனும் இருக்கும்.

**சொர்க்கம் திருமண சேவை**

34 வயது, Canadian Citizen
செவ்வாய் குற்றம் அற்ற
பெண்ணுக்கு மணமகன் தேவை.
Visa இல்லாதவர்களும்
விண்ணப்பிக்கலாம்.
44 வயது கணவனை இழந்த,
கனடா citizen, கிறிஸ்தவ
பெண்ணுக்கு மணமகன் தேவை.
இலங்கையில் இருந்தும் எதிர்
பார்க்கிறோம் தான்.
Call: (416) 666-1855

**Business for Sale**

Scarborough வில்
30 வருடங்களாக இயங்கிவரும்
Auto Parts Rebuilding Company
விற்பனைக்கு உண்டு.

Call:
(416) 543-8170

**காணி விற்பனைக்கு**

இயக்கச்சியில்
கண்டி A9 வீதிக்கு அருகில்
வீடு தென்னம் தோட்டத்துடன்
கூடிய காணி விற்பனைக்கு.

தொடர்புக்கு:
(416) 666-1855

**House Cleaning Staff Wanted**

House Cleaning Staff Wanted.
Day Shift Only.
( No Evenings Or Weekends)

Please Call
905 472 6042

**Condo apartment for Rent**

Lawrence and Midland சந்திக்கு
அருகில் உள்ள Condo
apartment with 2 Bedrooms
வாடகைக்கு உள்ளது.

,Near TTC, Subway station and
supermarket.

Please call: 416 466 0595

**Help Wanted**

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து அரசியல் பிரதி நிதிகள் சமூக மட்ட பிரதி நிதிகள் விசேட கலந்துரையாடல்

**- மன்னார் நிருபர் (06-05-2023)**

மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக காணப்படும் பல்வேறு விதமான பிரச்சினைகள் குறித்து மாவட்டத்தில் உள்ள சமூக மட்ட பொது அமைப்புகளின் பிரதி நிதிகளுக்கும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சனிக்கிழமை (06) மதியம் மன்னார் நகர மண்டபத்தில் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.







மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.கே. மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் அரசியல் பிரதி நிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து சமூக மட்ட பொது அமைப்புகளின் பிரதி நிதிகளினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

# இலங்கையில் இருந்து மேலும் ஒரு தொகுதி தமிழர்கள் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்



**- மன்னார் நிருபர் (06-05-2023)**

இலங்கையில் இருந்து மேலும் ஒரு தொகுதி தமிழர்கள் அகதிகளாக தமிழகத்தில் 06-05-2023 அன்று தஞ்சம் அடைந்துள்ளனர்.

தனுஷ்கோடி அடுத்த இரண்டாம் மணல் தீடையில் மூன்று குடும்பங்களை சேர்ந்த ஒரு கைக்குழந்தையுடன் 10 பேர் தஞ்சம் அடைந்தனர்.

இந்த நிலையில் அவர்களை மரைன் போலீசார் மீட்டு மண்டபம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று பின்னர் அகதிகள் மறுவாழ்வு முகாமில் ஒப்படைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

# மன்னாரில் ரெலோ தலைவர் சிறி சபாரத்தினத்தின் 37வது ஆண்டு நினைவு தினம் அனுஸ்ரிப்பு





**- மன்னார் நிருபர் (06-04-2023)**

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறி சபாரத்தினத்தின் 37வது ஆண்டு நினைவு தினம் இன்று மன்னாரில் அனுஸ்டிக்கப்பட்டது.

மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) காரியாலயத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் எ.ரி.மோகன் ராஜ் தலைமையில் நினைவஞ்சலி நிகழ்வு நடை பெற்றது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது தலைவர் சிறி சபாரத்தினம் மற்றும் உயிர் நீத்த போராளிகள் பொதுமக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நினைவுப்பேருரையும் இடம்பெற்றது.

# கொழும்பில் பிரபல தமிழர் அரசியல் தலைவர் மனோ கணேசன் அவர்களைச் சந்தித்த "கனடா உதயன்" குழுவினர்



சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நிகழ்ச்சிகளிலும் சந்திப்புக்களிலும் கலந்து கொண்ட கனடா உதயன் பிரதம ஆசிரியர் கொழும்பில் பிரபல தமிழர் அரசியல் தலைவர் மனோ கணேசன் அவர்களையும் சந்தித்து உரையாடினார். மனோ கணேசன் அவர்கள் கனடா உதயன் வார இதழில் தொடர்ச்சியாக அரசியல் கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதி வருகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி சந்திப்பின்போது இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும் “கனடா உதயன்” பத்திரிகைக்குழுவின் அங்கத்தவருமான வீ. தேவராஜ் அவர்களும் உடனிருந்தார்.

இலங்கை மற்றும் இலங்கைத் தமிழர் மற்றும் மலையகத் தமிழர் அரசியல் விவகாரங்கள் ஆகியவை தொடர்பாகவும் கனடா உதயனின் செயற்பாடுகள் தொடர்பாகவும் உரையாடினார்கள்.

மனோ கணேசன் அவர்களின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பு சில மணிநேரம் நீடித்தது.

# ஊடகத்தில் தங்கியிருக்க அவசியம் இல்லை

## பொறுப்பில்லாமல் பதில் அளித்த திலீபன் எம்.பி



**- மன்னார் நிருபர் (04-05-2023)**

அபிவிருத்திக் குழு கூட்டத்திற்கு அனுமதி மறுத்தமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது ஊடகத்தில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை என பொறுப்பில்லாமல் பதில் அளித்துள்ளார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் இடம்பெற்றதுடன், குறித்த கூட்டத்தில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இணை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனிடம் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்ட போது, அதற்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பதில் அளித்த அவர், அபிவிருத்திக்குழு கூட்டத்தில் மக்களுக்கு எதிரான சட்டவிரோதமான தீர்மானம் எதனையும் எடுத்தீர்களா என ஊடகவியலாளர்கள் கேட்டுள்ளனர்.

அதற்கு, கிளிநொச்சி அபிவிருத்திக்குழு கூட்டத்தில் ஊடகவியலாளர்களை உள்வாங்கி இருக்கின்றனர், எனவே அடுத்த அபிவிருத்திக்குழு கூட்டத்தில் நாங்கள் உங்களை உள்வாங்குவோம் எனக் கூறியுள்ளார்.

எம்மை உள்ளே அனுமதிக்காமைக்கு விசேட காரணங்கள் உள்ளனவா என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, அரசாங்க அதிபர் சுற்றுநிருபம் எனச் சொல்கிறார் நாங்கள் என்ன செய்வது என பதில் வழங்கியுள்ளார்.

எனினும், இணைத்தலைவர் பரிந்துரை செய்தால் அனுமதி வழங்கலாம் என சுற்று நிருபத்தில் உள்ளதே என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்டுள்ளது.

அதற்கு பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், ஊடகங்களில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என பொறுப்பில்லாமல் பதில் அளித்துள்ளார்.

எனினும் மக்கள் உண்மையினை அறிந்துகொள்ள ஊடகங்களை தானே நம்பியிருக்கின்றார்கள் என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்டுள்ளது.

அதற்கு பதில் அளித்த அவர், அடுத்த கூட்டத்திற்கு அனுமதி வழங்குவதாக தெரிவித்தார்.

நாங்கள் வருகை தந்தபோது மண்டப கதவினை மூடி ஒலிபெருக்கியின் சத்தத்தினை குறைக்கவேண்டிய தேவை ஏன் என கேட்கப்பட்டது.

அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், வழமையாகவே இந்த மண்டபத்தின் கதவு மூடித்தான் இருக்கும் உங்களுக்காக மூடவில்லை எனச் சொல்லியுள்ளார்.

உங்களை மீறி அரச அதிபர் செயற் படுகின்றாரா? என கேட்கப்பட்டதற்கு, திணைக்கள அதிகாரிகளையும், ஊடகங்களையும் அழைக்கும் பொறுப்பு அரச அதிபருக்கே உரியது என இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் பதில் அளித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ரணில் தமிழர்களை பேச அழைப்பது எதற்காக??

## தமிழர் தாயகத்தில் இடம்பெறும் அடக்குமுறையை சர்வதேச சமூகத்திற்கு மறைப்பதற்காகவே

**தமிழரின் தீர்வைக் காண்பதற்கு முன்னர், தமிழர்களின் இராணுவ வலிமையான “விடுதலைப்புலிகள்” என்ற ஒரே பலத்தை அழிப்பதில் இந்த சர்வதேச நாடுகள் அனைத்தும் பங்கு வகித்தன.**

**இந்த சிங்கள அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் அரசும் இரண்டுமே காரணம்.**



பறிபோகும் குருந்தூர் மலை, வெடுக்குநாறிமலை, கன்னியா வெந்நீர் ஊற்று, தையிட்டி

தமிழரின் தீர்வைக் காண்பதற்கு முன்னர், தமிழர்களின் இராணுவ வலிமையான ஒரே வலிமையை அழிப்பதில் சர்வதேச நாடுகள் அனைவரும் பங்கு வகித்தனர்.

தமிழர்களின் தீர்வை இலங்கை கண்காணிப்புக் குழுவின் நாடுகள் (நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து) மற்றும் இலங்கை நன்கொடையாளர் இணைத் தலைவர்கள் நாடுகள் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா ஆகியோரின் கடமையாகும்.

தமிழர்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பது சர்வதேச நாணய நிதியம் (IMF), அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை ஏமாற்றுவதற்கு.

75 வருடங்களாகியும் எந்தத் அரசியல் தீர்மானமும் இல்லாமல் போய்விட்டது. மேலும் ரணில் பிரபல ஜேஆரின் மருமகன் ஆவார்.

ரணிலிடம் மட்டும் தமிழர்கள் பேசக்கூடாது. தமிழர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை அழைத்து இப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுத்த வேண்டும்.

தமிழர்களின் நிலத்தை பறித்து சிங்கள இனவாத பௌத்த சின்னங்களை கட்டியெழுப்ப ரணில் அதிக திட்டங்களை வகுத்துள்ளார்.

இலங்கை கண்காணிப்பு பணி நாடுகள் (SLMM) மற்றும் இலங்கை நன்கொடையாளர் இணைத் தலைவர்களின் கடந்தகால நடவடிக்கைகளின் அடிப்படையில் மத்தியஸ்தம் செய்ய அழைக்கப்பட வேண்டும்.

தமிழரின் தீர்வைக் காண்பதற்கு முன்னர், தமிழர்களின் இராணுவ வலிமையான “விடுதலைப்புலிகள்” என்ற ஒரே பலத்தை அழிப்பதில் இந்த சர்வதேச நாடுகள் அனைத்தும் பங்கு வகித்தன.

தமிழர்களின் தீர்வை இலங்கை கண்காணிப்புக் குழுவின் நாடுகள் (நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து) மற்றும் இலங்கை நன்கொடையாளர் இணைத் தலைவர்கள் நாடுகள் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா ஆகியோரின் கடமையாகும்.

இந்த ஒடுக்குமுறைக்கான சிறந்த தீர்வு முழுத் தமிழ் மக்களுக்கும் நன்றாக தெரியும், ஆனால் அனைவரும் தங்கள் சொந்த அச்சத்தால் அமைதியாக இருக்கிறார்கள்.

தமிழர்கள் அனைவரும் இலங்கை கண்காணிப்புப் பணிகள் மற்றும் இலங்கை நன்கொடையாளர் இணைத் தலைவர்களின் நாடுகளை தமிழரின் அரசியல் தீர்வுக்காக அழைக்க வேண்டும்.

1. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவுடன் “நல்லாட்சி” என்று அழைக்கப்படும் போது ரணில் 1000 பௌத்த விகாரைகளுக்கு வரவு செலவு அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்ததை நினைவில் கொள்ளுங்கள்.
2. மற்றுமொரு முக்கியமான உண்மை என்னவென்றால், தமிழர்கள், இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் அனுமதியைப் பெறாமல், இலங்கையில் பௌத்தத்தை மிக முக்கியமான மதமாக சுமந்திரன் ஏற்றுக்கொண்டார்.
3. மூன்றாவதாக, ரணில்-மைத்திரியின் நல்லாட்சியில் வவுனியா நெடுங்கேணியில் 4000 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்படுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பாக சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், கலாநிதி சத்தியலிங்கம் ஆகியோர் ஊக்குவித்து வரவேற்றனர். அத்துடன் சிங்களவருக்கு உறுதி கொடுக்கும் வைபவத்தில் கை தட்டி சந்தோசமாக ரணில் மைத்திரியுடன் கலந்து கொண்டனர். மேலே குறிப்பிட்டுள்ள மூன்றுமே தொடர்ந்து அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புக்கு வித்திடுகின்றன.

இந்துக் கோவில்களை அழித்து அதற்கு பதிலாக பௌத்த இனவெறிச் சின்னத்தைக் கொண்டுவரும் இந்த இனப்படுகொலையை ரணில் செய்து கொண்டிருக்கும் வேளையில், ரணில் இன்னும் தமிழர்களுடன் பேசத் தயாராக இருப்பதை உலகுக்குக் காட்ட விரும்புகிறார்.

இது ரணிலின் “மேலுகி மூடுதல்”.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் அமெரிக்காவையோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தையோ மத்தியஸ்தம் செய்யுமாறு கோர மாட்டார்கள் அல்லது தமிழர்களின் அரசியல் எதிர்காலத்திற்காக பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்க மாட்டார்கள் என்பதை நாம் அறிவோம்.



தமிழ் எம்.பி.க்கள் அபிவிருத்தி நிதி லஞ்சத்தை பெற, ரணிலிடம் “தமிழர்களின் உரிமைகளை” பணத்திற்க்காக பேரம் பேச பழகிவிட்டனர்.

இந்த சிங்கள அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் அரசும் இரண்டுமே காரணம்.


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ் மறை மாவட்டத்தில் இடம்பெற்ற இலங்கை கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 79 வது தேசிய இளைஞர் சம்மேளன மாநாடு

- மன்னார் நிருபர் (07-05-2023)






இலங்கை கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 79வது தேசிய இளைஞர் சம்மேளன மாநாடு யாழ் மறை மாவட்டத்தில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (5) ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை (7) மாலை நிறைவடைந்துள்ளது.

குறித்த தேசிய இளைஞர் சம்மேளனத்தில் இலங்கையின் 12 மறை மாவட்டங்களையும் உள்ளடக்கி பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் இளைஞர் பணிக்காக நியமிக்கப்பட்ட கொழும்பு துணை மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் ஆரம்பமானது.

யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, இலங்கை கத்தோலிக்க இளையோர் சம்மேளனத்தின் இயக்குனர் அருட்தந்தை பலன பீரிஸ் அடிகளார் மற்றும் மறை மாவட்டங்களில் உள்ள இளைஞர் பணிக்கு பொறுப்பாக உள்ள அருட்தந்தையர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது கடந்த மூன்று நாட்களும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக குறித்த சம்மேளன நிகழ்வுகள் இடம்பெற்றது.

இதில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 120 தமிழ், சிங்கள இளைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# மன்னார் பிரதான பாலத்தடி சோதனை சாவடியில் சிறிய அளவிலான முருகன் சிலையுடன் மூவர் கைது

- மன்னார் நிருபர் (08-05-2023)

தொல்பொருள் என சந்தேகிக்கப்படும் பொருள் ஒன்றுடன் மூவர் ஞாயிற்றுக்கிழமை (7) மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனை சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியை சேர்ந்த இரண்டு பெண்களும் ஆண் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (7) மன்னார் பிரதான பாலத்தடி யில் உள்ள சோதனை சாவடியில் சோதனை நடவடிக்கையின் போது தொல்பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய அளவிலான முருகன் சிலை ஒன்றை தம் உடமையில் வைத்திருந்த தன் அடிப்படையில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரையும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# மன்னார் — நானாட்டானில் முறையாக அனுமதிப் பத்திரங்கள் பெற்று மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் போராட்டம்

## அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் பக்கச்சார்பாக செயல்படுவதாக குற்றச்சாட்டு





- மன்னார் நிருபர் (09-05-2023)

முறையான அனுமதிப் பத்திரங்கள் பெற்று பல வருடங்களாக மணல் அகழ்வில் கனரக வாகனம் உழவு இயந்திரம் மற்றும் மணல் ஏற்றும் கூலித் தொழிலாளர்கள் இணைந்து செவ்வாய்க்கிழமை (9) காலை நானாட்டான் பிரதேச செயலகத்தின் முன்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் பக்கச்சார்பாக செயல்படுவதாக கூறி குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் வாகனங்களையும் நானாட்டான் பிரதேச செயலகத்தின் முன் நிறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் முருங்கன் விகாராதிபதி கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முழு ஆதரவினையும் வழங்கியிருந்தார்.

இதன் போது வாகன உரிமையாளர்களும் கூலித் தொழிலாளர்களும் தெரிவிக்கையில், நானாட்டான் பிரதேசத்தில் அருவியாறு பரிகாரி கண்டல் பகுதியில் பல வருடங்களாக பிரதேச செயலகம் மற்றும் உரிய திணைக்களங்களின் அனுமதி பெற்று மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகிறோம். இதன் மூலம் கனரக வாகனங்கள், உழவு இயந்திர உரிமையாளர்கள், மணல் ஏற்றும் கூலித் தொழிலாளர்கள் என்று 400க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்வாதாரம் பெற்று வருகிறார்கள்.

மேலும் இந்த தொழிலில் ஈடுபட்டு வருபவர்களுக்கு விவசாய காணிகள் உட்பட வேறு தொழில்கள் செய்வதற்கு வளங்களும் இல்லை அத்துடன் அனைத்து வாகனங்களும் லீசிங் மூலம் கட்டுப் பணம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது.

இவ்வாறு இருக்கும்போது நானாட்டான் பிரதேசத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு மணல் அனுமதியானது மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் காதர் மஸ்தானால் நிறுத்தப்பட்டுள்ளது.

ஒரே அருவியாறு நிர்வாக ரீதியாக நானாட்டான்,முசலி பிரதேசம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. முசலி பிரதேசத்திற்கு மாத்திரம் மணல் அகழும் அனுமதி வழங்கி நானாட்டான் பிரதேச தொழிலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது ஏன் என்று கூலித் தொழிலாளர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் அவர்களின் இந்த செயற்பாடுகள் மூலம் சகோதரர்களாக வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளை தோற்றுவிக்க முனைப்பு காட்டுகிறாரா? என்னும் சந்தேகம் எழுந்துள்ளது என்றும் தெரிவித்தார்கள்.

முன்பும் மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்திக் குழு தலைவர்கள் செயற்பட்டார்கள் அவர்கள் இவ்வாறு இன, மத முரண்பாடுகளை அவர்கள் தோற்றுவிக்கவில்லை பக்கச் சார்பாகவும் நடக்க வில்லை.

எனவே இந்த மணல் ஏற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு நானாட்டான் பிரதேசத்தில் முன்பு வழங்கப்பட்ட மணல் அகழும் அனுமதி மீண்டும் வழங்க வேண்டும் என்றும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மன்னாரில் கடத்தல் சம்பவங்கள் காரணமாக மன்னார் பாடசாலைகளில் விசேட இராணுவப் பாதுகாப்பு

- மன்னார் நிருபர் (09-05-2023)


மன்னாரில் கடந்த சில நாட்களாக சிறுவர்களை இலக்கு வைத்து கடத்தல் முயற்சிகள் இடம்பெறுவதாகவும் சனிக்கிழமை (06) மற்றும் திங்கட்கிழமை (08) மக்கள் நடமாட்டம் குறைந்த பாதை வழியாக பயணித்த இரு சிறுவர்களுக்கு உணவு பொருட்களை வழங்கி கடத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டதாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த விடயம் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்வி பணிப்பாளர், மன்னார் பொலிஸார், இராணுவத்தினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையில் செவ்வாய்க்கிழமை (09) மன்னாரில் உள்ள பாடசாலைகளுக்கு விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டு இருப்பதுடன் பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


அதே நேரம் அதிகளவான பெற்றோர்களும் பிள்ளைகளுடன் பாடசாலைக்கு வருவதையும் மாணவர்கள் குழுக்களாக பயணிப்பதையும் வீதிகளில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

மேலும் குறித்த கடத்தல் முயற்சி தொடர்பில் மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் குறித்த கடத்தல் கும்பல் மற்றும் வாகனம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# சட்டமூலம்-104: தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 2021ஐ காத்தல்




## தமிழின அழிப்பின் மறுப்பையும் திரிபுபடுத்தலையும் எதிர்த்தல்


ஒன்ராறியோவின் சட்டசபையில் மே 2021இல் நிறைவேற்றப்பட்ட தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் அரசியலமைப்புக்கு முரணானதெனக் கூறி தமிழின அழிப்பு மறுப்பாளர்கள் மீண்டுமொரு முறை இச்சட்டத்தினை சட்ட சவாலுக்கு உட்படுத்தியுள்ளனர்.

சட்டமூலம்-104 ஆனது, ஸ்காபரோ - றூஜ்பார்க்கின் சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்களால் ஏப்ரல் 30, 2019இல் முன்மொழியப்பட்டு, தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் மூன்று வாசிப்புகளையும் பூர்த்திசெய்து, மே 12, 2022இல் சட்டமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சி உறுப்பினர்களினதும் ஏகோபித்த ஆதரவுடன், அரச அங்கீகாரம் பெற்ற முழுமையான சட்டமாகக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டமானது, ஒவ்வோர் ஆண்டின் மே 18ஆம் திகதிக்கு முன்னர் வரும் ஒரு வார காலத்தை தமிழின அழிப்பு நினைவு வாரமாகவும், உலகில் நடைபெற்ற ஏனைய இன அழிப்புகள் தொடர்பான விழிப்புணர்வு வாரமாகவும் பிரகடனப்படுத்துகிறது.

இச்சட்டம் இன அழிப்பு நடைபெற்றதை சட்டபூர்வமாக அங்கீகரிக்கும் அதேவேளையில், இன அழிப்புக்குள்ளாகிய ஓர் இனம் தலைமுறைகளாக எதிர்கொள்ளும் உளவியல் பாதிப்புகளுக்கு நிவாரணம் பெறுவதற்கும், எதிர்காலத்தில் இதுபோன்ற இன அழிப்புகள் நடைபெறாமல் தடுக்கும் விழிப்புணர்வு செயற்பாடுளுக்கும் முன்னுரிமை வழங்குகிறது. எனவேதான், உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் அனைவரதும் பேராதரவைப் பெற்ற இச்சட்டத்துக்கு ஆரம்பம் முதலே அந்நிய நாடாகிய சிறிலங்காவின் தலையீடும் எதிர்ப்பும் இருந்துவருகிறது.

தமிழர்களை இன அழிப்புக்கு உள்ளாக்கியதைத் தொடர்ந்து மறுத்தும் உண்மையினைத் திரிபுபடுத்தியும் கூறிவரும் இன அழிப்பாளர்கள், இச்சட்டத்தை எதிர்த்து வழக்குத் தொடுத்ததுடன், சிறிலங்காவின் வெளிநாட்டு அமைச்சரும் கனடிய தூதரைச் சந்தித்து சிறிலங்காவின் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

தொடுக்கப்பட்ட வழக்கில் ஜூன் 28, 2022இல் தீர்ப்பு வழங்கிய நீதிபதி அக்பர் அலி அவர்கள், மேற்படி சட்டம் சட்டரீதியானது என உறுதிப்படுத்தி வழக்கைத் தள்ளுபடி செய்திருந்த போதிலும், தமிழின அழிப்பாளர்கள் இத்தீர்ப்பினை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர்.




எனவேதான், வரலாற்று ரீதியான இச்சட்டத்தைப் பாதுகாப்பதற்கென கனடிய தமிழர் தேசிய அவை, கனடா தமிழ் இளையோர் ஒன்றியம், கனடாத் தமிழ்க் கல்லூரி உட்பட்ட 60 தமிழர் அமைப்புகள் இவ்வழக்கில் இடையீடர்களாகத் தம்மையும் இணைத்துக்கொண்டு தமிழர் தரப்பு வாதங்களை முன்வைப்பதற்கு "கோல்ட்பிளாட் பாட்னர்ஸ்" எனும் சட்ட நிறுவனத்தை அமர்த்தியுள்ளன. இதற்கான நிதியாக மே 31ஆம் திகதிக்குள் 100,000 டொலர்களைத் திரட்டுவதற்கு பின்வரும் இணையப்பக்கம் (https://www.gofundme.com/f/defend-bill-104) உருவாக்கப்பட்டுள்ளது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இச்சட்டத்தைப் பாதுகாப்பதற்கான எமது பங்களிப்பை நல்குவோம். உங்கள் ஆதரவுக்கு நன்றி.


# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இந்தியா செய்திகள் India News

# "மாணவர்கள் நீட் தேர்வுக்கு தயாராக வேண்டும்"

## முதலிடம் பிடித்த மாணவர்களுடன் தமிழக ஆளுநர் ரவி உரையாடல்!





மருத்துவம் படிக்க ஆசை இருப்பவர்கள் நீட் தேர்வுக்கு தயாராக வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவர்கள் உடன் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்துரையாடினார். இதில் திண்டுக்கல் மாணவி நந்தினி மற்றும் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த திருநங்கை ஸ்ரேயா உள்ளிட்ட 11 மாணவர்கள் பங்கேற்றனர். அதேபோல் சென்னை மாநகராட்சி பள்ளியில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து, உயர்கல்வி படிப்புகள் தொடர்பாக ஆலோசனை வழங்கி உரையாடினார். உடன் கல்வித்துறை செயலாளர் கார்த்திகேயன், அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மாணவர்களிடம் பேசும் போது, "மாணவர்களின் இலக்கு முதன்மையாக இருக்க வேண்டும். உயர்கல்வியில் இலக்கை அடைய வேண்டும் என்பதில் மாணவர்களுக்கு தெளிவு இருக்க வேண்டும். மேலும் +2 தேர்வில் வெற்றி பெற்றவர்கள் இன்னும் பெரும் பயணம் செல்ல வேண்டியதை கவனத்தில் கொள்ள வேண்டும். மருத்துவம் படிக்க ஆசை இருப்பவர்கள் நீட் தேர்வுக்கு தயாராக வேண்டும். நீட் தேர்வில் வெற்றி பெற்றால் மருத்துவம் படிக்க முடியும். அதற்கான கட்டணம் குறைவு தான். தனியார் கல்லூரியில் கட்டணம் அதிகமாக இருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். தொலைபேசி பயன்படுத்துவதில் மாணவர்களுக்கு கட்டுப்பாடு இருக்க வேண்டும். படிப்பு தொடர்பானதில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்" என தெரிவித்தார்.

"சட்டம் படிக்க விருப்பமாக இருப்பவர்கள் சிறப்பான சட்ட கல்லூரியை தேர்வு செய்ய வேண்டும். ஐ.ஏ.எஸ் தேர்வுக்கு தயாரக நினைக்கும் மாணவர்கள் மற்ற துறையில் வெற்றி பெறும் அளவுக்கு சேர்ந்தே நமது தேர்வு இருக்க வேண்டும். மாணவர்கள் 5 ஆண்டுகளில் கடின உழைப்பில் மாணவர்களுக்கு உதவ தாம் தயாராக இருக்கிறேன்" என ஆளுநர் தெரிவித்தார். பின்னர் மாணவர்களுடன் குழு படம் எடுத்துக்கொண்டு நினைவு பரிசு கொடுத்து வாழ்த்தினார்.

# தமிழ்நாடு அரசின் கலைப் பண்பாட்டுத்துறையின் இயக்குனர் சே. ரா. காந்தி அவர்களை நடனக் கலைஞர் சாகிர் உசைன் சகிதம் சந்தித்த கனடா "உதயன்" லோகேந்திரலிங்கம்



தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கிய வண்ணம் தமிழ் மொழி. தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் மொழியை தமிழர்கள் வாழும் நாடுகளில் கற்பிக்கும் திட்டத்திற்கு பொறுப்பானவரும் தமிழ் மொழி ஆர்வலருமான கலைப் பண்பாட்டுத்துறையின் இயக்குனர் சே.ரா. காந்தி அவர்களை சந்திக்கும் வாய்ப்பு எமது கனடா உதயன் குழுவினருக்கு சில நாட்களுக்கு முன்னர் கிடைத்தது.

தமிழக அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இசை நடனக் கல்லூரிகளின் கௌரவ ஆலோசகரும் நடனக் கலைஞருமான சாகிர் உசைன் அவர்கள் சகிதம் சந்தித்த கனடா "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களுடன் உதயன் குழுவினரும் இருந்தனர்.

இந்த சந்திப்பின் போது பல பயனுள்ள விடயங்கள் உரையாடப்பெற்றன. குறிப்பாக கனடா போன்ற தமிழர்கள் அதிகளவில் வாழும் நாடுகளில் தமிழ் மொழியை நமது சிறார்களுக்கு கற்பிக்கும் சீரிய பணியை தமிழ்நாடு அரசின் கலைப் பண்பாட்டுத்துறையின் இயக்குனர் சே.ரா. காந்தி அவர்களிடம் தமிழ் நாடு அரசு கையளித்துள்ளது எனவும் வெளிநாடுகளில் உள்ள தமிழாசிரியர்களும் இதனால் பயனடையால் என்றும் தமிழ் மொழி கற்பித்தல் வகுப்பில் கற்கும் மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் சான்றிதழ் வழங்கப்பெறும் என்றும் தமிழ்நாடு அரசின் கலைப் பண்பாட்டுத்துறையின் இயக்குனர் சே.ரா. காந்தி அவர்கள் கனடா உதயன் பிரதம ஆசிரியரிடம் தெரிவித்தார்.




அதனைத் தொடர்ந்து அதே கட்டடத்தில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் கனடா உதயன் குழுவினரை வரவேற்று உபசரித்தார் தமிழக அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இசை நடனக் கல்லூரிகளின் கௌரவ ஆலோசகரும் நடனக் கலைஞருமான சாகிர் உசைன் அவர்கள்.

**- செய்தியும் படங்களும்: பிரகாஸ்** - Chennai

# கேரளாவில் மருத்துவ பரிசோதனைக்கு வந்த கைதியால் பெண் மருத்துவர் குத்திக் கொலை



கேரள மாநிலத்தில் இளம் பெண் பயிற்சி மருத்துவர் ஒருவர் மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அழைத்துவரப்பட்ட கைதியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொல்லம் மாவட்டம் கொட்டாரக்கரா தாலுகா மருத்துவமனையில் பயிற்சி மருத்துவராக வேலை பார்த்தவர் வந்தனா தாஸ் (வயது 23). மே 10 அதிகாலையில் இந்த மருத்துவமனைக்கு போலீஸாரால் மருத்துவப் பரிசோதனைக்காக அழைத்துவரப்பட்ட சந்தீப் என்ற கைதி கத்திரிக்கோலால் வந்தனா தாஸை தாக்கியுள்ளார். எதிர்பாராத இந்தத் தாக்குதலில் இருந்து தப்பிக்க வழிதெரியாத பயிற்சி மருத்துவர் தாக்குதலில் படுகாயமடைந்தார்.

அதனைத் தொடர்ந்து அவர் திருவனந்தபுரத்தில் உள்ள கிம்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கழுத்தில் ஏற்பட்டிருந்த ஆழமான காயம் அவரது உயிரிழப்புக்கு காரணமானதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இந்தச் சம்பவம் புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் நடந்துள்ளது. இதுகுறித்து வெளியான தகவலின்படி, பரிசோதனைக்கு அழைத்துவரப்பட்ட சந்தீப் முதலில் தனது உறவினரைத் தாக்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து அருகில் இருந்தவர்களையும் தாக்கியுள்ளார். அப்போது பயிற்சி மருத்துவரை கழுத்து மார்பு என கடுமையாக குத்தி காயப்படுத்தியுள்ளார். இந்த தாக்குதலில் சந்தீப் உறவினர், போலீஸார் உட்பட நான்குபேர் காயமடைந்தனர் என்று கூறப்படுகிறது.

பயிற்சி மருத்துவரைத் தாக்கிய சந்தீப் ஒரு ஆசிரியர். குடிக்கு அடிமையான அவர் தற்போது பணியிடை நீக்கத்தில் உள்ளார். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுடன் அடிக்கடி சண்டையில் ஈடுபடும் சந்தீப் சம்பவத்தன்று உறவினர் ஒருவருடன் தகராறில் ஈடுபட்டு போலீஸாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து கிம்ஸ் மருத்துவமனையில் இருந்த பயிற்சி மருத்துவரின் உடலை மாநில ஆளுநர் ஆரிப் முகம்மது கான், முதல்வர் பினராயி விஜயன் ஆகியோர் சென்று பார்த்தனர்.

இந்தநிலையில், இச்சம்பவம் குறித்து கேரளா சுகாதாரத்துறை அமைச்சர் வீனா ஜார்ஜ் தெரிவித்துள்ள கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கத்திக்குத்தால் பெண் மருத்துவர் உயிரிழந்ததற்கு இரங்கல் தெரிவித்துள்ள அமைச்சர், மருத்துவப் பரிசோதனைக்காக அழைத்துவரப்பட்ட குற்றம்சாட்டப்பட்ட ஒருவரால் பெண் மருத்துவர் உயிரிழந்த சம்பவம் துரதிர்ஷ்டவசமானது. அந்த மருத்துவமனையில் ஒரு போலீஸ் சோதனைச் சாவடி உள்ளது. சம்பவத்தின் போது மருத்துவமனையில் பல சுகாதார அதிகாரிகளும், தலைமை மருத்துவ அதிகாரியும் இருந்துள்ளனர். அனுபவமற்ற அந்த இளம் மருத்துவர் குற்றம்சாட்டப்பட்டவரைப் பார்த்து பீதியடைந்துள்ளாதாக கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அவர் தாக்கப்பட்டிருக்கிறார்" என்று கூறியுள்ளார்.

அமைச்சரின் இந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சரின் கருத்துக்கு பதில் அளித்துள்ள எம்எல்ஏ கணேஷ் குமார், "குடிக்கு அடிமையான ஒருவரின் தாக்குதலில் இருந்து எவ்வாறு தற்காத்துக்கொள்ள வேண்டும். கத்தியால் குத்தியவர் மருத்துவரைக் கொடூரமாக தாக்கியுள்ளார்" என்று கூறியுள்ளார்.

கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த வந்தனா தாஸ், அஜீசியா மருத்துவக்கல்லூரியில் மருவத்துவம் பயின்றிருக்கிறார். வந்தனா தாஸ் ஒரு மாதம் கொட்டாக்கரா தாலுகா மருத்துவமனையில் பயிற்சி மருத்துவராக பணியமர்த்தப்பட்டுள்ளார். இரவுப் பணியில் இருந்த நிலையில் இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்தக் கொலை சம்பவத்தைக் கண்டித்து மாநிலம் முழுவதும் பயிற்சி மருத்துவர்களும், சுகாதார அதிகாரிகளும் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

# தலைமன்னார் ராமேஸ்வரம் இடையில் கப்பல் சேவையை விரைவு படுத்தக் கோரி மன்னார் அரசாங்க அதிபரிடம் ஆவணக் காணொளி கையளிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News



## ஜனாதிபதி, யாழ் இந்திய துணைத் தூதர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கும் அரச அதிபர் ஊடாக கையளிப்பு

**- மன்னார் நிருபர் (8-05-2023)**

மன்னார் ரோட்டரி கழகத்தின் அனுசரணையில் மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகனின் இலக்கிய நூல்களின் ஆய்வில் தலை மன்னார் ராமேஸ்வரம் இடையில் கப்பல் போக்குவரத்தை விரைவுபடுத்த கோரியும் பண்டைய காலத்தில் மன்னார் மாவட்டம் எவ்வாறு சிறப்புடன் இருந்தது என்பதை இலக்கிய நூல்கள் மூலம் ஆய்வு செய்தும் உருவாக்கப்பட்ட காணொளி அடங்கிய இருவெட்டு திங்கட்கிழமை (8) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. அ.ஸ்ரான்லி டிமெல் அவர்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ் இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ ஜீவன் தியாகராஜா ஆகியோருக்கும் வழங்கும் வகையில் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலக்கிய நூல்களின் பிரகாரம் ஆதிகாலத்தில் பொருளாதாரத்திலும் வாழ்வியலிலும் மிகச் சிறப்பாக விளங்கிய மன்னார் மாவட்டம் தற்போது பொருளாதாரம் வீழ்ச்சியுற்று பின்தங்கிய மாவட்டமாக காணப்படுவதற்கு காரணங்கள் என்ன என்பதை ஆய்வு செய்து அவற்றை காணொளியாக தொகுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பண்டைய காலத்தில் துறைமுக செயல்பாடு, வியாபார நடவடிக்கைகள் மூலம் சிறப்பான பொருளாதாரத்தில் இருந்த மன்னார் மாவட்டம் துறைமுக செயல்பாடுகள் நிறுத்தப் பட்டதன் பின் இவ்வாறு பொருளாதாரத்தில் பின்னடைவை சந்தித்துள்ளது என்ற உண்மை கண்டறியப்பட்டு ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அதே இலக்கிய நூல்களின் ஆதாரத்துடன் மன்னார் கட்டுக்கரை பகுதி பழங்காலத்தில் பாரிய வரலாற்று வியாபார பண்பாட்டுப் பெருநகரம் பெருநகரமாக இருந்துள்ளது என்பதும் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த காணொளிக்கு வலுச் சேர்க்கும் வகையில் மன்னார் மாவட்டம் பண்டைய காலத்தில் இருந்ததைப் போன்று பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று வியாபார நகரமாக மாறுவதற்காக மீண்டும் தலைமன்னார், ராமேஸ்வரம் இடையில் முன்பு இருந்ததைப் போன்று கப்பல் சேவை ஒன்றை விரைவாக ஆரம்பித்து எதிர்காலத்தில் வலுவான துறைமுகம் மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டால் மன்னார் மாவட்டம் பொருளாதாரத்திலும் வாழ்வியலிலும் உணர்ச்சியடையும் என்று இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் நேவிஸ் மொராய்ஸ், முன்னாள் மன்னார் ரோட்டரி கழகத் தலைவர் ஜெரோம் பத்திநாதன், மன்னார் பொறியியலாளர். றொபேட் பீரிஸ், பல்துறை வித்தகர் நாகேஷ் உருத்திரமூர்த்தி, முன்பு கப்பல் சேவை நடை பெற்ற போது அங்கு தொழிலாளியாக செயற்பட்ட பகுர்தீன், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் யசோதரன், பெண்கள் நல செயற்பாட்டாளர் மஷாஹிரா மன்சூர், மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களும் தங்களது கோரிக்கைகளை கானொளிகளாக பதிவு செய்துள்ளார்கள்.

மேலும் மன்னார் மாவட்டத்தை பொறுத்த மட்டில் சிறந்த தொழில் முயற்சியாளர்களும் உற்பத்தியாளர்களும் காணப்படுகிறார்கள். அவர்களுக்கான சந்தை வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் தொழில் முயற்சிகளை கைவிட் வேறு வேலைகளில் கவனம் செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தங்களிடன் உற்பத்தி செய்யப்படும் பலவிதமான பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் போக்குவரத்து செலவை காரணம் காட்டி குறைந்த விலைகளுக்கு தம்மிடம் இருந்து பொருட்களைப் பெற்று அதிக லாபம் சம்பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே எமது உற்பத்திப் பொருட்களை நாங்கள் நிர்ணயிக்கும் விலைக்கு விற்பனை செய்வதற்கு தலைமன்னார் ராமேஸ்வரத்திற்கு இடையிலான கப்பல் சேவை மிகவும் அவசியம் என்றும் உற்பத்தியாளர்களும் தொழில் முயற்சியாளர்களும் கருத்து தெரிவித்தார்கள்.



# மன்னார் — வங்காலை கடற்பரப்பில் டைனமைட் வெடி பொருட்களுடன் கைது செய்யப்பட்ட 07 மீனவருக்கும் விளக்கமறியல்

**- மன்னார் நிருபர் (09-05-2023)**

மன்னார் - வங்காலை கடற்பரப்பில் வைத்து டைனமைட்வெடி பொருட்களுடன் கைது செய்யப்பட்ட மன்னார் பகுதியைச் சேர்ந்த 07 மீனவர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் செவ்வாய்க்கிழமை (9) உத்தரவிட்டார்.

மன்னார் வங்காலை கடற்பரப்பில் வைத்து டைனமைட் வெடி பொருட்களுடன் மன்னாரைச் சேர்ந்த 7 மீனவர்களை திங்கட்கிழமை (8) வங்காலை பிரதேச கடற்படை கைது செய்து மன்னார் மாவட்ட கடற்தொழில் பரிசோதகர் ஊடாக வங்காலை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன் போது மீனவர்களிடம் இருந்து இருந்து டைனமைட் வெடி பொருட்களும் மீட்கப்பட்டிருந்தது.

மீன்கள் அற்ற நிலையில் வெடி பொருட்கள் மட்டும் உடமையில் இருந்ததால் வங்காலை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வங்காலை பொலிஸார் விசாரணையின் பின் குறித்த மீனவர்களை செவ்வாய்க்கிழமை (9) மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.



இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.





# மன்னார் நானாட்டானில் கத்திமுனையில் ஓய்வு பெற்ற வைத்தியரிடமிருந்து பெருந்தொகை பணம் நகை கொள்ளை

**- மன்னார் நிருபர் (08-05-2023)**

மன்னார் - நானாட்டான் பிரதேசத்தில் ஓய்வு பெற்ற வைத்தியர் ஒருவரின் தனியார் கிளினிக்கிற்கு ஞாயிற்றுக்கிழமை (7) இரவு 9 மணியளவில் புகுந்த கொள்ளையர்கள் கத்தியை காட்டி மிரட்டி சுமார் 5.லட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்த சம்பவமானது நானாட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த வைத்தியரின் தனியார் கிளினிக்கில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஞாயிற்றுக்கிழமை (7) இரவு 9.மணியின் பின் கிளினிக் வளாகத்தினுள் நுழைந்த இரண்டு பேர் சிங்களத்திலும் தமிழிலும் பேசிக் கொண்டு குறித்த வைத்தியரிடம் கத்தியை காட்டி மிரட்டி உள்ளனர்.

இதன் போது சுமார் 5.லட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகை போன்றவற்றை அபகரித்துள்ளனர்.

மேலும் குறித்த வீட்டில் இருந்த பெண்களின் நகை போன்றவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்கள்.

இதன் போது வைத்தியரின் மூக்குக் கண்ணாடி உடைந்ததில் வைத்தியருக்கு முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக திங்கட்கிழமை (8) காலை பாதிக்கப்பட்ட வைத்தியர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை நானாட்டான் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பல திருட்டு சம்பவங்கள் நடைபெறுவதாக பொதுமக்கள் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டது.

குறித்த வைத்தியர் நீண்ட காலம் வைத்தியராக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைப்பு

**- மன்னார் நிருபர் (11-05-2023)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் மூன்றாவது நாளாக வியாழக்கிழமை (11) காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை முன்பாக இடம் பெற்றது.

இதன் பொழுது மன்னார் மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள்,வீடுகளுக்கு சென்று அரிசி விறகு என்பன திரட்டப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி ஆக்கப் பெற்று பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.



இனப்படுகொலை இடம் பெற்ற வேலை மக்களின் அடிப்படை ஆதாரமாக காணப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பான துண்டு பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

அதிகளவான மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து கஞ்சியை அருந்தி சென்றனர்.

# நினைவு கூர்தல் என்றால் என்ன?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடி நின்று தீச்சுடரை ஏற்றி அழுவது மட்டும் நினைவு கூர்தல் அல்ல. தீச்சுடரின் முன்னே நின்று உணர்ச்சிகரமான ஒரு சூழலில் பிரகடனங்களை வாசிப்பது மட்டும் நினைவு கூர்தல் அல்ல. இவை இரண்டையும் விட அது ஆழமானது.

ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் தொகையாகக் கூடி துக்கத்தை வெளிப்படுத்தும்போது, ஒருணர்ச்சிப் புள்ளியில் உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ச் சமூகம் ஒன்று திரள்கிறது. ஆனால் அதற்கும் அப்பால் கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்ற வேண்டும். அரசியல் ஆக்க சக்தியாக மாற்றப்படாத கூட்டுத் துக்கம் காலகதியில் வடிந்து போய்விடும்.காலம் எல்லாக் காயங்களையும் குணப்படுத்தும். எனவே காலகதியில் துக்கத்தின் கூர் மழுங்கிவிடும். அதனால் ஒரு சமூகத்தின் கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றும் செயற்பாடுகளை பரந்துபட்ட அளவில் பொருத்தமான விதங்களில் நிறுவனமயப்படுத்த வேண்டும். அதைத் தனிப்பட்ட மக்கள் பிரதிநிதியின் வாக்கு வங்கியாகவோ, அல்லது ஒரு கட்சியின் வாக்கு வங்கியாகவோ, உருமாற்றம் செய்யும் அரசியல்வாதிகளால் ஒரு கூட்டுத் துக்கத்தை கூட்டு அரசியல் ஆக்கசக்தியாக மாற்ற முடியாது. கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்களின் கூட்டுத் துக்கம் அவ்வாறு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றப்படாமல் அப்படியே வடிந்து போய் விடுகிறது.

எனவே ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுத் துக்கத்தை எப்படி கூட்டு ஆக்க சக்தியாக அரசியல் ஆக்க சக்தியாக மாற்றலாம் என்று தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டும். அதுதான் மெய்யான பொருளில் மே18ஐ நினைவு கூர்வதாக அமையும். இது முதலாவது.

இரண்டாவது, இறுதிக்கட்டப் போரில் சிக்கிச் சின்னாபின்னமாகிய குடும்பங்களுக்கு உதவிசெய்வது. பதினான்கு ஆண்டுகளின் பின்னரும் போரின் விளைவுகளில் இருந்து எழ முடியாமல் தத்தளிக்கும் குடும்பங்கள் பல உண்டு. போரில் குடும்பத் தலைவரை, அல்லது குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த நபரை, அல்லது உழைக்கும் நபரை, அல்லது வருமான வழியை இழந்த குடும்பங்கள் உண்டு.

போரில் ஏற்பட்ட சொத்திழப்பிலிருந்து மீண்டெழாத குடும்பங்கள் பல உண்டு. அவர்களுக்கெல்லாம் உதவி வேண்டும். தியாகிகளின் வீடுகளில் அல்லது முன்னாள் இயக்கத்தவர்களின் வீடுகளில் அடுப்பெரியாதபோது முள்ளிவாய்க்காலில் சுடரை ஏற்றுவதில் எந்தப் பொருளும் இல்லை. எனவே போரால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எல்லாருமாகச் சேர்ந்து உதவ வேண்டும்.

அது தானதர்மம் அல்ல, கருணைச் செயலும் அல்ல. மாறாக அது ஒரு தேசியக் கடமை. தேசத்தைக் கட்டியெழுப்புவதின் ஒரு பகுதி. இடிந்துபோன குடும்பங்களை, நொறுங்கிப் போன உள்ளங்களை மீளக்கட்டி எழுப்புவது. இறந்தவர்களின் ஆத்மா அப்பொழுதுதான் சாந்தி அடையும்.

மூன்றாவது, முன்னாள் இயக்கத்தவர்களை அவர்களுடைய நிலையிலிருந்து விளங்கிக் கொள்வது. இலங்கைத் தீவில் அதிகம் பாதிப்படையக்கூடிய (most vulnerable) ஒருதரப்பு எதுவென்றால் முன்னாள் இயக்கத்தவர்கள்தான். புனர்வாழ்வு ஒரு தண்டனை அல்ல என்பதே கடந்த 14 ஆண்டு கால நடைமுறை ஆகும். அதனால் புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் சந்தேகிக்கப்படவும் கைது செய்யப்படவும் தண்டிக்கப்படவும் முடியும். அதாவது ஒரே குற்றத்திற்காக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் தண்டிக்கப்படுவது. இந்த அடிப்படையில் கூறின் இலங்கை தீவில் அதிகம் ஆபத்துக்குள்ளாக கூடிய ஒரு தரப்பாக அவர்கள் காணப்படுகிறார்கள். போராட்டத்தில் இணைந்து கல்வியை இழந்தவர்கள், கை, கால்களை, உறுப்புகளை இழந்தவர்கள், சந்தோஷத்தை இழந்தவர்கள், இப்பொழுது உதிரிகளாக நிற்கிறார்கள். அவர்களுக்கென்று அமைப்புகள் இப்பொழுது உருவாக்கப்பட்டாலும்கூட, அவர்கள் இப்பொழுதும் சமூகத்தில் மிகவும் பாதிப்படைந்த ஒரு தரப்பாகவே காணப்படுகிறார்கள்.

அவர்களைத் தடுப்பில் வைத்திருந்த தரப்புக்கள் அவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னரும் அவர்களுடன் தொடர்பைப் பேணுவார்கள். அவ்வாறு பேணுவதன் மூலம் அவர்களுடைய நடமாட்டங்களை அவர்கள் கண்காணிக்கலாம். அதோடு, எந்த மக்களுக்காக அவர்கள் போராடினார்களோ, அந்த மக்களே அவர்களைப் புறக்கணிக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தலாம். அதாவது அரசு தரப்புடன் தொடர்புகளை வைத்திருப்பவர்கள் என்று கூறி சொந்த மக்களே அவர்களை அவமதிக்கும் ஒரு நிலையை ஏற்படுத்துவது. அதன்மூலம் முன்னாள் இயக்கத்தவர்கள் மட்டும் விரக்தியுறப் போவதில்லை, மாறாக இனி ஒரு காலம் இந்த சமூகத்துக்காக போராட யாருமே முன்வர மாட்டார்கள். ஏனென்றால் உயிரைக் கொடுக்கத் தயாராக இருந்தவர்களுக்கே இதுதான் மதிப்பு என்றால் இனி யார்தான் இந்த சமூகத்துக்காக போராட முன் வருவார்கள்?

முன்நாள் இயக்கத்தவர்கள் பலர் தமிழ்த் தேசியம் என்று கூறிக் கொள்ளும் மூன்று கட்சிகளிலும் இணைந்து தேர்தல்களில் போட்டியிட்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவர்கூட பெறுமதியான வெற்றியைப் பெறவில்லை. இந்த விடயத்தில் முன்னாள் இயக்கத்தவர்களின் கட்சியை புலனாய்வுத் துறையோடு தொடர்புடையவர்கள் என்று விமர்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் இருந்து தேர்தல் கேட்டவர்களும் கூட வெற்றி பெறவில்லை. நாளைக்கு இந்த முன்னாள் இயக்கத்தவர்களின் பிள்ளைகள் தமது பெற்றோரை பார்த்து "நீ செய்த தியாகத்துக்கு இந்தச் சமூகம் உனக்கு ஒரு வட்டாரத்தில் வெல்லத் தேவையான வாக்குகளைக்கூட வழங்கவில்லையே?" என்று கேட்டால் அந்த முன்னாள் இயக்கத்தவர் தன் பிள்ளைக்கு என்ன பதிலைச் சொல்வார்?

எனவே இறந்தவர்களை நினைவுகூர்வது என்பது அந்த யுத்த களத்தில் உயிரைக் கொடுத்து போராடத் தயாராக இருந்த முன்னாள் இயக்கத்தவர்களை அவர்களுடைய நிலையில் இருந்து விளங்கிக் கொள்வதுதான். குறைந்தபட்சம் அவர்களை அவமதிக்காமலாவது விடுவது.

நாலாவது, ஒரு தேசமாக ஐக்கியப்படுவது. இறுதிக்கட்டப் போரில் மட்டுமல்ல ஈழப்போரில் இதுவரையிலும் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன அனைவருமே ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக தங்கள் உயிர்களை கொடுத்தவர்கள்தான். எனவே அவர்களுக்குச் செய்யும் உண்மையான மரியாதை எனப்படுவது, அந்தத் தேசத்தைக் கட்டியெழுப்புவதுதான். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதில் பொருத்தமான பெரிய வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்களா?


கிழக்கில், கிழக்கு மையக் கட்சி வாக்கு பலத்துடன் காணப்படுகிறது. தமிழ்ப் பகுதிகளில் மத முரண்பாடுகள் நிறுவனமயப்பட்டு வருகின்றன. சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட சமூகங்களின் அச்சங்களைப் போக்கும் வேலைத்திட்டங்கள் தமிழ்த் தேசியவாதத்தைப் பேசும் சக்திகள் மத்தியில் பலமாக இல்லை. இதை இன்னும் ஆழமாகச் சொன்னால், தேசிய விடுதலை என்பது சமூக விடுதலையையும் உள்ளடக்கியதுதான் என்ற விளக்கம் தமிழ்த் தேசியவாத சக்திகள் பலரிடம் இல்லை. இவ்வாறாக, பிராந்தியமாக, சாதியாக, சமயமாகப் பிரிந்து காணப்படும் ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாகக் கட்டி எழுப்பவல்ல தலைமைகளும் இல்லை, கட்டமைப்புகளும் இல்லை. எல்லாக் கட்சிகளின் பெயர்களிலும் தேசியம் என்ற வார்த்தை உண்டு. ஆனால் அதன் பொருள் எந்த கட்சிக்கும் விளங்கியிருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த 14 ஆண்டுகளில் தமிழ் மக்கள் ஒப்பீட்டளவில் ஒரு தேசமாகத் திரளும் சந்தர்ப்பங்கள் குறிப்பாக மூன்றுதான். ஒன்று, ராஜபக்சக்களுக்கு எதிராக வாக்களிக்கும் பொழுது. இரண்டாவது, முள்ளிவாய்க்கால் நினைவு கூர்தல். மூன்றாவது, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை போன்ற பேரணிகளின்போது.

இதில் ராஜபக்சங்களுக்கு எதிராக வாக்களிப்பது என்பது கடந்த 14 ஆண்டுகளிலும் ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலின் போதும் காணப்பட்ட ஒரு பொதுப் போக்கு ஆகும். ஆனால் அந்த ராஜபக்சகளோடு கூட்டிச்சேரும் கிழக்கு மையக் கட்சியானது, கிழக்கில் தனக்கென்று வாக்கு வங்கியைப் பெற்றிருப்பதானது, தமிழ் மக்கள் தேசமாகத் திரள்வதிலிலுள்ள சவால்களைக் காட்டுகின்றது.

இதுதவிர நினைவு கூர்தலின் போதும் குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவு நாளின்போது தமிழ் மக்கள், கட்சிபேதம், இயக்கபேதம் கடந்து ஒன்றாகத் திரள்வதுண்டு. தாயகத்தில் மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் உலகத் தமிழ்ப் பரப்பிலும் தமிழ் மக்களை ஓர் உணர்ச்சிப் புள்ளியில் இணைக்கும் நாளாக மே 18 காணப்படுகின்றது. தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரளும் மிக அரிதான ஒரு சந்தர்ப்பம் நினைவு கூர்தல் எனலாம். இறந்தவர்களின் பெயராலாவது தமிழ் மக்கள் அவ்வாறு ஒப்பீட்டளவில் பெரிய திரளாகக் கூடுவதை கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் ஊக்குவிக்க வேண்டும். அதைச் சிதைக்கக் கூடாது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள உளநல மருத்துவராகிய சிவதாஸ் கூறுவது போல நினைவு கூர்தல் என்பது காயங்களைக் குணப்படுத்தும் ஒரு நிகழ்ச்சிதான். காயங்களைக் கிளறும் ஒரு நிகழ்ச்சி அல்ல.

தமிழ்க் கட்சிகளை இப்போதைக்கு இனியாரும் ஒன்று சேர்க்க முடியாது. அவ்வாறு சேர்ந்தாலும் அதிசயங்கள் அற்புதங்கள் எதுவும் நடக்கப் போவதில்லை. கட்சிகள் எக்கேடும் கெட்டுப் போகட்டும். ஆனால் தமிழ் மக்கள் இயல்பாக ஒரு தேசமாகத் திரளக்கூடிய தருணங்களையாவது குழப்பாமல் இருக்க வேண்டும். இறந்தவர்களுக்கு இப்பொழுது கட்சிகளும், செயற்பாட்டாளர்களும், பொதுக் கட்டமைப்புகளும், பல்கலைக்கழக மாணவர்களும் செய்யக்கூடிய ஆகப்பெரிய அஞ்சலி அதுவாகத்தான் இருக்கும்.



# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*


# துர்க்கேஸ்வரத்தில் மஹாகும்பாபிஷேகம்

## 18-06-2023 ஞாயிறு காலை 6 மணி

## விஷேட குருமார்கள் வருகை

## மஹாயந்திர பூஜை ஆரம்பமாகிவிட்டது

**நீண்ட காலமாக பக்தர்களால் எதிர்பார்க்கப்பட்ட துர்க்கேஸ்வரம் ஆலய மஹாகும்பாபிஷேகம், 48 நாள் யந்திரபூஜையுடனும், 12 நாள் கிரியாஹோமங்களுடனும், 12 கால யாகபூஜையுடனும் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவிழாவாக நடைபெறவுள்ளது. முதன் முதலாக இவ்வளவு சிறப்புடன் நிகழும் மகத்துவத்தை இந்த மஹாகும்பாபிஷேகம் பெறவுள்ளது. தமிழ்நாடு பிள்ளையார்பட்டி, டாக்டர் சிவஸ்ரீ. கி. பிச்சைக்குருக்கள் சர்வசாதகராக வீற்றிருந்து இந்த மஹாகும்பாபிஷேகத்தை நிகழ்த்தவுள்ளார். பல நாடுகளில் இருந்தும் குருமார்கள் வருகை தருகின்றனர்.**



துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யந்திர பூஜைக் காட்சி

அஷ்ட ஐஸ்வர்யங்களும் கொழித்து விளங்கும் தேசமாகிய கனடாவில், பல்லின மக்கள் அமைதியும் சமாதானமும் ஒற்றுமையும் ஒருங்குசேர வாழும ஒன்ராரியோ மாகாணத்தில், சைவசமயத்தை தம் வாழ்க்கையின் நெறிமுறையாக வரித்துக் கொண்ட பல லட்சம் இந்துக்கள் வாழும் ரொறன்ரோ மாநகரில் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் திருத்தலம் ”**துர்க்கேஸ்வரம்**” என அழைக்கப்பெறும் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில். இலங்கை இந்தியா தவிர்ந்த பிறிதொரு நாட்டில் முதன்முதலாக 33 ஹோமகுண்ட உத்தமயாக மஹாகும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு நிகழப்பெற்ற சிறப்புற்று, அதனைத் தொடர்ந்து எண்ணற்ற ஹோமங்களாலும், பூஜைகளாலும், உற்சவங்களாலும், விழாக்களாலும் அருளுருவேற்றப் பெற்று, பல லட்சம் பக்தர்களின் மனங்களில் வீற்றிருந்து, தனது அபார வல்லமையினாலும் அருட்சக்தியினாலும் அவர்களின் குறைகளை அறிந்து தீர்த்து வைக்கும் மகத்துவம் பெற்று, அருள் வழங்கிவரும் பேரருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி அம்பாளின் திருக்கோவில், புதிதாய் அமைக்கப் பெற்ற பஞ்சதள ராஜகோபுரத்துடன் புனர்நிர்மாணம் செய்யப்பெற்று பெரும்சாந்தி காண்கிறது.

மஹாகும்பாபிஷேகத்தின் முதல் அம்சமாக 48 நாள் யந்திர பூஜை கடந்த வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகிவிட்டது. தமிழகத்தில் இருந்து பிரசித்தி பெற்ற அருட்தலங்களின் குருமார்கள் வந்தவண்ணம் உள்ளனர். மிகப் பெரும் அருட்சிறப்பு மிக்க மஹாகும்பிஷேகமாக துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

**யந்திர பூஜை**
**21-4-2023 முதல் 7-6-2023 வரை**

**பூர்வாங்க கிரியைகள்**
**7-6-2023 முதல் 12-6-2023 வரை**
(மஹாகணபதி ஹோமம், நவதுர்க்கா ஹோமம், மஹாஸ்கந்த ஹோமம், மஹாலட்சுமி ஹோமம், ஸ்ரீவித்யா ஹோமம், பிரத்தியங்கராதேவி ஹோமம், நவக்கிரக ஹோமம முதலியன)

**யாகபூஜை**
**12 காலங்கள்**
**12-6-2023 முதல் 18-6-2023 வரை**

**தீபஸ்தாபனம்**
**15-06-2023 வியாழன்**

**எண்ணெய்க்காப்பு**
**16-06-2023 வெள்ளி**
**17-06-2023 சனி**

**மஹாகும்பாபிஷேகம்**
**18-06-2023 ஞாயிறு**
**காலை 6 மணி முதல்**
(முழுமையான விபரம் மஹாகும்பாபிஷேக பத்திரிகையில் காண்க)

# சென்னையில் சனிக்கிழமையன்று நடைபெற்ற பயனுள்ள கருத்தரங்கு

## கனடா அரசியற் செயற்பாட்டாளர் நிமால் விநாயகமூர்த்தியின் ஏற்பாட்டில் அழைக்கப்பெற்ற அரசியல் சமூக ஆர்வலர்கள் பற்கெடுப்பு



தமிழ்நாடு - சென்னையில் கடந்த 6ம் திகதி சனிக்கிழமையன்று நடைபெற்ற பயனுள்ள அரசி-யல் கருத்தரங்கு ஒன்று "ஈழத் தமிழர்களின் பாதுகாப்பில் தமிழ்நாட்டின் தொடர்ச்சியான வகிபாகம்" என்ற தலைப்பில் இடம்பெற்றது.

தற்போது சென்னையில் தங்கியுள்ள கனடா அரசியற் செயற்பாட்டாளரும் கணக்காளரும் நாடு கடந்த தமி-ழீழ அரசின் முன்னாள் அமைச்சருமான நிமால் விநாயகமூர்த்தியின் ஏற்பாட்டில் அழைக்கப்பெற்ற அரசியல் சமூக ஆர்வலர்கள் பலர் பற்கெடுத்து பயனுள்ள கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அங்கு கலந்து கொண்ட அழைக்கப்பட்டவர்களில் "விடுதலை இராஜேந்திரன். ஓவியர் புகழேந்தி. சரஸ்வதி அம்மா, ரி.எஸ்.எஸ். மணி, தமிழினியன், மனோஜ், வா.மு.சே. திருவள்ளுவர் உட்பட பலரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கனடா உதயன் பத்திரிகை சார்பில் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் கனடா உதயன் சென்னைப் பிரதிநிதிகள் அருண் கதாகரன். பிரகாஸ் மற்றும் இணையத் தளப் பிரிவின் பொறுப்பாளர் சாம் டானியல் மற்றும் படப்பிடிப்பாளர்கள் என அழைக்கப்பெற்றவர்கள் கலந்து சிறப்பித்தனர். முதலில் ஆரம்ப உரையாற்றிய நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் மிகவும் உணர்வு பூர்வமாக தனது உரையை ஆரம்பித்தார்.

"எமது மக்கள் அடக்கப்பட்டவர்களாக ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த காரணத்தால் தோற்றம் பெற்ற எமது விடுதலைப் போராட்டம் அழிக்கப்பட்ட காரணத்தால் தொடர்ச்சியாக அதே அடக்குமுறைகளையும் பாதிப்புக்களையும் எதிர்கொண்டு வருகின்றார்கள். அவர்களுக்கு இழைக்கப்பெற்ற கொடுமைகள் மற்றும் உலக நாடுகள் இணைந்து இலங்கை அரசோடு கைகோர்த்து மேற்கொண்ட இன அழிப்பினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு சரியான நீதி கிடைக்கவில்லை. 2009ம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் ஆகியவற்றை எமது தமிழ் அமைப்புக்கள் நீதிகேட்டு நின்றும் அவர்களுக்கு நீதி கிட்டவில்லை. அவரகளின் வலி போகவில்லை. மாறாக துன்பங்கள் தொடர்கின்றன.

எனவே தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக எமது மக்களுக்காக குரல் கொடுத்து வரும் அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களின் ஆதரவை வலுவுள்ளதாகப் பெற்றுக் கொள்ளும் வகையிலேயே நாம் இந்த கருத்தரங்கை நடத்துவதற்கு முன்வந்தோம். அதன் அர்த்தத்தையும் நோக்கத்தையும் புரிந்துகொண்டு இனி வரும் காலங்களில் தமிழ்நாட்டின் ஆதரவைபெற்று எமது மக்களுக்கான நீதியையும் அவர்களுக்காக விடிவையும் பெற்றுக் கொள்ளும் வகையில் நாம் இன்று ஆராய்வோம்" என்று மிகவும் உருக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பெரியார் வழி தொடரும் அரசியல் ஆர்வலரும் செயற்பாட்டாளரும் ஈழத்தமிழ் மக்கள் சார்ந்த அரசியலில் ஆர்வம் கொண்டவராக செயற்பட்டு வருபவருமான "விடுதலை" இராஜேந்திரன் அவர்கள் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

அவர் தனது உரையில் "ஈழத் தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டம் ஒனறு மீண்டும் எதிர்பார்க்கப்படுவது சாத்தியமில்லை. ஆனால் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு மற்றும் தொடர்ச்சியாக இடம்பெறும் அடக்குமுறைகள் தமிழர் பிரதேசங்களில் காணப்படும் மிகவும் மோசமான இராணு முகாம்களின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு எதிராக தமிழகத்தில் உள்ள ஆதரவாளர்கள் பக்க பலமாக இருந்து குரல் எழுப்ப வேண்டும்" என்றார்.



தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் அரசியல் துறை விரிவுரையாளரும் தற்போது தமிழ்நாட்டில் தங்கியிருந்து எமது மக்களுக்காக குரல் கொடுத்து வருபவருமான மு. திருநாவுக்கரசு. தனது கருத்துக்களை எடுத்துரைத்தார்.

பல பயனுள்ள விடயங்களை எடுத்துரைத்த அவர் உலகில் தீவுக-ளாக நிலப்பரப்புக்களைக் கொண்ட பல நாடுகளில் இடம்பெற்ற விடுதலைப் போராட்டங்கள் வெற்றிபெற்றுள்ளன என்றும் உதாரணமாக கியுபா என்னும் தீவு அமெரிக்காவிற்கு மிக அருகில் இருந்தாலும் அமெரிக்காவால் வாலாட்ட முடியவில்லை" என்றும், எனினும் எமது விடுதலைப் போராட்டம் ஒரு தீவிற்குள் இடம்பெற்றாலும் உலகநாடுகள் பல இணைந் அதை அழிவிற்கு கொண்டு சென்றன என்றும் இது தமிழ் மக்களுக்கு மிகுந்த வேதனையைத் தரும் விடயம் என்றும் குறிப்பிட்டார். எனினும் இறுதியாக அவர்கள் தெரிவித்த சில விடயங்களை மறுதலித்து தொடர்ந்து உரையாற்றிய சிலர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

தமிழகத்திலிருந்து தான் மீண்டும் போராட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என் குறிப்பிட்ட திருநாவுக்கரசு அவர்களின் கருத்தை தொடர்ந்து உரையாற்றிய சிலர் மறுத்தனர்.

தொடர்ந்து உரையாற்றி கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது கருத்துப் பகிர்வில் பின்வருமாறு தெரிவித்தார்.

"ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் அடக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் 2009ல் நாம் அனுபவித்த கொடுமைகளிலிருந்து மீள அல்லது எமது மக்களின் வலிகளுக்கு தகுந்த மருந்தை தடவிட தமிழ் அரசியல் தலைவர்கள் ஏதாவது செய்கின்றார்களா என்பதை நாம் ஆராய வேண்டியவர்களாக உள்ளோம். உதாரணமாக தற்போது இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பெற்ற அரசியல்வாதிகள் மீண்டும் மீண்டும் தங்கள் பதவிகளைத் தக்கவைப்பதற்காகவே தங்கள் நேரத்தையும் மக்களின் நேரத்தையும் பயன்படுத்துகின்றார்கள். ஐக்கிய நாடுகள்சபையில் இனப்படுகொலைக்கு எதிரான தீர்மானங்கள் தொடர்பான அமர்வுகள் இடம்பெறும் போது அவர்களும் அங்கு செல்கின்றார்கள் தமிழ் மக்களின் துயரத்தையும் ஆதங்கத்தையும் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் பதிவு செய்வார்கள் என்று மக்கள் நம்பினார்கள். ஆனால் எமது தலைவர்கள் இலங்கை அரசாங்கத்தையும் சிங்கள அரசியல்வாதிகளையும் காப்பாற்றும் வகையிலேயே செயற்படுகின்றார்கள். இவர்களைப்போன்று தமிழ்நாட்டில் உள்ள ஈழ ஆதரவு கொண்ட தலைவர்களும் தொண்டர்களும் நடந்து கொள்ளக் கூடாது என்று மிகவும் மன்றாட்டமாகக் கேட்டு கொண்டார்.

தொடர்ந்து பலரும் தங்கள் கருத்துக்களை ஆர்வத்துடன் பகிர்ந்து கொண்டனர்.

**- சென்னையிலிருந்து சத்தியன்**



# "இலங்கையில் கொலையாளிகளின் மறைந்த கை தெரியும் கை ரேகைகள் காணாமல் போய்விடும்" - IPS



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• இலங்கையில் ஊடகத்துறை ஆபத்தில் உள்ளது
• யாழ்.குடா நாட்டில் 28 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்

சர்வதேச ஊடக தினம் கடந்த 3ஆம் திகதி (03.05.2023) நினைவு கூரப்பட்டது. உண்மையில் ஊடக சுதந்திரத்தை அனுபவித்த களிப்பில் இந்த ஊடக தினம் கொண்டாடப்பட வேண்டிய தினமாகும். ஆனால் துரதிஷ்டவசமாக ஒவ்வொரு வருடமும் மே 3 ஆம் திகதி என்பது ஊடக சுதந்திரத்தைக் கொண்டாடும் தினமாக அன்றி "மரணித்துப்போன ஊடக சுதந்திரத்திற்காக" ஆகுதியாகிய ஊடக நண்பர்களை கனத்த இதயத்துடன் நினைவு கூரும் ஒரு தினமாகவே மே 3ஆம் திகதி அமைந்துவிட்டது.

உண்மையில் ஊடகத்துறை சகாக்களின் மரணங்கள் தருகின்ற வலியுடன்கூடிய கனத்த இதயத்துடன் நினைவு கூரும் ஒரு தினமாகவே மே 3ஆம் திகதி அமைந்துவிட்டது.

இந்த வருடமும் அதே அதிர்ச்சி: சூழலும் படுகொலையான சகாக்களின் ஆத்மா அடங்கிப்போன நிலையில் இன்றும் நீதிக்காக காத்திருக்கும் அந்தப் பயங்கரச் சூழலே வியாபித்திருக்கின்றது. இன்றும் நீதி இருட்டறைக்குள் மூழ்கடிக்கப்பட்டுள்ளது, முடக்கப்பட்டுக் கிடக்கின்றது.

• ஐ.நா பொதுச் சபையால் உலக ஊடக சுதந்திர தினம் அறிவிக்கப்பட்டது

ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (யுனெஸ்கோ) பொது மாநாட்டின் பரிந்துரையை பின்பற்றி, டிசம்பர் 1993 இல் ஐ.நா பொதுச் சபையால் உலக ஊடக சுதந்திர தினம் அறிவிக்கப்பட்டது. அப்போதிருந்து, ஒவ்வொரு மே 3 அன்று, யுனெஸ்கோ பிரகடனத்தின் ஆண்டு நினைவு உலக ஊடக சுதந்திர தினமாக உலகம்முழுவதும்கொண்டாடப்படுகிறது.

"உலக ஊடக சுதந்திர தினம் பிரகடனப்படுத்தப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்துவிட்டன

• பயங்கரவாதத் தடைச் சட்டம்

இலங்கையில் கடந்த நான்கு தசாப்தங்களுக்குமேல் பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் உள்ளது. இந்தச் சட்டம் இலங்கையில் குறிப்பாக தமிழ் மக்களை குறி வைத்தே கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தால் தமிழ் மக்கள் மாத்திரமல்ல தமிழ் ஊடகத்துறையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. உண்மையில் கூறுவாதாயின் இந்தச் சட்டம் தமிழ்மக்களையும் தமிழ் ஊடகத்துறையையும் திறந்த வெளிச் சிறைச்சாலை கைதிகளாக ஆக்கியது. அரச பயங்கரவாதமும் பாதுகாப்பு கட்டமைப்புக்களும் காடையர்களும் தமிழ் மக்களையும் தமிழ் ஊடகத்துறையினரையும் வேட்டையாட பயங்கரவாத தடைச்சட்டம் "லைசன்ஸ்" வழங்கியது.

புயங்கரவாத தடைச் சட்டத்தின் கோரப் பிடிக்குள் தமிழ் மக்களும் தமிழ் ஊடகத் துறையினரும் சிக்குண்டு சீரழிந்து கொண்டிருந்தபோது தென்னிலங்கை அமைதி காத்தது. இன்று "எமக்கு நாளை உங்களுக்கு" என தமிழர் தரப்பில் இருந்து எழும்பிய குரல்களும் மரண ஓலங்களும் தென்னிலங்கை மக்களின் செவிகளைத் திறக்க திராணியற்று போயின.

• "அரகலய" உணர்த்திய உண்மை

ஆனால் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு எதிராக "சிஸ்டம் சேஞ்ஜ்" கருத்தியலை முன்வைத்து "அரகலய" போராட்டம் வெடித்தபோது பயங்கரவாதத் தடைச் சட்டம் சிங்கள மக்கள் மீது பாய்ந்தது. இந்தச் சட்டத்தின் கொடூரத்தை எதிர் கொண்ட தென்னிலங்கை மக்கள் தற்போது சகல வழிகளிலும் முடக்கப்பட்டுக் கிடக்கின்றனர். இது போதாதென்று ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கம் ஒட்டு மொத்த இலங்கையின் ஜனநாயகத்தையே முடக்கிவிடும் வகையில் பயங்கரவாதத் தடுப்பச் சட்டத்தை கொண்டுவர ஆயத்தமாகிவிட்டது.

இன்று இலங்கையின் ஒட்டு மொத்த மக்களுக்கெதிராக மட்டுமின்றி ஊடகத்துறைக்கு எதிராகவும் பாய்வதற்கு ஏதுவாக ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கத்தினரால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலத்தை எதிர் கொண்டநிலையில் மக்களும் ஊடகத்துறையும் உள்ளனர். அதாவது ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கம் தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதே உத்தேச பயங்கரவாத தடுப்புச் சட்ட முன்மொழிவாகும்.

• International Federation of Journalists

பயங்கரவாததடுப்புச்சட்டமூலம் (ATA) ஊடகவியலாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று International Federation of Journalists அமைப்பு சுட்டிக் கட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் (ATA) 1979 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (PTA) பதிலாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மூலம் நடைமுறைக்கு வருமாயின்

• ஒன்று கூடுவதற்கான உரிமை மீதான கட்டுப்பாடுகளை மேலும் மோசமாக்கும்.
• கருத்துச் சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரத்தை கடுமையாகக் குறைக்க அச்சுறுத்துகிறது. என்று பத்திரிகையாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு (IFJ) ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் (IFJ) அதன் இலங்கை துணை நிறுவனங்களான இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம் (SLWJA), ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு (FMETU), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) ஆகியவற்றுடன் இணைந்து இந்த சட்டமூலத்தை கடுமையாக கண்டிக்கிறது.

மற்றும் உத்தேச வரைவை திரும்பப் பெறவும் தண்டனைக்குரிய பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்யவும் இலங்கை அதிகாரிகளை மேற்படி அமைப்பு வலியுறுத்துகிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) நிறைவேற்றப்பட்டால், இலங்கை அரசாங்கத்தை விமர்சிப்பதாகக் கருதப்படும் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதித்துவ தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புகள் ஜனநாயக விரோத மற்றும் தன்னிச்சையான "பயங்கரவாத நடவடிக்கைகளின்" கீழ் சட்டரீதியான துன்புறுத்தலுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது.

உலகம் முழுவதும் சுதந்திரமான ஊடகம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை அடைவதில் கணிசமான முன்னேற்றத்தை கண்டுள்ளமையை மறுப்பதற்கில்லை.

ஆனால்பல நாடுகளில் சுதந்திர ஊடகங்களின் பெருக்கம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் எழுச்சி ஆகியவை தகவல்களின் இலவச ஓட்டத்தை செயல்படுத்துகின்றன.

எனினும் ஊடக சுதந்திரம் ஊடக வியலாளர்களின் பாதுகாப்பு, கருத்து சுதந்திரம் என்பன தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. இது ஏனைய மனித உரிமைகளின் இயக்கத்தை வெகுவாகப் பாதிக்கிறது.

ஐநாவின் கூற்றுப்படி, சர்வதேச சமூகம் பல நெருக்கடிகளை எதிர்கொள்கிறது: மோதல்கள் மற்றும் வன்முறை, தொடர்ச்சியான சமூக - பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், இடம்பெயர்வு, சுற்றுச்சூழல் நெருக்கடிகள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள மக்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான சவால்கள்.

அதே நேரத்தில், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான நிறுவனங்களில் கடுமையான தாக்கத்துடன், ஆன்லைன் மற்றும் தளங்களிலும் தவறான தகவல்களும் பெருகி வருகின்றன.

இந்த நெருக்கடியான சூழ்நிலைகள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காகவே, ஊடக சுதந்திரம், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் தகவல் அணுகல் ஆகியவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் 19 வது பிரிவில் உள்ள கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை மற்ற அனைத்து மனித உரிமைகளையும் அனுபவிப்பதற்கான ஒரு முன்நிபந்தனை மற்றும் இயக்கி அல்லது காவலனாகும்.

உலகெங்கிலும் உள்ள நாடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுளின்படி 2022 இல் உலகளவில் 57 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

• உலகில் பத்திரிகைத் தொழிலை மிகவும் ஆபத்தான தொழிலாகக் கருத முடியாது. ஆனால் தொழில்துறையின் சில பிரிவுகளில் நுழைபவர்களுக்கு ஆபத்துகள் தெளிவாக காத்திருக்கின்றன..

2012 இல் 147 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட ஒரு உச்சகட்டத்திற்குப் பிறகு, அதிர்ஷ்டவசமாக எண்ணிக்கை குறைந்துள்ளது. மேலும் 2021 இல் 2003க்குப் பிறகு மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர்.

2020 ஆம் ஆண்டில் ஈராக்கில் ஆறு பத்திரிகையாளர் கொலைகளும் பாகிஸ்தானில் நான்கு மற்றும் இந்தியாவில் நான்கு பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டதாக பிராந்திய வாரியாக பத்திரிகையாளர் இறப்பு புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அவற்றில் சில துரதிர்ஷ்டவசமாக குறிப்பாக கொடூரமான. கொலைகளாகும்.

ஊடகவியலாளர்களுக்கு உலகில் மிகவும் ஆபத்தான நாடு மெக்சிகோ. 2020 இல் எட்டு பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். மெக்சிகோவில் உள்ள பத்திரிகையாளர்கள் அரசியல் ஊழலை அம்பலப்படுத்த அல்லது விளம்பரப்படுத்த முயற்சிப்பதற்காக அடிக்கடி கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர், அச்சுறுத்தப்படுகிறார்கள், மேலும் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக எட்டு முதல் பத்து ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றனர்.

கடந்த 20 ஆண்டுகளில் (2003-2022) 1,668 பத்திரிகையாளர்கள் உலக அளவில் கொல்லப்பட்டனர். சராசரியாக ஆண்டுக்கு 80 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

எல்லைகளற்ற செய்தியாளர்கள் (RSF) கடந்த 20 ஆண்டுகளில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் புள்ளிவிவரங்களைத் தொகுத்து பகுப்பாய்வு செய்துள்ளது.

கொலைகள், ஒப்பந்தக் கொலைகள், பதுங்கியிருந்து தாக்குதல்கள், போர் வலய மரணங்கள் மற்றும் மரண காயங்கள், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்படுதல் என பல வழிகளில் ஊடகவியலாளர்களின் கொலைகள் இடம்பெறுகின்றன.

கடந்த இரண்டு தசாப்தங்களில் (2003-2022) RSF இன் கணக்கீடுகளின்படி உலகளவில் 1,668 பத்திரிகையாளர்கள் தங்கள் பணி நிமித்தம் கொல்லப்பட்டுள்ளனர்.

• 2000 ஆம் ஆண்டு முதல் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் மொத்த எண்ணிக்கை 1,787 ஆகும்.
• பெண் பத்திரிகையாளர்கள் படுகொலை.

2017 ஆம் ஆண்டில், பத்து பெண் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர் (64 ஆண் பத்திரிகையாளர்களுக்கு எதிராக) - அந்த ஆண்டின் மொத்த ஊடக இறப்புகளில் இது 13.5% ஆகும்.

கடந்த 20 ஆண்டுகளில் மொத்தம் 81 பெண் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் - மொத்த ஊடக இறப்புகளில் 4.86%.. ஆகும்.

• இலங்கையில் ஊடகத்துறை

1981 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டுவரை ஊடகத்துறை சார்ந்தோர் 113 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் என சுதந்திர ஊடக இயக்கத்தைச் சேர்ந்த சீதாரஞ்சனி தனது நூலில் பதிவு செய்துள்ளார். இவர்களில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறையில் பணியாற்றுபவர்கள் என இந்தப் பட்டியல் உள்ளது.

1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2010 ஆம் ஆண்டு மே மாதம் வரை அதாவது 11 ஆண்டுகளில் 19 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று இன்னொரு தகவல் தெரிவிக்கின்றது. மேற்குறிப்பிட்ட 19 ஊடகவியலாளர்களும் ஏன் கொல்லப்பட்டனர்? கொலைகளுக்கான நோக்கம் என்ன? என்பதுகுறித்து உறுதிப்படுத்தப்பட்டதாக அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

இது தவிர மேலும் ஆறு கொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அந்தக் கொலைகள் பற்றிய நோக்கம் என்ன? என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்று அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

• யாழ்.குடா நாட்டில் 28 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்

கிடைக்கும் தகவலின்படி யாழ்.குடா நாட்டில்மாத்திரம் ஊடகத்துறை சார்ந்த 28 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அறிய முடிகின்றது.

துரதிஷ்டவசமாக இலங்கையில் ஊடகத்துறை இன்றும் இனரீதியில் மிக ஆழமாகவே பிளவுபட்டுக் கிடக்கின்றது. இந்தப் பிளவு இன்று நேற்றல்ல நூற்று வருடங்களை எட்டி நிற்கின்றது.

(தொடர்ச்சி 21 பக்கம்)

# தையிட்டி விகாரை: யதார்த்தம், எதிர்பார்ப்பு மற்றும் ஏமாற்றம்

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



“அந்த விகாரை அகற்றப்பட மாட்டாது, அதை அகற்றச்சொல்லிக் கேட்பதில் நியாயமில்லை, அது பௌத்தமயமாக்களுக்கு வழி வகுக்கிறது, அதற்கு முடிவு கட்ட வேண்டும்” இப்படியான குரல்கள் - தையிட்டி பௌத்த விகாரை தொடர்பில் - இப்போது ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளன.

இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தனியார் காணியில் அந்த விகாரை கட்டப்பட வாதப் பிரதிவாதங்கள் வலுத்து வருகின்றன. இந்த விடயத்தில் இந்தியா உடனடியாக தலையிட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

வடக்கே நிலைகொண்டுள்ள இராணுவ வீரர்களின் வழிபாட்டிற்காக இந்த விகாரை அமைக்கப்படுகிறது என்று இராணுவத் தரப்பு கூறுகிறது. அப்படியென்றால் அதை இராணுவ முகாம்களிற்குள் அமைக்காமல் ஏன் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் தனியார் காணியில் அமைக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

இந்நிலையில் தையிட்டி விகாரை உட்பட சிங்கள பௌத்தமயமாக்கலுக்கு விரைந்து முடிவு கட்டவேண்டும் என இந்தியத் தூதுவரிடம் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

“சிங்கள பௌத்தமயமாக்கலுக்கு முடிவு கட்டவேண்டும். நிரந்தர அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இந்த விடயங்களை இந்தியத் தூதுவர் கோபால்பாக்லேயிடம் வலியுறுத்தினேன். இதே கருத்துக்களை ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் முன்வைப்பேன்” என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் உள்ளூர் ஊடகங்களிற்கு தெரிவித்துள்ளார்.

இந்த வாரம் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை (அதாவது உதயன் பத்திரிகை உங்கள் கைகளில் கிடைக்கவுள்ள வெள்ளிக்கிழமை (12) மற்றும் அதற்கு முதல் நாள் வியாழக்கிழமை) இலங்கை தமிழரசுக் கட்சியின் வடக்கு-கிழக்குப் பகுதியைச் நேர்ந்த நாடாளுமன்ற குழு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து உரையாடவுள்ள நிலையில், சம்பந்தன் அவர்கள் இந்தியா சிங்கள பௌத்தமயமாக்கலுக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்துள்ளார்.

சம்பந்தன் அவர்கள் விடுத்த கோரிக்கையை பரிசீலித்து, அதை புதுடில்லிக்கு அனுப்பவுள்ளதாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் அதே வேளை, இந்திய அரசால் இந்த விடயத்தில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க இயலும் என்பதிலும் சந்தேகங்கள் உள்ளன. இந்தியா இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பில் கொடுக்கும் எவ்விதமான அழுத்தமும், சீனாவிற்கு சாதகமாக அமைந்துவிடக் கூடாது என்பதில் இந்தியா கண்ணும் கருத்துமாகவுள்ளது.



இதனிடையே வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதியுடனான சந்திப்பில் விவாதிக்கப்படும் விடயங்கள் முழுமையாக தெரிய வருவதற்கு முன்னர் உதயன் இதழ் உங்கள் கைகளில் இருக்கும் என்று நம்புகிறேன்.

சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கவுள்ள நிலையிலேயே, இலங்கைக்கான இந்தியத் தூ துவர் திடீரென இரா.சம்பந்தனை நேரில் சென்று சந்தித்தார். அந்த சந்திப்பிற்கு பிறகே சம்பந்தன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

“யாழ்ப்பாணம் தையிட்டியில் தமிழ் மக்களின் காணியில் சட்டவிரோதமாகப் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த சட்டவிரோத நடவடிக்கை வடக்கு கிழக்கில் நீண்டகாலமாகத் தொடர்கின்றது. தமிழ் மக்களின் காணிகளில் சட்டவிரோதமாகப் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது மட்டுமன்றி சில இடங்களில் சைவக்கோயில்களும் தாக்கப்பட்டு வருவதுடன் அழிக்கப்பட்டும் வருகின்றன. கூடியளவுக்கு இந்தச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி எடுத்து வந்திருக்கின்றோம் தொடர்ந்தும் எடுப்போம்” என்று அவரது வழமையான பாணியில் ஏற்ற இறக்கத்துடன் கூறினார்.

அப்போது அதிகாரப் பகிர்வு, நிரந்தரமான அரசியல் தீர்வு ஆகியவை குறித்தும் பேசினார்.

“இந்த நடவடிக்கைகள் முடிவுக்கு வரவேண்டுமெனில் ஒரு நியாயமான - நிரந்தரமான - தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அதற்காக எம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் வழங்கி வருகின்றோம். அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும். ஏனெனில் இந்த நாடு மீண்டெழ வேண்டுமெனில் அரசியல் தீர்வு கட்டாயம் வேண்டும்”.

இந்த விடயங்கள் ஜனாதிபதியுடனான சந்திப்பில் அவசியம் பேசப்படும் என்றார் சம்பந்தன். “இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என்னை வந்து சந்தித்திருந்தார். அவரிடமும் இந்த விடயம் தொடர்பில் பேசினேன்”.

அதேவேளை, ஏனைய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடனும் வடக்கு, கிழக்கில் தொடரும் சிங்கள - பௌத்த மயமாக்கல் மற்றும் அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும் என்பவை தொடர்பில் பேசி வருகின்றோம் எனவும் அவர் கூறினார்.

ஆனால், பல தசாப்தங்களாக இதே விடயங்களை திரும்பத்திரும்ப அவர் கூறி வருகிறார், ஆனால் காத்திரமான வகையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்கிற விமர்சனம் அவர் மீது தொடர்ந்து வைக்கபடுகிறது. போர் முடிந்த காலந்தொட்டே இனப் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வு மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசப்பட்டு வந்தாலும், அது கானல்நீராகவே உள்ளது.




சம்பந்தன் இந்திய தூதர் கோபால் பாக்லேயைச் சந்தித்து உரையாடிய நிலையில், தையிட்டி விகாரை எக்காரணத்தைக் கொண்டும் அகற்றப்படாது என்று பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா அடித்துக் கூறுகிறார்.

“அது படையினருக்காக அமைக்கப்பட்ட விகாரை, அவர்கள் வழிபட ஏற்படுத்தப்பட்டது, எனவே அதை அகற்றும் பேச்சிற்கே இடமில்லை” என்று முகத்தில் அறைந்தால் போல் கூறியுள்ளார்.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி அடிக்கல் நட்டிருந்தார். இந்த விகாரைக்கான கலசம் வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றிருந்தது. இதனையடுத்து தனியார் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மேற்படி விகாரையை அகற்றி அந்தக் காணிகளை விடுவிக்குமாறுகோரி மக்களால் 3 நாள் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் சவேந்திர சில்வாவிடம் கேள்வி எழுப்பியதற்கே அதை அகற்றுவது என்கிற பேச்சே இல்லை என்று பதிலளித்தார்.

“தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரை அரசின் முழுமையான அனுமதியுடன், இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டது. இனவாத, மதவாதக் கண்ணோட்டத்துடன் இதனை நோக்குவதை தமிழ்க் கட்சிகளும் அவர்களது ஆதரவாளர்களும் நிறுத்திக்கொள்ளவேண்டும். இந்த விகாரை சட்டவிரோதமானது அல்ல. அமைக்கப்பட்ட இந்த விகாரை எந்தக் காரணத்துக்காகவும் அகற்றப்படாது” என்று சவேந்திர சில்வா வலியுறுத்துகிறார்.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை இராணுவத்தினரின் வழிபாட்டுக்காகவே உருவாக்கப்பட்டது. அதனை ஒருபோதும் அகற்ற முடியாது என்று பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தாலும் அதில் பல கேள்வில் தொக்கி நிற்கின்றன.

அடிப்படையில் சர்ச்சைக்குரிய அந்த விகாரை அமைக்கப்பட்டுள்ள இடம் தனியாருக்குச் சொந்தமான காணி. அதில் இராணுவத்தினரின் பயன்பாட்டிற்கான என்று கூறி நிலத்தை அபகரித்து வழிபாட்டு தலம் ஒன்றை அமைப்பது அடிப்படையில் சட்டவிரோதமானது என்று சட்டத்தரணிகள் கூறுகின்றனர். தனியார் காணியை பொது நோக்கிற்காக, உதாரணமாக ரயில் நிலையம், தபால் கந்தோர், பேருந்து தரிப்பிடம், பாடசாலை, மருத்துவமனை, அரச அலுவலகங்கள் போன்ற பயன்பாடுகளுக்கு எடுத்தாலும் கூட அதற்கென்று உரிய நடைமுறைகள் உள்ளன, அது பின்பற்றப்பட வேண்டும், அந்த காணி உரிமையாளர்களுக்கு சந்தை விலைக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பதே பொதுவான நடைமுறை அல்லது விதிமுறையாகும்.



ஆனால், தனியார் காணியில் இராணுவத்தினர் வழிபடுவதற்காக விகாரை கட்டுவது நல்லிணக்கத்திற்கு மாறாக இனமுரண்பாடுகளை மேலும் அதிகரிக்கும் என்றே உள்ளூர் மக்கள் கூறுகின்றனர். இது வடக்கே இராணுவம் தொடர்ந்து நிலை கொள்வதற்கும் அதையொட்டி வலிந்து மேலும் சிங்கள மக்கள் குடியேறுவதற்கு வழி செய்யும் என்ற அச்சமும் கவலையும் பலரிடம் உள்ளது.

இன்றளவும் நாட்டின் வடக்கே தேவைக்கு மிகவும் அதிகமாக இராணுவம் நிலைகொண்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதை அகற்ற எந்த அரசும் முன்வரவில்லை அல்லது முன்வராது என்பதே யதார்த்தமாக உள்ளது.

மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு வரை இன்றும் தமிழர் தாயகப் பகுதியில் இராணுவம் வியாபித்து ஏராளமான முகாம்கள் உள்ளன. அதே போன்று விடுவிக்கப்படாத தனியார் காணிகளும் ஏராளமாக உள்ளன. ஆங்காங்கே நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் தேவைக்கென்று அவர்கள் வழிபடுவதற்காக தையிட்டி விகாரையைப் போன்று மேலும் பல விகாரைகளை தனியார் நிலங்களில் இராணுவம் வலிந்து அமைக்க முன்வந்தால் அதற்கு முடிவேது என்று சிவில் சமூக மக்கள் கவலை கொள்கின்கிறனர்.

இதேவேளை தையிட்டி விகாரை சட்டபூர்வமானதே அதனை அகற்றக் கோருவது நியாயமில்லை என மற்றுமோர் மூத்த அரசியல்வாதியும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச கூறுகின்றார். ஒரு ஜனாதிபதியாக இருந்தவருக்கு சட்டம் தெரியாதா? அல்லது நல்லிணக்கம் நாட்டிற்கு மிகவும் அவசியமானது என்பது புரியாதா என்கிற கேள்வி எழுவதை தடுக்க முடியவில்லை.

“உரிய அனுமதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை அகற்றக்கோருவது நியாயமான செயலன்று”. இதில் உரிய அனுமதி என்று அவர் எதைக் கூறுகிறார் என்பது தெரியவில்லை. தனியார் காணியில் இராணுவத்தினர் வழிபட விகாரை அமைப்பதற்கு சட்டரீதியாக இடமுள்ளதா என்பதை யார் கேட்பது. தமிழ் மக்களின் சார்ந்த எந்த விடயமாக இருந்தாலும் உடனடியாக சட்டமா அதிபரிடம் கருத்துக் கேட்கப்படும் போது, தனியார் காணியை இராணுவம் ஆக்கிரமிப்பதும் அதில் அவர்கள் விரும்பியபடி கட்டுமானங்களைச் செய்வதும் நியாயமானதா என்பது பற்றி கருத்துக் கேட்கப்பட்டதா. இதற்கெல்லம் மௌனமெ பதிலாக இருக்கும்.



(தொடர்ச்சி 15 பக்கம்)

# யாழ்.மாவட்ட செயலகத்தால் வீணாக்கப்பட்டுள்ள ஐ.நா.அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் நிதியுதவி

- நடராசா லோகதயாளன்


DISTRICT SECRETARIAT – JAFFNA

பதிவு இலக்கம்: JDS/RTI/2022/08/0644

கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து இன்னும் மீள முடியாமல் தவிக்கும் இலங்கை, கிடைக்கப்பெற்ற சில நிதியுதவிகளையும் வீணடித்துள்ளது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் இப்போது அம்பலமாகியுள்ளது.


இலங்கை அரசாங்கம் பொருளாதார மீட்சிக்காக சர்வதேச நிதி நிறுவனங்கள், சர்வதேச நன்கொடை நிறுவனங்கள் மீதே தற்போதும் ஆழமான நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றன. நாட்டின் பொருளாதர நெருக்கடியை சற்றேனும் தீர்க்கும் முகமாக வாக்களிக்கப்பட்ட நிதியுதவிகள் மற்றும் கடன்களும் இன்னும் முற்றாக வந்து சேரவில்லை.

இவ்வாறானதொரு சூழில், சர்வதேச தன்னார்வு தொண்டு நிறுவனமொன்றின் நிதியை வீணடித்த சம்பவமொன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு நாடு முழுவதும் அதியுச்ச பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, அத்தியாவசியப பொருட்களுக்க நீண்ட வரிசைகள் காணப்பட்டன. குறிப்பாக, எரிபொருள் தட்டுப்பாட்டு காரணமாக, அனைத்துப் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாகவும் நீண்ட வரிசைகள் காணப்பட்டன. அந்த படங்கள் சர்வதேச அளவில் இலங்கையில் மக்கள் படும் இன்னல்களை எடுத்துக்காட்டுவதாக அமைந்தன.

இந்த நிலையில், ஏற்கனவே போர்க்காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த அனுவபம் மிக்க யாழ்ப்பாண மாவட்டம் ஒட்டுமொத்த நாட்டுக்கும் முன்னுதாரணமாகச் செயற்படும் வகையில் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாரானது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் காணப்படுகின்ற நீண்ட வரிசைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவும், யாழ்.மாவட்டத்தில் உள்ள இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு சுமுகமான முறையில் எரிபொருளை வழங்குவதற்காகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.


நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேற்) லிமிட்டெட்.

# 693, K.K.S Road, Jaffna. 0212219893 0212219848 0777 1414 44

...ET PRINTING, SCREEN PRINTING

...AL PRINTING, ALL KINDS OF PRINTING WORKS.

INVOICE NO: 6344

District Secretariat – Jaffna

Date: 15/7/22

Tel:

Job No:

| DESCRIPTION | RATE | AMOUNT |
|---|---|---|
| Fuel Card Black & white | 7.50 | 1161,000 – |
| Fuel Card Two colour Card | 8.40 | 341,905.20 |
| Total Rs. | | 1502905.20 |
| Advance Rs. | | |
| Balance Rs. | | |

CASH/CHEQUE NO:

For New Evergreen Printers (Pvt) Ltd.

Draw the Cheque in Favour of NEW EVERGREEN PRINTERS (PVT) LTD

Best Printers in North & East

குறிப்பிட்ட விடயத்தினை கையாண்ட யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன் வைத்த கோரிக்கை அமைவாக, ஐ நாவின் ஒரு அங்கமான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (யு.என்.டி.பி) கடந்த ஆண்டு 15 இலட்சம் வரையிலான நிதியை உடனடியாக வழங்கியிருந்தது. அது முதற்கட்ட நிதியுதவியாகவும் கருதப்பட்டது.

ஆனால், குறித்த நிதியைப் பயன்படுத்தி யாழ்.மாவட்ட செயலகம் முன்னெடுத்த நடவடிக்கையானது, எள்ளளவும் நகராது தற்போது வரையில் அந்த 15 லட்ச ரூபா தொகையானது வீணாகச் செலவிடப்பட்டதாக மாறியுள்ள துரதிஷ்டமான நிலைம இப்போது தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் 15 பிரதேச செயலாளர் பிரிவிலும் வாழும் மக்களிற்கும் எரிபொருள் பங்கீட்டு அட்டையை விநியோகித்து அதன் மூலம் எரிபொருள் விநியோகத்தை சீர்செய்ய முடியும் என்பது தான் யாழ்.மாவட்டச் செயலகத்தின் திட்டமாக இருந்தது.

இதற்காக எரிபொருள் பங்கீட்டு அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. அவ்வாறு அச்சிடப்பட்ட பங்கீட்டு அட்டைக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தால் வழங்கப்பட்ட நிதியே செலவழிக்கப்பட்டுள்ளமை தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


பதிவு இலக்கம்: JDS/RTI/2022/08/0644

அதற்கு அமைவாக, யாழ்.மாவட்ட செயலகம் எரிபொருள் பங்கீட்டு அட்டைகளை 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டுப் பெற்றுக் கொண்டுள்ளது. அதனையடுத்து குறித்த எரிபொருள் பங்கீட்டு அட்டைகளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவின் ஊடாக விநியோகித்து அவற்றை கிராம சேவகர்கள் பூரணப்படுத்தி பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த செயற்பாட்டிற்காக, மாவட்டச் செயலகமானது, 2 இலட்சத்து 943 பங்கீட்டு அட்டைகள் அச்சிடப்பட்டு அதற்காக மாவட்டச் செயலகம் 15 இலட்சத்து 46 ஆயிரத்து 531 ரூபா 20 சதத்தை செலவிட்டுள்ளது என்று மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளர் என்.எஸ்.ஆர்.சிவரூபன் ஒப்பமிட்டு உறுதி செய்துள்ளார்.

எரிபொருள் விநியோக அட்டை அச்சிட்ட செலவான 15 இலட்சத்து 46 ஆயிரத்து 531 ரூபா 20 சதம் 2022-07-15 ஆம் திகதிய சிட்டையின் பிரகாரம் யாழ். நகரில் உள்ள தனியார் பதிப்பகத்திற்கு 6344 இலக்க சிட்டைக்காக தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளமையும் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபரும் தகவல் உத்தியோகத்தருமான ம.பிரதீபன் மற்றும் கணக்காளர் ஒப்பமிட்டு வழங்கியுள்ள பதிலில் எரிபொருளை பகிர்ந்தளிப்பதற்கான பங்கீட்டு அட்டைகள் குறித்த தொகையினருக்கு வழங்கப்பட்டுள்ளதோடு எஞ்சியவை மாவட்ட செயலகத்தில் தேக்கமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலைமை ஏற்படுவதற்கு, 2022ஆம் ஆண்டு 8ஆம் மாதம் கியூ.ஆர் முறைமையை மத்திய அரசாங்கம் அறிமுகப்படுத்தியமை தான் காரணம் என்றும் யாழ்.மாவட்ட செயகலத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதாவது, எரிபொருள் விநியோகத்திற்கான அட்டைகளை மக்களின் பாவனைக்கு விநியோகிப்பதற்கு முன்னால், மத்திய அரசாங்கம் கியூ. ஆர் கோட் முறையை அறிமுகப்படுத்திவிட்டது. அதனால் அச்சடிக்கப்பட்ட அட்டைகளுக்கு தேவையில்லாமல் சென்றுவிட்டது. யு என் டி பி அமைப்பிடமிருந்து உரிய நேரத்தில் உதவியாக கிடைக்கபெற்ற பணத்தை ஏன் உடனடியாக பயன்பாட்டிற்கு வரும் வகையில் நடைமுறைபடுத்தவில்லை என்பதற்கான பதில் யாரிடமும் இல்லை. அது முறையாக திட்டமிட்டு உரிய நேரத்தில் உரிய வகையில் செயல்படுத்தப்பட்டிருந்தால் அந்த பண விரயத்தை தடுத்திருக்க முடியும்.

குறித்த பங்கீட்டு அட்டைகள அச்சிடப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தால், யாழ்.மாவட்டத்திற்கு மட்டும் சொற்பகாலத்திற்கு குறித்த பங்கீட்டு அட்டைகள் மூலமாக எரிபொருள் விநியோகத்தினைச் செய்திருக்க முடியும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.


இதன்மூலமாக, பங்கீட்டு அட்டைகளும் பயன்படுத்தப்பட்டிருப்பதோடு, ஐ நா நிறுவனத்தின் நிதியும் வீணாக விரயமாக்கப்பட்டிருக்க மாட்டாது என்று யாழ்.மாவட்ட செயலகத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தற்போது தேக்கமடைந்துள்ள நிலையில் உள்ள பங்கீட்டு அட்டைகளுக்கான செலவீனம் தொடர்பில் யாழ்.மாவட்டத்தின் எந்தவொரு அதிகாரியும் பொறுப்புக்கூறுவதற்கு தயாராக இல்லை. அவர்கள் மத்திய அரசாங்கத்தின் அறிவிப்பை நோக்கியே சுட்டு விரல் நீட்டுகின்றனர்.

அச்சிடப்பட்ட அட்டைகளை உரிய நேரத்திற்கு பயன்பாட்டிற்கு அளிக்காமல், அது யாருக்கும் பயனில்லாமல் சென்றதற்கு எந்த பொறுப்புக்கூறலும் இதுவரை இல்லை. யாழ்ப்பாணம் கொழும்பையும், கொழும்பு யாழ்ப்பாணத்தையும் குறை கூறுவதாகவே நிலைமை உள்ளது.

ஐ நா அமைப்பும் தாங்கள் அளித்த நிதி ஏன் வீணடிக்கப்பட்டது என்பதற்கான விளக்கத்தை கேட்டுப் பெற்றதாக தகவல் இல்லை.

அதேநேரம், நெருக்கடி காலத்தில் நிதிவழங்கிய ஐ நா நிறுவனமான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தாம் வழங்கிய நிதிக்கான பின்னூட்டத்தை எவ்வாறு மதிப்பீடு செய்யப் போகின்றது என்பதும் இங்குள்ள பிரதான கேள்வியாகின்றது.


1. ...
   - 200,943 அட்டைகள்.
2. ...
   - இல்லை
3. ...
   - New Evergreen printers (pvt) ltd.
4. ...
   - ரூ.1,546,531.20
5. ...
6. ...
   - UNDP நிறுவனம்.

அதுமட்டுமின்றி, எதிர்வரும் காலங்களில் உள்ளூர் வளர்ச்சித் தேவைகள் மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு யு என் டி பி அமைப்பு பணம் கொடுக்க முன்வருமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

(14 பக்கத் தொடர்ச்சி)

## தையிட்டி விகாரை: யதார்த்தம், எதிர்பார்ப்பு மற்றும் ஏமாற்றம்

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே மஹிந்த ராஜபக்ச அதை நியாயப்படுத்தும் வகையில் பதிலளித்துள்ளார்.

"எடுத்ததெற்கெல்லாம் இனவாத, மதவாத கருத்துக்களை கக்குவதை தமிழ்க் கட்சிகள் உடன் நிறுத்தவேண்டும். அமைதிவழியில் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்லும் தமிழ் மக்களை போராட்டம் என்ற போர்வையில் அவர்களை வன்முறைக்கு இட்டுச் செல்வதுதான் தமிழ்க் கட்சிகளின் இலக்காக இருக்கின்றது. அவர்களின் அரசியல் சித்துவிளையாட்டுக்களுக்காக தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்காதீர்கள். தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரை உரிய அனுமதிகளைப் பெற்று அமைக்கப்பட்டது. அதனை அகற்றக் கோருவது எந்த வகையிலும் நியாயமானதில்லை" மஹிந்த கூறுகின்றார்.

ஆனால் காலச்சக்கரம் சுழலும் என்பதையும், அது அவரையும், அவரது சகோதரரையும் எப்படி சுழற்றியடித்தது என்பதை அவர் மறந்திருக்கமாட்டார். காலச்சக்கரம் குறித்து புத்த பகவான் கூறியுள்ளதையும் படைப் பிரதானியும் அறிந்திருப்பார் என்று நம்புகிறோம்.

# மாந்தை மேற்கில் காணி தொடர்பாக கடமையாற்றும் அதிகாரிகளுக்கு காணிப் பிணக்குகள் காணிச் சட்டம் தொடர்பாக தெளிவூட்டும் கருத்தமர்வு

இலங்கை செய்திகள் Sri Lanka News



- மன்னார் நிருபர் (10-05-2023)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம அலுவலர்கள் மற்றும் காணி தொடர்பாக கடமையாற்றும் அதிகாரிகளுக்கு காணி பிணக்குகள் மற்றும் காணி சட்டம் தொடர்பாக தெளிவூட்டும் கருத்தமர்வு வியாழக்கிழமை (11) காலை 9.30 மணியளவில் மாந்தை மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த கருத்தமர்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், ஓய்வு நிலை காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் கலந்து கொண்டதோடு கிராம அலுவலர்கள் மற்றும் காணி தொடர்பாக கடமையாற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன் போது காணி தொடர்பாக ஓய்வு நிலை காணி ஆணையாளர் குருநாதன் பல்வேறு விளக்கங்கள் வழங்கினார்.

குறிப்பாக காணி பிணக்குகள் ஏற்படும் போது எவ்வாறு அவற்றை இலகுவாக தீர்வு காண்பது குறித்து தெழிவூட்டப்பட்டது.

மேலும் காணி சட்டங்கள் குறித்து தெளிவு படுத்தப்பட்டதோடு, வருகை தந்த அதிகாரிகள் தமது சந்தேகங்களை கேட்டறிந்து கொண்டனர்.





# தலைமன்னார் பகுதியில் சிறுவர் கடத்தல் சம்பவம் – பொதுமக்கள் உதவியுடன் முறியடிப்பு

## இரு சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

- மன்னார் நிருபர் (11-05-2023)

மன்னார் - தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் கிராம பகுதியில் வியாபார பொருட்களை ஏற்றி வந்த வாகனம் ஒன்று இரு சிறுவர்களுக்கு இனிப்பு பொருட்களை வழங்கி கடத்துவதற்கு முற்பட்ட நிலையில் பொது மக்களின் உதவியுடன் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை (11) மதியமளவில் வாகனத்தில் வியாபார பொருட்களை விற்பனை செய்ய வந்த வாகனம் ஒன்றில் இருந்த ஓட்டுநர் இவ் வீதி வழியாக பயணித்த இரு சிறுமிகளுக்கு இனிப்பு பொருட்களை வழங்கி வாகனத்தில் கடத்த முற்பட்ட சமயம் இரு பிள்ளைகளும் தப்பி சென்று கிராமத்தவர்களுக்கு தெரிவித்த நிலையில் கிராம மக்கள் இணைந்து குறித்த வாகனத்தையும் வாகன சாரதி மற்றும் உதவியாளர்களை மடக்கி பிடித்துள்ளனர்.

குறித்த சிறுமிகள் தப்பியோடி ஒழிந்த நிலையில் அவர்களுக்கு பின்னால் வாகனத்தில் வந்தவர்கள் துரத்தி கொண்டு வந்ததாகவும் வாகனத்தினுள் வெளிநாட்டு நபர் ஒருவர் இருந்ததாகவும் பாதிக்கப்பட்ட சிறுமி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வாகனத்தை சோதித்த நிலையில் வெளிநாட்டவர் இருக்கவில்லை என்பதுடன் வாகனத்தில் இருந்த இரு சந்தேக நபர்களையும் பொதுமக்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் தலை மன்னார் பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காப்றோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2023

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினைந்தாவது முறையாக நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் சித்திரை மாதம் இருபத்தேழாம் நாள் (ஆங்கிலம்10-05-2023 புதன்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 19ம் நாள் ஆங்கிலம் 02-06-2023 வெள்ளிக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 03-06-2023 சனிக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

**மஹோற்சவ சிவாச்சாரியார்:**
பிரதிஷ்டா கிரியாரத்தினம்
சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள்

**ஆலய குருமார்:**
சிவஸ்ரீ நீலகண்டன் அஹோரசாமி
(தமிழ்நாடு, இந்தியா)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

09-05-2023 செவ்வாய் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 10-05-2023 | புதன் | கொடியேற்ற விழா திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 11-05-2023 | வியாழன் | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம் சிவனேசன் சுசீலா குடும்பம் சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 12-05-2023 | வெள்ளி | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 13-05-2023 | சனி | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம் திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 14-05-2023 | ஞாயிறு | திரு. வாமதேவன் முகுந்தன் கணனி குடும்பம் ஏழாலை | திரு. கதிர்காமநாதன் குடும்பம் திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 15-05-2023 | திங்கள் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | கப்பல் திருவிழா |
| 07 | 16-05-2023 | செவ்வாய் | திரு. கருணாகரன் சறோஜினி-கலா குடும்பம்-நல்லூர் | திரு. பகீரதன் துஷ்யந்தா குடும்பம் லக்சி சுப்பர் மார்க்கட் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 17-05-2023 | புதன் | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 18-05-2023 | வியாழன் | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ஜெகதேவா சோமாஸ்கந்தன் குடும்பம் - கொக்குவில் | மூக்ஷிக வாகனம் |
| 10 | 19-05-2023 | வெள்ளி | ஓர் அன்பர் | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 20-05-2023 | சனி | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மயில் வாகனம் |
| 12 | 21-05-2023 | ஞாயிறு | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன், தனுஷன், அனோயன், நிக்ஷன் குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 22-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா-இந்தியா | குதிரை வாகனம் |
| 14 | 23-05-2023 | செவ்வாய் | திரு பத்மநாதன் குடும்பம் பிரம்ரன் - கனடா | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 24-05-2023 | புதன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் காங்கேசன் துறை | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 25-05-2023 | வியாழன் | திரு. தவராசா சிவசோதி குடும்பம் -அனலைதீவு | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 26-05-2023 | வெள்ளி | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 27-05-2023 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் - அல்வாய் | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | நர்த்தன வடிவம் |
| 19 | 28-05-2023 | ஞாயிறு | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 29-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 30-05-2023 | செவ்வாய் | திரு. பிரபாகரன் குமாரசாமி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 31-05-2023 | புதன் | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 01-06-2023 | வியாழன் | திரு.சுப்பையா கிருஷ்ணபகவான் குடும்பம் -கைதடி | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | சப்பறத் திருவிழா |
| 24 | 02-06-2023 | வெள்ளி | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | ஓர் அன்பர் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 03-06-2023 | சனி | தீர்த்தத் திருவிழா - ஓர் அன்பர் | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா சண்டேஸ்வரர் விழா ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 04-06-2023 | ஞாயிறு | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | காலை: பிராயச்சித்தம் |
| 27 | 09-06-2023 | வெள்ளி | சிவகுமார் குடும்பம் - இராஜேஸ்வரன் குடும்பம் A1 Florist - Brampton | | மாலை: வைரவர் மடை |
| 28 | 10-06-2023 | சனி | திருவருள் கனகசபை குடும்பம் - அனலைதீவு | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி இரண்டாவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 10, 11, 12ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
குருமூர்த்தி ரெங்கநாதன் - சிவவடிவேல் முனுசாமி
செந்தில்நாதன் ஆனந்தன் - பழனிவேல் நாகராஜன்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - தேவேந்திரன் - ரெங்கராஜன்
மணிகண்டன் மாரிமுத்து - முனிராஜ் முனிரத்தினம்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)




ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com

மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அடகுமாடம் - பவுண் வாங்கி - தங்க நகை கடன்
கனகாம்பிகை அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough

பட்டு உலகில் தனித்துவம் படைக்கும்
Fashion World Inc
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com
7393 Markham Road, Unit 82,83 & 84
Markham, ON L3S 0B5

குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
THANA Insurance Inc.
416.728.5772
Thana Manickavasagar

Shop for Auto Parts
747 AUTOPARTS
THE RIGHT PRICE THE RIGHT CHOICE
Markham 905.471.4447
Scarborough 416.285.4447

DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Barrister, Solicitor & Notary Public
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000

அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough

ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸரீல்ஸ்
647.702.2159

ஈழத்தமிழ் மகனின் நிர்வாகத்தின் கீழ்
TECHSOURCE
Computer & Electronics Liquidator
Etobicoke (Albion & Islington) 647-352-2229
Scarborough (Kennedy & Shrepshire) 416.757.9111

the co-operators
Vel Insurance Services Inc.
சரியான காப்புறுதியை குறைந்த கட்டணத்தில் பெறுவதன் மூலம் மனதுக்கு நிம்மதியை பெறுங்கள்
416.396.0707
Senthooran Punithavel

காவேரி
Caaveri Enterprise
99 Select Ave,
Scarborough, ON M1V 4A8
(416) 412-1701

MORTGAGE ARCHITECTS
THAYANANDA (DARSHAN) THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca

பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
1209 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112 416-738-1271

SHY ENTERPRISE
Retailer of Paper Products
Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box.
Garbage Bags
Paper Towels
Toilet Papers.
Napkins
All kind of Plastic Bags
416.602.9714 ◊ 905.205.0011

ERAA SUPER MARKET
5930 Finch Ave. E, Scarborough, ON Tel: 416.292.2622
2607 Eglinton Ave. E, Scarborough, ON Tel: 416.269.2622

ஓம் சண்முகா

ஸ்கந்தாச்சிரமம்

# கனடா ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவில்



உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

2023

சண்முகக் கடவுள் போற்றி சரவணத்துள் உதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகை பாலா போற்றி
நண்மலர் கடம்ப மாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி போற்றி!

# மகோற்சவப் பெருவிழா

12-05-2023 வெள்ளிக்கிழமை தொடக்கம் 22-05-2023 திங்கள் வரை


## சண்முகப்பெருமான் அடியார்களே!

சகல செல்வங்களும் ஒருங்கே அமைந்த கனடாத் திருநாட்டிலே, சைவமும் தமிழும் நறுமணம் வீசும் ஒன்ராரியோ மாநிலத்தின் கண் அமைந்துள்ள ரொறன்ரோ மாநகரிலே திருக்கோயில் கொண்டெழுந்தருளி, வேண்டுவோர் வேண்டுவதை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் வள்ளி தேவசேனா சமேத சண்முகப்பெருமானுக்கு நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் சித்திரைத் திங்கள் 29 ஆம் நாள் (12-05-2023) வெள்ளிக்கிழமை, தெய்வேந்திர முகூர்த்த நேரமான நண்பகல் 12:00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் பகல்-இரவு மகோற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறும். அடியார்கள் அனைவரும் தினமும் காலையும் மாலையும் ஆசாரசீலர்களாக வருகை தந்து ஆறுமுகப் பெருமானின் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்றேகுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

| கொடியேற்றம் | சப்பறம் | தேர்த்திருவிழா | தீர்த்தத் திருவிழா | திருக்கல்யாணம் |
|---|---|---|---|---|
| வெள்ளிக்கிழமை | வெள்ளிக்கிழமை | சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை | திங்கட்கிழமை |
| 12-05-2023 | 19-05-2023 | 20-05-2023 | 21-05-2023 | 22-05-2023 |



ஆலயச் சிவாச்சாரியார்கள், ஆலய நிர்வாக சபையினர்கள், ஊடகத்துறையினர்கள், வியாபாரத்துறையினர்கள், மங்கள இசைவாத்தியக் கலைஞர்கள், மற்றும் அனைத்துக் கலைஞர்கள், பக்தகோடிகள் அனைவரையும் இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.



### மகோற்சவ குருக்கள்

"ஆகம பிரவீணர், அலங்கார கலாரத்தினம், ஸ்ரீ ஜெய துர்க்கா உபாசகர்"

**சிவஸ்ரீ. கணேச ஞானஸ்கந்த சிவாச்சாரியார்**

### சர்வ சாதகம்

"சாதகச் சுடர்" பிரம்மஸ்ரீ. கெங்காதர. வெங்கடரமண சர்மா

### ஆலய குருமார்கள்

சிவஸ்ரீ.கௌ.சுப்பிரமணியசர்மா

மற்றும் கனடாவிலுள்ள குருமார்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

சண்முக சேவையில்,
சண்முகப் பித்தன்
(ஆலய தர்மகர்த்தா)

### ஆலய நிர்மாணம்

"ஸ்தாபதிப் திலகம்', சிற்பகலை அரசவ்', விஸ்வாமிரம"

"சித்திரத்தேர் சக்கரவர்த்தி"

திரு.சரவணமுத்து ஜெயராஜா

### மங்கள இசை

திரு. பி. சண்முகசுந்தரம் குழுவினர்
(உலகத் தவில் நாதஸ்வர இசை)

**அனைவரும் வருக! ஆறுமுகன் அருள் பெறுக!**

**Sun City Plaza, Unit 30 – 2761 Markham Rd, Scarborough, ON M1X 0A4**

https://www.facebook.com/shanmuganathaswamy.hindutemple 416-613-1883 www.omshanmuga.org


ARABI PRODUCTIONS
ஆரபி படைப்பகம் வழங்கும்
அன்னையர் தினத்தில் நடைபெறும்
மாபெரும் இசை நிகழ்ச்சியும்
இராப்போசன விருந்தும்
May 14 2023
Door Open : 5:00pm
Start Time : 5:30pm
THE GUARDIAN HOME REALTY INC. BROKERAGE
SUTHARSAN NADARAJAH வின்
கருவறைக் கோவில்
TITLE SPONSOR
THE GUARDIAN HOME REALTY INC.
80 - F199 Nashdene Road Scarborough, ON M1V 5E4
(416) 989-6565
(416) 989-2828
info@theguardianhomes.com
www.theguardianhomes.com
Sutharsan NADARAJAH
AAROSAI "WHERE MUSIC BEGINS..."
JC's BANQUET & CONVENTION CENTRE
JC'S BANQUET & CONVENTION CENTRE
1686 Ellesmere Rd, Scarborough, ON M1H 2V5
POWERED BY
WINSMART
K T GROUP
RE/MAX REALTOR RAMANAN
RAMANAN SANTHIRASEGARAMOORTHY
416.290.6000
info@getnewhomes.com
www.getnewhomes.com
KNVA
NITHARSAN Proprietor
+1 647 617 3647
www.knva.ca
No:54,Watson Street, Scarborough - Ontario.
TABLE SPONSORS
FIRST AVAILABLE Roadside Assistance
1 (877) TOW-0247
1 (877) 869-0247
INSPIRATION DRIVING INSTITUTE
G1 Level G2 Level G Preparation
Selvy Ruban
416.822.4891
AKARAM
Pattukalin Sikaram
416-287-6161
ARJUN GOSAIN MORTGAGE AGENT
SANDEEP GOSAIN
Cell: 647.969.5687
Raj Travels & Tours Inc.
416-388-3501
416-335-0940
416-335-0366
416-822-4891
MEMORIAL DIGITAL VISION
+16475181861
Toronto,Canada
PSB
PARTYHALL DECORATION
647.766.8572
Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150
B-YOND DEVELOPMENTS LTD.
Subash T.
Construction/Renovation Specialist
(647) 303-0395
RKS BARBER SHOP
WE SERVE YOU BETTER 3 LOCATIONS
HAIRCUT SPECIALIST
KIDS MENS SENIOR
KT media
Media & Stream Solutions
info@kt-media.ca
www.kt-media.ca
Cell +1-416-617-3924
BAR & GRILL Baltimore JOHN'S
TAKE-OUT | DELIVERY
HOMELIFE
Christy Srishanmugarasa
416-276-7021
KALAVIYAM VOICE ACADEMY
Contact Us : 647-880-5207
Kalaviyam@gmail.com
TAZ SIVAPATHASUNTHARAM
FREE FINANCIAL EDUCATION & PLANNING
UNIVERSAL LIFE INSURANCE
INVESTMENT GROWTH WITH SAVING PLAN
AND LIVING BENEFIT
Ithayasteepan Anthonipillai
(647) 706-1370
BAD BOY
arotech solutions inc.
WWW.AROTECHSOLUTIONS.CA
416 509 5284
ஊடக அனுசரணை
CONTACT US 416.509.4450
உதயன்
Tamil One
GTA VIDEO ENTERTAINMENT
Easy 24 News
சமூகம்
eet TV
AKALAI EXPRESS

(13 பக்கத் தொடர்ச்சி)

''இலங்கையில் கொலையாளிகளின் மறைந்த கை தெரியும் கை ரேகைகள் காணாமல் போய்விடும்'' - IPS

• பிரகீத் எக்னெலிகொட

2010 ஆம் ஆண்டில் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போயுள்ளார். அவருக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. இதுவரை 50க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக சுதந்திர ஆர்வலர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

ஏல்லைகள் அற்ற ஊடக அமைப்பு வெளியிட்டுள்ள 2011ஆம் 2012ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் 178 நாடுகளில் 164வது இடத்தில் இலங்கை இருப்பதாகத் தரப்படுத்தியுள்ளது. 2022 ஆண்டில் 146வது இடத்தில் இருந்த இலங்கை. தற்போது 2023 இல் 135 வது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உள்நாட்டுப் போருடனும், தமிழர்களின் கிளர்ச்சியை நசுக்கியபோது பல ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்கள் கொலைகள் என்பன இன்னும் தண்டிக்கப்படாமல் விடப்பட்ட குற்றங்களுடனும் பத்திரிகை சுதந்திரப் பிரச்சினைகள் நெருக்கமாகப் பிணைந்துள்ளன.

• இலங்கையில் ஊடகத்துறை ஆபத்தில் உள்ளது

பன்முகத்தன்மை இல்லாத ஊடகத் துறை முக்கிய அரசியல் குலங்களைச் சார்ந்து இருப்பதால், இலங்கையில் ஊடகத்துறை ஆபத்தில் உள்ளது என்று RSF குறிப்பிடுகின்றது.

இந்த ஒரு பின்னணியில் இலங்கையில் ஊடகத்துறை எவ்வளவு ஆபத்தானது எத்தகைய நெருக்கடிகளைக் கொண்டுள்ளது என்பதை அனைவரும் அறிவர்.

இலங்கையில் ஊடகத்துறை ஒருபுறம் உயிர் அச்சுறுத்தல் பயமுறுத்தல் போன்றவற்றிற்கு முகம் கொடுக்கும் அதேவேளைமறுபுறம் தொழில் தர்மத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் போராட வேண்டியுள்ளது.

இலங்கையில் ரிஜ்ஜர்டி சொய்சா முதல் நடேசன், தராக்கி சிவராம், சுகிர்தராஜ் சுப்ரமணியம், நிமலராஜன், லசந்த விக்ரமதுங்க வரை இன மத மொழி பேதங்களுக்கு அப்பால் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்தக் கொலைகள்குறித்த உண்மைகள் வெளிச்சத்திற்கு வரவில்லை ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகத்தின் ஆலோசகர் சோனாலி சமரசிங்க ஐ.பி.எஸ்ஸுக்கு அளித்த பேட்டியில், இலங்கையில் நடந்த இரண்டு உயர்மட்ட கொலைகளும் அரசியல் உயரதிகாரிகளின் பத்திரிகை விமர்சனங்களை மௌனப்படுத்தவே மேற் கொள்ளப் பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தினார்.

ரிச்சர்ட் டி சொய்சா விடயத்தில், தனது ஊடகவியலுக்கான இறுதி விலையை செலுத்திய முதலாவது இலங்கை ஊடகவியலாளர் அவர்தான் என்று சமரசிங்க கூறினார்.

• பான் கீ மூன் கோரிக்கை

உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு பான் கீ மூன் விடுத்துள்ள அறிக்கையில் லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கு காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம்கோரியுள்ளார்.

டைம் பத்திரிகையின் தலையங்கம் அவரது மரணம் "டைமைக்கு தனிப்பட்ட இழப்பு" என்று கூறியது.

ஐக்கிய நாடுகள் சபை உலக ஊடக சுதந்திர தினத்தை நினைவுகூர்ந்த நிலையில் விக்கிரமதுங்க கொலையில் சந்தேக நபர்களில் ஒருவர் - விசாரணை அல்லது வழக்குத் தொடரப்படாமல் - இராஜதந்திரி பதவிக்கு உயர்த்தப்பட்டு இலங்கை தூதரகத்திற்கு அனுப்பப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

• ஈடுகட்ட முடியாத இழப்பாகும்

"ஊடகவியலாளர்கள்" தகவல் சேகரிப்பு, உண்மையைத் தேடுதல் மற்றும் பத்திரிகை மீதான ஆர்வம் ஆகியவற்றிற்காக தங்கள் வாழ்க்கையைச் செலவழித்தவர்களின் முகங்கள், ஆளுமைகள், திறமை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை உள்ளன. அந்தவகையில் ஊடகவியலாளர்களின் இழப்பு என்பது ஈடுகட்ட முடியாத இழப்பாகும்.

• "பொறுப்புக்கூற வேண்டும்" அரசாங்கங்களுக்கு அழைப்பு

"கருத்து மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்" தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் டேவிட் கேய், "பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு காரணமான அனைவரையும் விசாரித்து பொறுப்புக்கூற வேண்டும்" என்று அரசாங்கங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ரிஜ்சர்டி சொய்சா முதல் தராக்கி சிவராம், லசந்த விக்ரமதுங்க வரை நூற்றுக் கணக்கான ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் கொலை செய்யத் தூண்டிய சக்திகள் யார்? கொலையாளிகள் யார்? கொலைக்கான நோக்கம் என்ன? என்பதுகுறித்த வினாக்கள் விடை இன்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த அவிழ்க்கப்படாத முடிச்சுகள் மர்ம முடிச்சுக்களாகவே இருக்கப் போகின்றனவா, என்பதே இன்றைய கேள்வியாகும்.

இலங்கையில் கொலைஞர்களும், கொலையாளிகளும் மர்ம நபர்கள் அல்ல என்பது பெரும்பாலான மக்களுக்குத் தெரியும். அதனைத்தான் IPS வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் அரசியல் ரீதியில் தூண்டப்பட்ட கொலைகள் பற்றிய பரவலான நம்பிக்கை ஒரு கொடிய முரண்பாட்டை முன்னிறுத்துகிறது: மறைந்த கை எப்போதும் தெரியும். ஆனால் கைரேகைகள் காணாமல் போய்விட்டன ஏன்று IPS - குறிப்பிடுவதை இங்கு பதிவு செய்தல் பொருந்தும்.

இலங்கையில் கொலையாளிகளும் கொலைகளுக்குக் காரணமான சக்திகளும் எவ்வாறு தப்பிவிடுகின்றனர் என்பது மாத்திரமல்ல சுதந்திரமாக உலாவர அனுமதிக்கப்படுகின்றனர் என்பதற்கு இது சான்றாகும். மொத்தத்தில் கொலையாளிகளிடமே நீதி கேட்டு நிற்க வேண்டிய பரிதாப நிலையில் இலங்கையில் ஊடகத்துறை உள்ளது.

Email : vathevaraj@gmail.com

5th May 2023



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி
# மனம் திறக்கிறார் மனோ கணேசன்
## (கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 13)

## என்னை "செய்ய" நினைத்த மஹிந்த-கோத்தா அரசை நான் "செய்த" கதை



- புலிகளுடன் தொடர்பு எனக்கூறி, என்னை பயங்கரவாத தடுப்பு பிரிவில் வாக்குமூலம் தர பொலிஸ் மா அதிபர் அழைத்தார்.
- "எனக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருந்தது என்பதை ஏற்கிறேன்" என என் வாக்குமூலத்தை ஆரம்பித்தேன்.
- ஜனாதிபதி சந்திரிகா, அவரது செய்தியை புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கொடுக்க சொன்னார், என்றேன்.
- மேத்தானந்த எல்லாவள தேரர் என்னிடம் "புலிகளை சந்திக்க ஏற்பாடு செய்து தாருங்கள்" என்று கேட்டார், என்றேன்.
- 2005 ஆம் வருட ஜனாதிபதி தேர்தலின் முன் என்னிடம் அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னெண்டோ புள்ளேவும், பசில் ராஜபக்சவும், புலிகளுடன் தொடர்பு ஏற்படுத்தி தாருங்கள் என்றார்கள், என்றேன்.
- "சொன்னதை அப்படியே எழுதப்பா, ஒப்பமிட முன் வாசிப்பேன், எனக்கு சிங்களம் தெரியும்" என்றேன்.
- என்னை உள்ளே வைத்து செய்ய நினைத்த மஹிந்த-கோத்தா அரசை நான் உள்ளே போய் செய்தேன் என நினைத்தேன்.

---

**காலகட்டம்: கொழும்பில் அரச பயங்கரவாதத்தின் உச்சகட்டம். ஒட்டுக்குழுக்களும் களத்தில். படுகொலை, வெள்ளை வான் கடத்தல், அடாத்தாக கைது... என்ற அடக்குமுறைகள் நிகழ்ந்துகொண்டிருந்த 2007 ஆம் வருடம்**

---

கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவிற்கு வந்து வாக்குமூலம் தரும்படி, என்னை பொலிஸ் மா அதிபர் அழைத்தார். "பயங்கரவாத தடுப்பு பிரிவின் (டிஐடி) இயக்குனரை என்னுடன் பேச சொல்லுங்கள்" என்றேன்.

சிறிது நேரத்தில் டிஐடி இயக்குனர் அழைப்பில் வந்தார். அவர்களது விசாரணையில் இருக்கும் ஒரு புலி உறுப்பினர் "மனோ நம்ம ஆளு" என்று கூறினாராம். அதன் அடிப்படையிலே என்னை விசாரிக்கனும் என்றார். "சபாநாயகருக்கு அறிவித்தீர்களா"? என கேட்டேன். ஆம் சார். எழுத்து மூலமாக அறிவிப்போம் என்றார்.

"நான் வராவிட்டால் என்ன செய்வீர்கள்" என கேட்டேன்.

"சாட்சியங்களை நீதிமன்றில் சமர்ப்பித்து அழைப்பாணை பெறவேண்டும், ஐயா. நீங்கள் வந்து வாக்குமூலம் வழங்கினால் போதும். அழைப்பாணைக்கு எங்களை தயவுசெய்து தள்ள வேண்டாம், ஐயா" பணிவாக பதில் வந்தது.

இந்த அதீத பணிவு சரியில்லேயே என உணர்ந்தபடி "சரி, நாளை வருகின்றேன்" என்று சொல்லி, அடுத்தநாள் காலை 9 மணிக்கு நான் டிஐடிக்கு சென்றேன்.




அவ்வேளை கொழும்பிலே தமிழர்கள் பலர் கடத்தப்பட்டு கொலை. அடாவடியாக பெருந்தொகையானோர் கைது. பொதுவாக ஒரு அச்சமான சூழல்.

மறுநாள் காலை, நான் டிஐடிக்கு புறப்படும் போது, கட்சியின் அடிமட்ட உறுப்பினர்களை அழைத்து போய், டிஐடிக்கு எதிரில் தெருவில் நிறுத்தி கோஷம் எழுப்பியிருக்க முடியும். அதை நான் செய்ய விரும்பவில்லை. கைது செய்யப்பட்டு, நான் ஒருவேளை மீண்டும் வெளியே வராவிட்டால், இந்த அப்பாவி தொண்டர்கள் ஆபத்தில் விழுவார்கள்.

ஆகவே, காலையிலே டிஐடி செல்ல உள்ளதை முதல் நாள் இரவே கட்சியில் 2ம், 3ம் அந்தஸ்துகளில் இருந்த மாகாண சபை உறுப்பினர்கள் பிரபா கணேசன், குமரகுருபரன் ஆகியோருக்கு கூறியிருந்தேன்.

துணையாக அவர்களும் வந்தால் நலமா இருக்கும் என்று அவர்கள் இருவரையும் காலையில் பேசியில் அழைத்தேன்.

இரண்டு தொலைபேசிகளும் அணைக்கப்பட்டிருந்தன. வீடுகளில் "ஐயா வீட்டில் இல்ல". அவர்கள் என்னுடன் வர விரும்பவில்லை.

எனது செயலாளர் பிரியாணியை அழைத்து "நான் போகிறேன். எம்பீ ஜயலத் ஜெயவர்தனவை அழைத்துக்கொண்டு அங்கே வாருங்கள்" என்று கூறிவிட்டு நான் டிஐடிக்கு சென்றேன்.

டிஐடியின் இயக்குனர் வரவேற்றார். சுமூகமாக அழைத்து சென்று தனி அறையில் அமரச்செய்து அவரும், பொலிஸ் எழுத்தர் ஒருவரும் வாக்குமூலம் எடுக்க ஆரம்பித்தார்கள்.

அந்நேரம் டிஐடி அலுவலகம் கொழும்பு துறைமுக கலங்கரைவிளக்க கடலோர பாதையில் இருந்தது. இன்று கிங்ஸ்பரி ஓட்டலை ஒட்டி துறைமுகத்தை நோக்கி செல்லும் வீதி.

தடுப்பில் உள்ள ஒரு புலி உறுப்பினர், எனக்கும், அவர்களுக்கும் தொடர்பு இருந்ததாக கூறினார். ஆகவே என்னை விசாரிப்பதாக சொன்னார்கள்.

விஷயத்தை புரிந்துகொண்டேன். கொஞ்சம் வாக்கு பிசகினாலும் என்னை இறுக்கி விடுவார்கள். இவன்கள் கில்லாடி. நான் பலே கில்லாடி என காட்ட தீர்மானித்தேன்.

வாக்குமூலம் தருகிறேன். அப்படியே எழுத வேண்டும். எனக்கு சிங்களம் விளங்கும். வாசித்துவிட்டு ஒப்பமிடுவேன் என்றேன்.

இத்தகைய தருணங்களில் வழமை போல் எனக்கு சிங்களம் தெரியாது. தமிழில் எழுது என அடம் பிடிக்கலை.

நான் சொல்வதை அப்படியே எழுதுகிறார்களா என எழுத்தரின் எழுத்துக்களை பார்த்தபடி தொடங்கினேன்.

"எனக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருந்தது என்பதை ஏற்கிறேன்." என்று ஆரம்பித்தேன். போலீஸ் எழுத்தர், நிமிர்ந்து என்னை பார்த்துவிட்டு எழுத தொடங்கினார்.

எனது கூற்று அவருக்கு ஆச்சரியத்தை தந்தது ஆச்சரியமல்லவே.

"2004 ஆம் வருடம் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, அவரது செய்தியை கொண்டு போய் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கொடுக்க சொன்னார். நான் சென்று கொடுத்தேன்".

நான் சொல்வது சரியா எழுதப்படுதா என பார்த்தேன்.



அதென்ன செய்தி என பணிப்பாளர் கேட்கவில்லை.

இடையிடையே சொல், பொருள், எழுத்து பிழைகளை சுட்டிக்காட்டி திருத்தித் தொடர்ந்தேன்.

அவ்வேளை புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு. புலிகள் தடையான இயக்கமல்ல. அதற்கு பிறகு மேத்தானந்த எல்லாவள தேரர் என்னை அழைத்து, "புலிகளை சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள்" என கேட்டார், என்றேன்.

அப்படியே எழுதுகிறார்களா என்று பார்த்தேன்.

விசாரணை நடந்தது 2005-2010 காலப்பகுதி. மகிந்த ஜனாதிபதியாக, கோத்தா பாதுகாப்பு செயலாளராக, பசில் பொருளாதார பொறுப்பாளராக, போரை உக்கிரமாக நடத்திய காலம்.

6ஆம் பாராளுமன்றம். நான் சொன்ன மேத்தானந்த தேரர், அரசுக்கு ஆதரவான ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முக்கிய எம்பி.

அடுத்துதான் அதிர்ச்சி குண்டு.

"2005ஆம் வருட ஜனாதிபதி தேர்தல் நடைபெற முன் (மாதம் திகதியை சொன்னேன்) அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னெண்டோ புள்ளேயும், பசில் ராஜபக்சவும் எனது வீட்டுக்கு வந்தார்கள்." என்று கூறி எழுதுங்கள் என்றேன்.

எழுத்தர் எழுதுவதை நிறுத்திவிட்டு அங்கிருந்த பணிப்பாளரை பார்த்தார்.

திருடனுக்கு தேள் கொட்டியதை போல், திருதிருவென பணிப்பாளர், "சார், அடுத்த கெபினில் (தடுப்புக்கு அப்பால்) நாம் கைது செய்துள்ள புலி சந்தேக நபர் இருக்கிறார். அவர் முகத்தை நீங்கள் பார்க்க வேண்டாம். இங்கே நான் உங்களிடம் கேள்வி கேட்பேனாம். அவரிடமும் கேட்பேனாம். இருவரும் பதில் சொல்லுவீர்களாம். அப்படி விசாரணையை முடிப்போமா?" என்று அப்பாவி முகத்துடன் கேட்டார்.

உண்மையில் அந்த அறை முழுமையாக சுவரால் மூடப்பட்ட அறையல்ல. பலகை தடுப்பில் உருவாக்கப்பட்ட தனித்தனி சிற்றறைகள் (கெபின்). புலி உறுப்பினரை அடுத்த கெபினில் வைத்து, என்னை இந்த கெபினில் வைத்து விசாரிக்க டீஐடீ பணிப்பாளர் முயன்றார்.

"அப்பக்கம் இருப்பது யாரென எனக்குத் தெரியாது. நீங்கள் சொல்லி கொடுத்ததை அவர் சொல்வார். நான் ஒரு எம்பி. என்னிடம் இப்படி விசாரிக்க முயல வேண்டாம்." என்றேன், கடுமையாக.

பணிப்பாளருக்கு வியர்த்து களைத்து விட்டது. இடைவேளை எடுத்துக்கொள்வோம் என சொன்னார். அவர் அப்படி சொல்லும் போது நேரம் பகல் 12 மணி. அந்த வேளையிலேயே பெரிய சத்தம் கேட்டது.

நாங்கள் இருந்த அறைக்குள்ளே ஜயலத் ஜயவர்தன எம்பீயும், செயலாளர் ப்ரியாணியும் தள்ளிக்கொண்டு வந்தார்கள்.

பணிப்பாளர் எழுந்து "சார், நீங்கள் இந்த அறைக்குள் வரக்கூடாது" என்று ஜயலத்தை தடுத்தார். ஜயலத் என் முதுகில் தட்டிவிட்டு "அப்படியா, வெளியிலே இருக்கிறேன். ஆனால், எனது பையன் வரும்வரை (என்னைத்தான் பையன் - மகே கொல்லா - என்று கூறுகிறார்) அங்கேயே இருந்து அவரை கூட்டிக்கொண்டுதான் போவேன்" என்று கூறி வெளியே போனார்.



பணிப்பாளரும் வெளியே போனார்.

வெளியே ஜயலத் வரவேற்பறையில் இருந்த நீண்ட சாய்வு நாட்காலியில் கால் நீட்டி படுத்ததாகவும், மனோ கணேசனை கூட்டிக்கொண்டுதான் நான் போவேன் என்று சத்தம் போட்டதாகவும் பிறகு அறிந்தேன். பிரியாணியும், ஜயலத் உடன் இருந்தார்.

சற்று நேரத்தில் இப்போது அரசில், அப்போது ஐ தே க வில், இருந்த எம்பி ஜோன்ஸ்டன் பெர்னெண்டோ அங்கு வந்து முன்னறையில் எனக்காக காத்திருந்தார்.

எனக்கு பிரியாணி கொண்டு வந்த பகலுணவை நான் அங்கேயே சாப்பிட்டேன். பல பொலிஸ் அதிகாரிகள் அறைக்குள்ளே வந்தார்கள். அவர்கள் முகங்களில் புலிவாலை பிடித்துவிட்ட சங்கடம் தெரிந்தது.

புலி என்றுதானே என்னை அழைத்தீர்கள். இப்போது புலி வாலை பிடியுங்கள். என் வாக்குமூலம் மென்மேலும் தர்மசங்கடமாக இருக்க முடிவு செய்தேன்.

"வாருங்கள், சீக்கிரம் எழுதுங்கள்" என்று சொன்னேன். அமைதியாக மூவர் வந்தமர்ந்தார்கள். எழுத்தர் தனது அதிகாரியின் முகத்தை பார்த்துக்கொண்டே புத்தகத்தை விரித்து தயாரானார். நான் தொடங்கினேன்.

"பசில் ராஜபக்சவும், ஜெயராஜ் பெர்னெண்டோ புள்ளேயும் எனது இல்லத்திற்கு வந்தார்கள். ஜெயராஜ், புலிகளிடம் தொடர்புகளை ஏற்படுத்தி தரும்படி என்னிடம் கேட்டார். அவ்வேளை புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட இயக்கமில்லை".

"அரசியல் பிரிவுடன் தொடர்பு இருந்தது. வேறு பிரிவுகளுடன் தொடர்பில்லை" என்று ஜெயராஜுக்கு கூறினேன்", என்றேன்.

"அது 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருந்த நேரம். மஹிந்த வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். அவ்வேளை, புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி தர சொன்னது எதற்காக என அவர்கள் சொல்வில்லலை. ஆனால், அது எனக்கு புரிந்தது".

"அரசியல் அடிப்படையில், அவர்கள் தடைசெய்யப்படாத சட்டபூர்வமான அமைப்பாக இருந்த காலத்தில் எனக்கு தொடர்பு இருந்தது. புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தும்படி என்னுடன் ஜனாதிபதி சந்திரிக்கா, மேத்தானந்த தேரோ எம்பீ, இப்போது அமைச்சர் ஜெராஜ் பெர்னெண்டோ புள்ளே மற்றும் பசில் ஆகியோர்தான் கோரிக்கை விடுத்தார்கள்".



(தொடர்ச்சி 29 பக்கம்)

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto



*Continued from last week…*

During these tumultuous and turbulent times sustaining the morale of AES members was difficult. On 04, December 1961 a new Treasury Circular No. 560 stipulated that Tamil public servants must pass a proficiency test in Sinhala language. There was no requirement that a Sinhalese who is not proficient in Sinhala should study and pass exams. Sinhalese public servants were presumed literate in their mother tongue. According to Circular No. 560, a Tamil public servant is required to pass a test in Sinhala at 3rd standard level within one year from 1st January 1961, a test at 5th standard level within two years and at J. S. C. standard within three years. The Circular provided for suspension of increment falling due after February 17, 1962 in case an officer failing the test. Kodeeswaran did not present himself for the requisite examination and, therefore, his annual increment of Rs.120 which fell due on April 1, 1962 was suspended.

Out of fear for their future, some members with family to support succumbed to the relentless psychological pressure exerted by the government. It was, therefore, no surprise a few of our colleagues' broke ranks and clandestinely started attending Sinhala classes conducted by the government. At the beginning the exams were made easy and almost everyone who sat for the exam passed. That was a subterfuge the government adopted to break the boycott by the Tamil public servants not to study Sinhala language. Later, the government applied the brake and made passing exams much more difficult and almost impossible.

Having been betrayed and let down by our Sinhalese colleagues, we decided to seek support from the ITAK. Almost daily we used to meet at Thanthai Chelvanayakam' s house at 16, Alfred Gardens to discuss the problems caused by the implementation of Sinhala as the only language of administration. The government gave deadlines after deadlines to non-Sinhalese officers to learn Sinhala and pass exams or face dismissal. After lengthy discussion and consultation, it was decided to mount a legal challenge to the Sinhala Only Act itself. Our Lawyers whom we consulted, told us to look for a member of the AES who has not sat for Sinhala language exams and as a consequence his increments withheld. A few came forward to file the petition, but backed out at the last minute out of fear and/or pressure from their families. At that time Kodeeswaran, a member of the AES, was attached to the Kegalle Kachcheri. I knew him earlier having worked with him (1957-59) at the land branch of the Trincomalee Kachcheri. We stayed in a cottage near N.R. Rajavarothiam, MP's house. While working Kodeeswaran was preparing for his London BA exam. He soon graduated and his degree helped him to gain admission to the Law College and qualify as an Attorney at Law. Unfortunately, after 1966 I lost contact with him. As an Attorney-at-law Kodeeswaran was practicing in Jaffna and when I went there in 2004, I couldn't meet him. Kodeeswaran passed away on February 15th 2019 at the age of 85 at his Colombo residence after ailing for some time. He will be remembered for his selfless service and as an indefatigable fighter for Tamil people rights

In 1957 - 59 the state aided Allai - Kanthalai Sinhalese colonization was wrapping - up. This colonization scheme was at Kantale (Kantalai) tank where peasants from outside Trincomalee District were settled in the then Tamil dominant village of Kantale (Kantalai), 39 km south-west of the Trincomalee town.

Under Allai-Kantalai colonization scheme 65% of the allotments was given to Sinhalese and 35% to Muslims. Under Kantalai colonization scheme the intake was 77% Sinhalese and 23% Tamil speaking. Under Morawewa (Muthalikkulam) scheme – though initially allotments were made on a proportionate basis, subsequent violence directed against Tamil settlers on a regular basis by the Sinhalese forced the Tamils to evacuate. Today it is a 100% Sinhalese colony. In 1972 Nochchikulam was re-named Nochiyagama and Sinhalese were settled down in 5,000 acres of land forcibly acquired from Tamils living in Kappalthurai and Paalampoddaru.

The colonization scheme was extended to Tamil speaking areas of Anuradhapura District as well. A scheme was started at Padiviya Tank (Pathavik Kulam), 65 km north-east of Anuradhapura town. Parts of the scheme lay in Trincomalee District but were administered by the Sinhalese majority Anuradhapura District. Land Development Department employees from this scheme took part in the 1958 anti-Tamil riots. More on this subject later.



Since, Kodeeswaran had refused to study the Sinhala language and declined to sit for exams, his increment was stayed in 1962. So, he was the ideal person to sue the government on the ground that the Treasury circulars were unreasonable and illegal as the Official Language Act of 1956 transgressed the prohibition against discrimination provided for in section 29(2) of the Soulbury Constitution.

When Kodeeswaran was contacted, he without batting an eye came down to Colombo and signed all the legal documents required to file the case at the Colombo District Court. Ironically Kodeeswaran was fluent in his Sinhalese both reading and writing! Later in 1965, Kodeeswaran was elected President of AES uncontested and myself General Secretary after a fiercely contested election by a majority of 4 votes!

AES proceeded to challenge the Sinhala Only Act in the courts for a declaration that Kodeeswaran was entitled to an increment of salary, with effect from April 1, 1962. The sole question for determination was whether the he was entitled to for the payment of increments withheld by the government and the validity of the Official Language Act, 1956, and the effect of the Treasury Circular, No. 560 of December 4, 1961. Kodeeswaran was appointed on November 1, 1952, to a clerkship in the general clerical class of the general clerical service of Ceylon. He was, promoted to the Executive Clerical Class on 1st October, 1959 on the results of a competitive examination.

Additionally, Kodeeswaran asked for a declaration that the Official Language Act (Sinhala Only Act) was an infringement of Clause 29 (2) of the Soulbury Constitution of independent Ceylon. Clause 29(2) exclusively written to safeguard the rights of minority communities and groups said; "No law shall make persons of any community or religion liable to disabilities or restrictions to which any person of other communities or religions is not made liable." It also said it should not "confer on persons or any community or religion any privilege or advantage which is not conferred on persons of other communities or religions." Yet, violating Clause 29, the first Parliament in its first year adopted the Citizenship Act No.18 of 1948 and the Ceylon Parliamentary Election (Amendment) Act No. 48 of 1949 that together and de-citizenised and disfranchised the Hill country Tamils who were then citizens and voted at the first parliamentary elections in 1947. (


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



பொதுச்சபைக் கூட்டம், General Meeting- 2023.

V United Care For Kids Inc Ontario அமைப்பினது வருடாந்த பொதுக் கூட்டமானது எதிர்வரும் வைகாசி மாதம் 27ந் திகதி 2023ம் ஆண்டு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அங்கீரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது சமூகந் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 635 Middlefield Rd, Scarborough (ONT). காலம்: வைகாசி 27, 2023. பிற்பகல் 1.00 மணி.(சனிக்கிழமை).

The Annual General Meeting of V United Care For Kids Inc Ontario is scheduled to be held on the 27th of May in the year 2023. All authorized members of the General Assembly are therefore requested to attend this meeting.

Location: 635 Middlefield Rd, Scarborough (ONT). Date: May 27, 2023, 1.00 PM (Saturday).


Thank you.

நிகழ்ச்சிநிரல். Agenda.

1. மௌன வணக்கம். Silent salutation.
2. தலைவர் உரை. Chairman's Speech.
3. செயலாளர் அறிக்கையும், செயற்திட்ட அறிக்கையும். Secretary's Report and Project Report.
4. பொருளாளர் அறிக்கை. Treasurer's Report.
5. சமர்ப்பிக்கப்பட்டஉபவிதித் திருத்தங்கள். Amemdments to the bill submitted.
6. இயக்குனர்சபை உறுப்பினருக்கான தேர்வு. Selection for a member of the Board of Directors.
7. பிறவிடயங்கள். Other matters.
8. கூட்ட நிறைவு. Closure of meeting.

# "டி எஸ் சேனநாயக்க, ஜே ஆர் ஜெயவர்தன வழியில் நான்" அப்போது நாடு?

- சிவா பரமேஸ்வரன்



எந்தவொரு விஷயத்திலும் தொலைநோக்குப் பார்வை தேவை தான். அது நாட்டு நலன், திட்டங்கள், குடும்பம், வர்த்தகம் என்று எதிலும் அந்த சிந்தனை மற்றும் பார்வை அவசியம். அவ்வகையில் இலங்கை இன்னும் 25 ஆண்டுகள் கழித்து 2048ஆம் ஆண்டு தனது சுதந்திரத்தின் 100ஆவது ஆண்டைக் கொண்டாடும் போது நாடு அபிவிருத்தி அடைந்த நாடாகவோ அல்லது அந்த பாதையில் செல்ல வேண்டும் என்று அரசும் மக்களும் ஆசைப்படுவதில் தப்பில்லை. அந்த எண்ணம் இருக்கவும் வேண்டும்.

ஆனால், ஆசை என்பது வேறு யதார்த்தம் என்பது வேறு என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டுள்ளார்களே என்பதில் பல கேள்விகளும் ஐயங்களும் உள்ளன.

அப்படித்தான் "அழுகிற குழந்தைக்கு வாழைப்பழத்தைக் கொடுப்பது போல்" சில விஷயங்களை ரணில் விக்ரமசிங்க சில நாட்களுக்கு முன்னர் வெளியிட்டார். அவர் கட்சி சார்பில் நடைபெற்ற மே தின நிகழ்விற்கான வாழ்த்தில் கூறியுள்ளார். இலங்கையில் மே தின ஊர்வலம், பேரணி, பொதுக் கூட்டம் போன்ற கேலிக் கூத்துகள் காலங்காலமாக நடைபெற்று வருகின்றன. அந்த கூட்டங்களின் நோக்கமே அரசியல்வாதிகளுக்கு புரியவில்லையா என்ற சந்தேகமும் எழுகிறது. தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தும் வகையில், உழைக்கும் தொழிலாளர்கள் ஒன்றுகூடி தமது பலத்தை காண்பிப்பதற்காகவே மே தின கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

ஆனால், துரதிஷ்டவசமாக இலங்கையில், அது அரசியல் மயப்படுத்தப்பட்டு தொழிலாளர்கள் புறந்தள்ளப்பட்டனர். மே தின கூட்டத்தின் போது அரசியல் (வியா) வாதிகள் ஏதோ கொள்கை விளக்க பிரகடனம் போன்று இயலாத விʼயங்களை உணர்ச்சிகரமாக சொல்ல மக்கள் அதை உண்மை என்று நம்பி வாக்குச்சீட்டில் புள்ளடியிடுவது இலங்கையின் சாபக்கேடுகளில் ஒன்றாகிவிட்டது.

அப்படித்தான் அண்மையில் "பின்வாசல் வழியக ஜனாதிபதியான" ரணில் விக்ரமசிங்க தனது கட்சியினர் முன்னெடுத்த மே தின நிகழ்விற்கான வாழ்த்தில் சில விஷயங்களை தெரிவித்துள்ளார். அதை முறை மேலோட்டமாக படிக்கும் போதும் சரி, இரண்டாவது முறையாக ஆழமாக படிக்கும் போதும் சரி, அதிலுள்ள ஓட்டைகளையும் நடைமுறைக்கு ஒவ்வாத விஷயங்களையும் தெளிவாகக் காணமுடிகிறது. அவர் அந்த வாஅழ்த்தில் தெரிவித்துள்ள பல விஷயங்கள்.....ஏன் முழுமையாகவே நடைமுறைக்கு ஒத்துவராதவை என்றே தோன்றுகிறது.

அதில் அவர் முக்கியமாக ஒன்றை குறிப்பிடுகிறார். அதாவது 2048 இலங்கைக்கான அபிவிருத்தி ஆண்டாகும் அதை நோக்கி பயணிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். இதை நான் கூறவில்லை. ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அதிகாரபூர்வ அறிவிப்பு கூறுகிறது. 2048 ஆம் ஆண்டை இலங்கையின் அபிவிருத்தி ஆண்டாக மாற்ற நாம் கைகோர்ப்போம் என்கிறது அவரது செய்திக் குறிப்பு. அப்படியென்றால் அடுத்த கால் நூற்றாண்டிற்கு - 25 ஆண்டுகளிற்கு - இலங்கை அபிவிருத்தி அடையது என்பதாகத்தானே எடுத்துக்கொள்ள வேண்டும். அதை இரண்டு விதமாக பார்க்க முடியும் என்று கருதுகிறேன். அவர் உண்மையைக் கூறுகிறார். நாடு முன்னேற்றம் அடைய குறைந்தது இரண்டரை தசாப்தங்களாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறார். சரி, அவர் எண்ணப்படி இலங்கை 2048இல் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுவதற்கு அரசிடம் என்ன திட்டத்தை வைத்துள்ளது?

இன்று நாடு வங்குரோத்து நிலையில் உள்ளது. வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கும் சொத்துகளை சீனாவிற்கு அடிமை சாசனமாக எழுதிக் கொடுக்கிறது இலங்கை அரசு. இன்னும் செலுத்த வேண்டிய கடன்கள் ஏராளம். அப்படி பார்த்தால் அடுத்த 25 ஆண்டுகளில் நாட்டில் அரசிற்கு சொந்தமான சொத்துக்கள் ஏதும் இருக்குமா என்கிற ஐயம் எழுகிறது.

அடுத்து அவர் தெரிவித்துள்ள முத்தான கருத்து என்பது, "புதிதாக சிந்தித்து புதிய பாதையில் செல்லும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை மாற்றுவோம். ஐக்கிய தேசியக் கட்சி புதிதாக சிந்தித்து புதிய பாதையில் செல்ல விரும்பியிருந்தால் - அதை ரணில் உளப்பூர்வமாக செய்ய சித்தமாக இருந்திருந்தால், இன்று கட்சி பிளவுண்டிருக்காதே! ரணிலுடைய "நரித்தனத்தை" வைத்துப் பார்க்கும் போது அவர் அடுத்தவர்களை வளரவிட்டு கட்சியை உயிர்ப்பித்து அதை புதிய பாதையில் இட்டுச் செல்வாரா? உண்மையான பதில்.....இல்லை என்பதாகும்.

இன்றைய நிலையில் அது ஐக்கியமில்லாத கட்சியாக மட்டுமே உள்ளது அல்லது சிங்களத்தில் மக்கள் நையாண்டி செய்வது போல் "அலி ஜன பெரமுன" அதாவது யானை மக்கள் கட்சி அல்லது யானை மொட்டுக் கட்சி என்றே அழைக்கப்படுகிறது. ராஜபக்சக்களின் தயவில்லாமல் அவரால் ஒரு சிற்றூழியரைக் கூட நாட்டில் நியமிக்க முடியாது என்பதே யதார்த்தம். அவரது சிந்தனை முழுவதும் தன்னை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திய ராஜபக்சக்களிற்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதிலேயே இருக்கும் போது, எங்கிருந்து அவருக்கு கட்சியை வளர்த்தெடுக்க நேரமுள்ளது. அவருக்கு தற்போது 74 வயதாகிறது. அதையும் கணக்கில் எடுக்க வேண்டும். அவரால் இன்னும் எவ்வளவுகாலம் ஆக்கபூர்வமாக அரசியலில் ஈடுபட முடியும்?

அவர் அடுத்து தெரிவித்துள்ள முக்கியமான கருத்து, "டி.எஸ். சேனநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்தன ஆகியோரின் கொள்கைகளை பின்பற்றி இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்வேன்" என்பதாகும்.

இதை வாசித்த உடனேயே எனக்குள் எழுந்த கேள்வியானது அந்த இருவரும் நேர்மையாக அரசியல் செய்திருந்தால், இலங்கை இந்தளவிற்கு அழிவுப் பாதையில் சென்றிருக்காதே என்பது தான். உலகின் பல பகுதியிலிருந்தும் புலம் பெயர்ந்த தமிழர்களும் இதே கருத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டனர்.

டி. எஸ் மற்றும் ஜே.ஆர் எப்படி அரசியல் செய்தனர் என்பதை இன்றைய இளைய தலைமுறையினர் மற்றும் இலங்கை தொடர்பான ஆய்வுகளைச் செய்பவர்கள் மூத்த தலைமுறையினரிடம் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும்.

நாடு இன்று இருக்கும் பல வகையான நெருக்கடிகளிற்கு இனப் பிரச்சனை முக்கியமானதொரு காரணமாகும். இனவாதத்தை ஊட்டி வளர்த்ததில் அந்த இருவருக்கும் பெரும் பங்குள்ளது என்பதை சரித்திரம் சான்றுகளுடன் கூறுகிறது.

இலங்கை விடுதலையடைந்த அதே 1948ஆம் ஆண்டு இலங்கை குடியுரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமூலமாக கொண்டுவரப்பட்டு பின்னர் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. நாடு விடுதலையடைந்த சமயத்தில் இலங்கையில் 70,000க்கும் அதிகமான இந்திய வம்சாவளி தமிழர்கள் வாழ்ந்தனர். ஆனால், அந்த சட்டத்தின்படி 5000 பேருக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்பட்டது. மீது 65,000 பேர் ஒரே இரவில் நாடற்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். அதன் தாக்கம் இன்றளவிற்கும் உள்ளது. அந்த சட்டத்தின்படி இந்திய வம்சாவளி மக்களிற்கு அநீதி இழைக்கப்படாமல் இருந்திருந்தால், இன்று நாடாளுமன்றத்தில் குறைந்தது 25 உறுப்பினர்கள் இந்திய வம்சாவளி மக்கள் இருந்திருப்பார்கள் என்று ஒரு ஆய்வு கூறுகிறது. ஆனால் இற்றைவரை இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய அம்மக்கள் நவகாலனித்துவ அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

அதுவும் ஒருவகையில் "இனப்படுகொலையே" என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். வடக்கு-கிழக்குப் பகுதியில் அரசு ஆயுத ரீதியான போரை தொடங்கும் முன்னரே, குடியுரிமை (பறிப்பு) சட்டத்தின் கீழ் மலையக மக்கள் அல்லது இந்திய வம்சாவளி மக்கள் ஒரு வகையில் இனப்படுகொலைக்கு ஆளாகினர்.

ஐ நாவின் விழுமியங்களின்படி ஒரு சமூகத்தை திட்டமிட்டு அழித்தல், அவர்களது கலாச்சார பாரம்பரியத்தை நசுக்குதல், அவர்களின் உரிமைகளை பறித்தெடுத்து நிர்கதியாக்குதல் ஆகியவையும் ஒரு வகையில் இனப்படுகொலையே ஆகும். இன்றும் நாட்டிலேயே சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய மக்களாக தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் இந்திய வம்சாவளி தமிழர்களே. அதே போன்று நாட்டிலேயே அதிகப்படியான மதுக்கடைகள் இருப்பதும் மலையகப் பகுதியிலேயே. அவர்கள் உழைப்பை சுரண்டி, ஈட்டும் சிறிதளவு ஊதியத்தையும் குடியின் மூலம் அவர்களிடமிருந்து பறித்து அவர்களை நிரந்தர அடிமைகளாக வைத்திருப்பதும் ஒரு வகையில் இனைப்படுகொலை மற்றும் அப்பட்டமான மனித உரிமை மீறல் என்று பன்னாட்டு ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவையெல்லாம் நாட்டின் முதல் பிரதமர் டி எஸ் சேனநாயக்க கொண்டுவந்த சட்டத்தின் விளைவே. அவரது கொள்கைகளை தொடர்ந்து பின்பற்ற போவதாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஜனாதிபதி கூறுகிறார். அப்படியென்றால் இந்திய வம்சாவளி மக்கள் தொடர்ந்தும் துன்பங்களிற்கு ஆளாக்கப்படுவார்கள் என்ற செய்தியை சொல்கிறாரா ரணில்.

அடுத்து "நரி" ஜே ஆர் ஜெயவர்தனவின் கொள்கையையும் பின்பற்ற போவதாகவும் அவர் கூறியுள்ளார். ஜே ஆர் என்ன செய்தார், அதன் காரணமாக நாடு எப்படி சீரழிந்தது என்பதை உலகமே அறியும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை கொண்டுவந்து சிறுபான்மையினர் எக்காலத்திலும் ஆட்சியின் தலைமைக்கு வந்துவிட முடியாதபடி செய்த புண்ணியவான் ஜே ஆர்.

தேர்தலை நடத்தாமல் தனது ஆட்சியை நீட்டிப்பு செய்து ஜனநாயகப் படுகொலையைப் புரிந்தவர் என்ற விமர்சனத்திற்கு ஆளானவர் தான் இன்றைய ஜனாதிபதியின் மாமாவான அன்றைய ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன. சிங்கள மொழியை ஆட்சி மொழியாகவும் பௌத்ததை நாட்டின் முதன்மை மதமாகவும் ஆக்கும் சட்டங்களிற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர் ஜே ஆர் என்பது நாட்டின் அரசியல் வரலாறு.

எக்காலத்திலும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக கூட என்பதில் மிகவும் தெளிவாக இருந்த ஜே அர் அதன் காரணமாகவே நாடாளுமன்ற ஜனநாயக முறையை மாற்றி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை கொண்டு வந்தார். இதை யாராலும் மறுக்க முடியாது.

அவரால் 1978இல் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை நாட்டை பல தசாப்தங்கள் பின் நோக்கிக் கொண்டு சென்றது. அதன் காரணம் கடந்த 45 ஆண்டுகளாக நாடாளுமன்றம் என்ற கட்டமைப்பு பலவீனமான நிலையில் உள்ளது. அனைத்து அதிகாரங்களும் நாடாளுமன்றம் என்ற கூட்டுப் பொறுப்பிலிருந்து ஒரு தனி நபரின் ஆதிக்கத்திற்கு வருவதற்கு காரணமாக இருந்தவர் ஜே ஆர்.

ஜே ஆர் ஆட்சி காலத்தில் தான் தமிழ் மக்கள் மீதான வன்முறை கட்டவிழுத்துவிடப்பட்டது. தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் நாட்டில் கெடுபிடிகள் அதிகரித்தன. பயங்கரவாத தடைச் சட்டம் எனும் அழிக்க முடியாத அரக்கனை கொண்டு வந்தவரும் இன்று ரணில் மேற்கோள் காட்சி சிறந்த ஆட்சியை அளிப்பேன் என்று கூறும் ஜெ ஆர் ஜெயவர்தன தான்.

தமிழ் மக்கள் மீதான ஆயுத ரீதியான அடக்குமுறைக்கு அடிகோலிட்டவரும் அவரே. பின்னர் வடக்கு-கிழக்கே ஆயுதப் போராட்டம், அதனால் நாட்டில் ஏற்பட்ட கொடுமைகள், இன்றும் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் ஆகியவை எல்லாம் வரலாற்று பக்கங்களில் பதியப்பட்டவை.

ஆக சிறுபான்மையினரை திட்டமிட்டு சீரழித்த டி எஸ், ஜே ஆர் ஆகியோரின் வழியை பின்பற்றி 2048ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கப் போவதாக ரணில் கூறுகிறார்.

# அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு முக்கியத்துவம் குறைக்கப்பட்டதா? அமைச்சரவை மாற்றத்தால் தமிழக அரசியலில் பரபரப்பு



பழனிவேல் தியாகராஜனிடமிருந்த நிதித் துறை மாற்றப்பட்டிருப்பது திமுகவில் மட்டுமின்றி தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.அரசியல் ரீதியாக பாஜகவுக்கும், நிதி விவகாரங்களில் மத்திய அரசுக்கும் கடும் சவாலாக இருந்தவர் பழனிவேல் தியாகராஜன். நிதி சிக்கனத்துக்காக முதல்வர் மு.க.ஸ்டாலினால் பலமுறை பாராட்டப்பட்டவர். இதன் மூலம் ஏறுமுகத்தில் சென்று கொண்டிருந்த பழனிவேல் தியாகராஜனிடம் இருந்து ஏன் திடீரென நிதித் துறை பறிக்கப்பட்டது? என்ற கேள்வியும், விவாதமும் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதுகுறித்து திமுக முக்கிய நிர்வாகிகள் கூறியதாவது: திமுக ஆட்சிக்கு வந்த தொடக்கத்தில் பழனிவேல் தியாகராஜன், கட்சியின் தகவல் தொழில்நுட்பச் செயலாளராகவும், நிதி அமைச்சராகவும் செல்வாக்குடன் திகழ்ந்தார்.முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது மருமகன் சபரீசன் ஆகியோருடனான மாநகர் கட்சியிலும் இவரது செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது. மேயர் தேர்தலில் அமைச்சர் பி.மூர்த்தி, முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் மற்றும் தளபதி ஆகியோரை ஓரங்கட்டி தனது ஆதரவாளர் இந்திராணியை மேயராக்கினார்.

இதற்கிடையே, அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தான் கட்சியில் வகித்து வந்த மாநில தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளர் பதவியை ராஜினாமா செய்தார்.அதேநேரத்தில் மதுரை மாநகர் செயலாளர் தேர்தலில் தனது செல்வாக்கைக் காட்ட பழனிவேல் தியாகராஜன் முயன்றார். அது பலனளிக்கவில்லை. இதனால், தனது ஆதரவாளரை மதுரை மாநகர் மாவட்டச் செயலாளராக்க முடியாமல் போனது.

அமைச்சர்கள் அதிருப்தி: இந்நிலையில், ஆட்சி நிர்வாகத்தில் நிதி சிக்கனம் என்ற பெயரில் துறை ரீதியான திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதில் மூத்த அமைச்சர்களுடன் முரண்பாடு ஏற்பட்டது. திமுக பொருளாளரும் அமைச்சருமான துரைமுருகன், அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் 'நிதி அமைச்சர் மனது வைத்தால் சில திட்டங்களை நிறைவேற்ற முடியும்' என சட்டப்பேரவையில் வெளிப்படையாகவே பேசினர்.

அமைச்சர்களின் அதிருப்தி, அரசு ஊழியர்கள் சங்கங்களுடன் நீடித்த பிரச்சினை போன்றவற்றால் நிதி அமைச்சர் பழனிவேல் சவால்களைச் சந்தித்ததோடு மட்டுமின்றி சர்ச்சைகளிலும் சிக்கினார்.அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தல் வரவிருக்கும் நிலையில்அரசு திட்டங்களைச் செயல்படுத்தாமல் நிதியைக் காரணம் காட்டி தள்ளிவைப்பது கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்று மூத்த அமைச்சர்கள் பலர் பழனிவேல் தியாகராஜன் மீது கட்சித் தலைமையிடம் புகார் கூறினர்.இந்தச் சூழ்நிலையில்தான் பழனிவேல் தியாகராஜன் பேசியதாக ஒரு ஆடியோவை பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டார்.

அது தனது குரல் இல்லை என்று அமைச்சர் மறுத்தாலும், அது தொடர்பாக அவர் சார்பிலோ, திமுக சார்பிலோ ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என கேள்விகள் எழுந்தன.ஒரே சமயத்தில் சபரீசன், உதயநிதியின் நம்பிக்கையை அவர் இழந்துவிட்டார் என்றும் சற்று ஆறப்போட்டு அவர் மீதான கோபம் வெளிப்படுத்தப்படும் என கட்சிக்குள் பரபரப்பாக பேசி வந்தனர். இந்நிலையில்தான் அமைச்சரவை மாற்றத்தில் பழனிவேல் தியாகராஜன் வசமிருந்த நிதித் துறை, தங்கம் தென்னரசு வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.கட்சிப் பதவி ஏதும் இல்லாதது, துறை மாற்றம் போன்ற காரணங்களால் பழனிவேல் தியாகராஜனுக்கு திமுகவில் முக்கியத்துவம் குறைந்துள்ளதோ? என்ற கேள்வி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

# தமிழக நிதி அமைச்சரானார் தங்கம் தென்னரசு டிஆர்பி ராஜாவிற்கு தொழில்துறை ஒதுக்கீடு

அமைச்சர் தங்கம் தென்னரசுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சராக இருந்த பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய அமைச்சர் டிஆர்பி ராஜாவிற்கு தொழில்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.தமிழக அமைச்சரவையில் புதிய அமைச்சராக டிஆர்பி ராஜா இன்று காலை பதவியேற்றுக் கொண்டார். முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் அவருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி, பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, அமைச்சர் டிஆர்பி ராஜாவிற்கு




தொழில்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 4 அமைச்சர்களின் துறைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, அமைச்சர் பழனிவேல் தியாகராஜனிடம் இருந்த நிதித்துறை, அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் இருந்து தொழில்துறை புதிய அமைச்சர் டிஆர்பி ராஜாவிடம் அளிக்கப்பட்டுள்ளது.அமைச்சர் மனோ தங்கராஜுக்கு பால் வளத்துறை அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் மனோ தங்கராஜிடம் இருந்த தகவல் தொழில்நுட்பத் துறை, அமைச்சர் பழனிவேல் தியாகராஜனிடம் அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் சாமி நாதனுக்கு தமிழ் வளர்ச்சி துறை கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளது.

# செந்தில் பாலாஜி மதுவிலக்குத்துறை அமைச்சரா... மது விற்பனைத்துறை அமைச்சரா? அன்புமணி கேள்வி



"ஒன்றிய அரசின் கல்விக்கொள்கையை ஏற்க நினைக்கும் திமுக அரசின் கொள்கை நிலைப்பாடும், நிர்வாகச் செயல்பாடும் தமிழக மாணவர்களுக்கும், மக்களுக்கும் மட்டுமல்ல, அறிஞர் அண்ணாவுக்கே செய்யும் கொடுந்துரோகம்'' என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசால் உருவாக்கப்பட்ட தேசியக் கல்விக்கொள்கை ஸ்ரீ 2020யை அடியொற்றி, மாநிலக் கல்விக்கொள்கை உருவாக்கப்படுவதாகக் கூறி, மாநில உயர்நிலைக் கல்விக்குழுவின் உறுப்பினரும், ஒருங்கிணைப்பாளருமான பேராசிரியர் ஜவகர் நேசன் பதவிவிலகியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

தேசியக் கல்விக்கொள்கையை ஏற்க மாட்டோமெனக் கூறிவிட்டு, இப்போது அதனையே மாநிலக் கல்விக்கொள்கையின் வாயிலாக அமல்படுத்தத் துடிக்கும் திமுக அரசின் செயல்பாடு வெட்கக்கேடானது.தேசியக் கல்விக்கொள்கையில் உள்ள நல்லவைகளை எடுத்துக் கொள்வோமெனக் கூறி, அவற்றிலிருந்து எண்ணும், எழுத்தும், இல்லம் தேடிக் கல்வி, தகைசால் பள்ளிகள், நான் முதல்வன், நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன் திட்டம் போன்ற அம்சங்களை செயலாக்கம் செய்து வந்த திமுக அரசு, இப்போது மாநிலக் கல்விக்கொள்கையையே மொத்தமாகக் காவிமயமாக்க முயல்வது கடும் கண்டனத்திற்குரியது.


பொதுப்பட்டியலிலுள்ள கல்வியை ஒன்றியப்பட்டியலில் இருப்பது போலக் கருதிக்கொண்டு ஒற்றைமயத்தையும், காவிக்கொள்கையையும் கொண்டு ஒன்றிய அரசால், எதேச்சதிகாரப்போக்கோடு உருவாக்கப்பட்ட தேசியக் கல்விக்கொள்கைக்கு மாற்றெனக் கூறி, மாநிலக் கல்விக்கொள்கையை உருவாக்க கடந்தாண்டு ஜூன் 1 அன்று ஓய்வுபெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் குழு அமைத்தது திமுக அரசு.

இந்நிலையில், அக்குழுவிலிருந்து பேராசிரியர் ஜவகர் நேசன் விலகியிருப்பதோடு, தேசியக் கல்விக்கொள்கைக்குச் சாதகமாக மாநிலக் கல்விக்கொள்கை உருவாக்கப்படுவதாகவும், அக்குழுவில் சுதந்திரமாகப் பணிசெய்வதற்குப் பெரும் இடையூறும், அதிகாரிகளின் மிதமிஞ்சிய தலையீடும் இருப்பதாகவும் கூறியிருப்பதன் மூலம் வெளிவரவிருக்கும் அக்கல்விக்குழுவின் வரைவறிக்கை மீதான நம்பகத்தன்மையே கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

மாநிலத் தன்னாட்சியென வாய்கிழியப்பேசும் திமுக அரசு, மாநில அரசின் தன்னுரிமையைக் காவுகொடுத்து, ஒன்றிய அரசின் கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தத் துணைபோவது அப்பட்டமான ஆரிய அடிமைத்தனமில்லையா? சனாதானத்திற்கு எதிரானது திராவிடமென முழங்கும் முதல்வர் ஸ்டாலின், கல்வியைக் காவிமயமாக்க எப்படித் துணைபோகிறார்? இதுதான் எல்லோருக்குமான ஆட்சியா? இதுதான் இருளகற்றும் விடியல் ஆட்சியா? ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு முன்வைக்கும் ஆரிய மாடலை அடியொற்றுவதுதான் திராவிட மாடல் ஆட்சியா?இதுதான் உங்களது பாசிச எதிர்ப்பா முதல்வரே? இதுதான் ஆரியத்தைத் திராவிடம் எதிர்க்கிற லட்சணமா?

பாஜக அரசு சொல்வதையெல்லாம் கேட்டு நடைமுறைப்படுத்துவதுதான் திமுகவின் பாஜக எதிர்ப்பரசியலா? சனநாயக விரோதம். எவ்வளவு காலம் இன்னும் மக்களை ஏமாற்றப் போகிறீர்கள்? ஒன்றிய அரசின் கல்விக்கொள்கையை ஏற்க நினைக்கும் திமுக அரசின் கொள்கை நிலைப்பாடும், நிர்வாகச் செயல்பாடும் தமிழக மாணவர்களுக்கும், மக்களுக்கும் மட்டுமல்ல; அறிஞர் அண்ணாவுக்கே செய்யும் கொடுந்துரோகம்.ஆகவே, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு அரசு இனியாவது தனது தவறைத் திருத்திக் கொண்டு, நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, தேசியக் கல்விக்கொள்கையையும், அதன் அம்சங்களையும் முற்றாக நிராகரித்து, தனித்துவமிக்க மாநிலக் கல்விக்கொள்கையை வடிவமைக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

# கனடா வாழ் பன்முகக் கலைஞர் ரஜீவ் சுப்பிரமணியம் தயாரிப்பில் சென்னையில் இறுதிக்கட்டப் படப்பிடிப்பில் மூழ்கியுள்ள இயக்குனர் வினோத் ராஜேந்திரன் தலைமையிலான 'FINDER" திரைப்படத் தயாரிப்பு குழுவினர்...




## தயாரிப்பாளர் கனடாவில் தங்கியிருக்கும் நிலையிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்படும் 'FINDER' திரைப்படத் தயாரிப்புக் குழுவினர்

கனடா வாழ் பன்முகக் கலைஞர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பில் சென்னையில் இறுதிக்கட்டப் படப்பிடிப்பில் மூழ்கியுள்ள இயக்குனர் வினோத் ராஜேந்திரன் தலைமையிலான 'FINDER' திரைப்படத் தயாரிப்பு குழுவினரை கனடா உதயன் குழுவினர் நேரடியாகச் சந்தித்து அங்கு இடம்பெறும் படப்பிடிப்பு மற்றும் எடிட்டிங் தொடர்பான விடயங்களை கண்டும் களித்தும் வந்துள்ளனர்.

மேற்படி 'FINDER' திரைப்படத் தயாரிப்பாளர் ரஜிவ் சுப்பிரமணியம் அவரம்கள் கனடாவில் தொழிலதிபராக விளங்குகின்றார். ஆனால் திரைப்படத் தயாரிப்பில் கொண்ட ஆர்வம் காரணமாக அனுபவமிக்க இளம் இயக்குனராக விளங்கும் வினோத் ராஜேந்திரனை இயக்குனராகக் கொண்டு 'FINDER' திரைப்படத்த தயாரிக்க முடிவு செய்தார்.

அவர் கனடாவில் தங்கியிருக்கும் நிலையில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்படும் 'FINDER' திரைப்படத் தயாரிப்புக் குழுவினர் படப்பிடிப்பு மற்றும் இறுதிக் கட்ட வேலைகள் தொடர்பாக தினமும் தயாரிப்பாளர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களுக்கு தகவல்களையும் முன்னேற்றங்களையும் அனுப்பி வருகின்றனர்.

இந்த வகையில் அண்மையில் சில நாட்கள் சென்னையில் தங்கியிருந்த கனடா உதயன் பிரதம ஆசிரியர் மற்றும் அவரது குழுவினர் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்படும் 'FINDER' திரைப்படத் தயாரிப்புக் குழுவினரைச் சந்தித்தனர். சில நாட்கள் இவர்களின் சந்திப்பு இடம்பெற்றது.

ஆரபி புரொடக்ஷன் நிறுவனர் ரஜிவ் சுப்ரமணியம் இணைந்து தயாரிக்கும் திரைப் படமான 'FINDER' இன் கதையானது, நிஜ வாழ்க்கை சம்பவங்களை அடிப்படையாக கொண்டு திரில்லர் சார்ந்த வகையில் உருவாகிறது.

சென்னையைப் பின்னணியாகக் கொண்டு அமைக்கப்பட்ட கதை,யாக இருந்தாலும், அமெரிக்காவில் உள்ள ஒரு அமைப்பு, அவர்கள் செய்யாத குற்றங்களுக்காக நீண்ட காலமாக சிறையில் இருப்பவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் நிரபராதி என்று நிரூபித்து, இழப்பீடு பெறும் ஒரு நிஜ வாழ்க்கைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது.

இயக்குனரம் வினோத் ராஜேந்திரன் இயக்கி வரும் இந்தப் படத்தில் பட முக்கிய நடிகர்கள் நடித்துள்ளனர். திரைப்படத்தை ரசிக்கும் வகையில் பார்வையாளர்களை இருக்கையின் நுனியில் வைத்திருக்கும் ஒரு இறுக்கமான திரைக்கதையுடன் பின்னிப் பிணைந்துள்ளது. கதையில் திருப்புமுனையாக அமையும் இந்த படத்தில் நடிகர் சார்லி ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

அத்துடன் நடிகர்கள் சென்ட்ராயன், அபிதா, அபிலாஷ், கோபிநாத், தரணி, பிராணா மற்றும் பலர் நட்சத்திர பட்டாளத்தில் ஒரு அங்கம். படத்தின் பூஜை மற்றும் தலைப்பு வெளியீட்டு விழா சமீபத்தில் சென்னையில் நடிகர்கள் மற்றும் படக்குழுவினர் முன்னிலையில் நடந்தது. சென்னை மற்றும் பல இடங்களில் இரண்டு ஷெட்யூல்களாக படப்பிடிப்பு நடைபெற்றது.

மிகுந்த பொருட் செலவில் செட்கள் போடப்பட்டு நீதி மன்றம் மற்றும் சிறைச்சாலை ஆகியவை சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டன.

இது தொடர்பாக கனடா உதயன் பிரதம ஆசிரியர் மற்றும் அவரது குழுவினருக்கு விளக்கமளித்த இயக்குனர் வினோத் இராஜேநதிரன் அவர்கள். படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மற்றும் இதர விவரங்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக வெளியாகும் எனவும் இலங்கை மற்றும் கனடா அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இந்த திரைப்படம் அதிகளவில் திரையிடப்படும் என்றும் தெரிவித்தார்.












சினிமா

# "ஒரு நகைச்சுவை கடைசியாய் அழவைத்துவிட்டது..."

## மனோபாலா மறைவு குறித்து வைரமுத்து உருக்கம்!

நடிகரும் இயக்குநருமான மனோபாலா மறைவுக்கு கவிஞர் வைரமுத்து இரங்கல் தெரிவித்துள்ளார்.

"இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் என பன்முகம் கொண்டவர் மனோபலா. தமிழில் கிட்டத்தட்ட 700 படங்களுக்கு மேலாக குணச்சித்திர வேடங்களில் நடித்துள்ளார். விஜய் டிவியின் குக் வித் கோமாளி சீசன் 3 நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தனக்கே உரிய பாணியில் கலக்கினார். பெரும்பாலும் நகைச்சுவை வேடங்களில் நடித்து வரும் இவர் தனது யூடியூப் சேனல் மூலம் பிரபலங்களை பேட்டியெடுத்து வருகிறார். சமீபத்தில் அவருக்கு லேசான மாரடைப்பு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவருக்கு தற்போது ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் குணமடைந்து வீடு திரும்பினார். இந்த நிலையில் அவர் உடல் நலக்குறைவால் காலமானார். அவரது மறைவுக்கு தமிழ் திரையுலகினர் இரங்கல் தெரிவித்துவருகின்றனர்.

இந்த நிலையில் கவிஞர் வைரமுத்து வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், ஒரு நகைச்சுவை கடைசியாய் அழவைத்துவிட்டது. மரணத்தின் இறுதிவரை இயங்கிக்கொண்டிருந்த மனோபாலா இன்று இல்லை. திரையின் எல்லாத் துறைகளிலும் இயங்கியவன். எல்லோரோடும் பழகியவன் இனி இல்லை.

ஒல்லியாய் இருப்பவர்கள் நீண்ட நாள் வாழ்வார்கள் என்ற மனிதக் கணக்கை மரணம் உடைத்துவிட்டது என் ஆழ்ந்த இரங்கல்" என்று தெரிவித்துள்ளார்.



# முதன்முறையாக ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் பாடிய நடிகர் வடிவேலு



ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் நடிகர் வடிவேலு முதன் முறையாக பாடியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

வைகைப், நகைச்சுவை கிங் என ரசிகர்களால் அழைக்கப்படும் வடிவேலு நீண்ட இடைவேளைக்கு பிறகு அடுத்தடுத்து படங்களில் நடித்துவருகிறார்.

நாய் சேகர் ரிட்டர்ன்ஸ் படத்தில் நடித்திருந்த வடிவேலு தற்போது மாரி செல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் உருவாகியுள்ள மாமன்னன் படத்திலும், பி.வாசு இயக்கத்தில் ராகவா லாரன்ஸ் நடித்துவரும் சந்திரமுகி 2 படத்திலும் நடித்துவருகிறார். மாமன்னன் படத்தில் இதுவரை பார்த்திராத வேடத்தில் வடிவேலு நடித்திருப்பதாகவும், இந்தப் படம் அவர் மிகச்சிறந்த நடிகர் என்பதைக் காட்டும் எனவும் சமீபத்தில் ஒரு பேட்டியில் இயக்குநர் மாரி செல்வராஜ் தெரிவித்திருந்தார். அதற்கு ஏற்ப படத்தின் பதாகைகளிலும் கையில் துப்பாக்கியுடன் கெத்தாக அமர்ந்திருக்கிறார். வடிவேலு ஒரு மிகச்சிறந்த பாடகரும் கூட, தொடர்ந்து திரைப்படங்களில் பாடியும் வருகிறார். முதல் பாட்டே இளையராஜா இசையில் என் ராசாவின் மனசிலே படத்தில் இடம்பெற்ற எட்டணா இருந்தா என்ற பாடலை பாடியிருந்தார். இந்த நிலையில் முதன்முறையாக மாமன்னன் படத்தில் ஏ.ஆர். ரஹ்மான் இசையில் முதன்முறையாக பாடியிருக்கிறார். இந்தப் பாடலை கவிஞர் யுகபாரதி எழுதியிருக்கிறார்.

# PUBLIC SERVICE IS GOOD FOR YOU

By: K. Ananthanathan, MA, MSW, RSW
Registered Social Worker with OCSWSSW

In this article, I will discuss mainly late Mr. Jim Flaherty former Canada Federal Government's Finance Minister, whose dedicated/ inspired public services in Canada and his other related political economical contributions for Canadians welfare have left a lasting impact on the country. He is the only recent Canadian politician who has always inspired me through his political actions and speeches.

As a student of political philosophy, I was inspired by Jim Flaherty's good political qualities, especially his definitions of public service and his selfless actions for the disabled community in Canada through the creation of the Registered Disability Saving Plan (RDSP).

When Jim Flaherty suddenly died at the age of 64 on April 10, 2014, due to a rare skin disease, Thomas Mulcair former Leader of NDP party said "He is a good person. I had a chance to know him before being in Canadians politics and he is a strong and tough character. He has always been very devoted for his family and Canadians in general. He is fundamentally. Committed to the ideal of public services/public good".

Before entering politics, Jim Flaherty practiced Motor Vehicle Accident/ Personal Injury Law for more than 20 years and was the Ontario provincial parliament MPP for the Whitby – Ajax riding. In 2001, he became the Ontario Provincial Parliament Finance Minister under Premier Mike Harries Cabinet. Later he moved to Canada Federal Politics and became Federal Government Finance Minister from 2006 to 2014 under Prime Minister Stephen Harper and Jim Flaherty is a one of the longest serving Federal Government Finance Minister with eight years of service.

During the 2007 Budget, Jim Flaherty introduced the Registered Disability Savings Plan (RDSP) for benefit of Canadian disabled Community. In brief, the Registered Disability Savings Plan (RDSP) means a Long-Term Savings Plan to help Canadians with Disabilities and their families save for their future. The Government of Canada assists these families by contributing through grants and bonds that supplement contributions.
His other main contribution was introducing many Tax Reforms to rescue Canada from great recession in 2008, such as Tax-Free Savings Account (TFSA), economic stimulus for Canadian industries and seniors saves for their future for themselves and their children's education and RDSP for Canadians disables.

On October 13, 2011, Jim Flaherty gave a speech to a group of students at the Ivey Business School at Western University. London, Ontario extoling the benefits of public service and public goods. It was. Inspired by Robert Kennedy's talk at Princeton University when Mr. Jim Flaherty was an undergraduate student.
Public service is good for you. It will give perspective to your life by expanding your horizons, your thoughts and your views of the world. You will learn that some issues and concerns are more important than others. This leads to discernment as choices must be made. This perspective will be useful in all aspects of your life.

Public service reminds us of all that there exists a genuine concept of the public good in the broad public interest. While we value individual liberty and protect it, as Canadians we also maintain a strong tradition of the public good-that is, what is good for society, on balance, considering disparate interests and adopting the longer view. In public service you will participate in advancing this public good.

Public service is good for you. It will give your life a greater impact on others and your country. In many ways ranging from individual matters to community concerns to national and global issues, the opportunities to be a positive force for others in public service are both plentiful and fulfilling.

That will make you happier, ultimately. We are, of course, not in the world alone and our lives here are finite. People seek to have an impact on broader public issues recognizing the intrinsic value of reaching out to others not only to maintain and reinforce shared common values, but also to create new initiatives and innovations. This societal public good is not incompatible with the private good. Our individual and family responsibilities are primary. Yet the desire to accumulate private goods in the end does not lead to satisfaction simply because, as we all learn, enough is never enough. On that train, some people will always be in the cars ahead.


If money was all that mattered to me, I would still be working as a lawyer in downtown Toronto. Because I can tell you, I would be making a lot more money than I am now. But I would have missed out on so many experiences that have enriched my life. And I would have missed out on so many opportunities to shape and implement public policies that, in my opinion, have enriched others' lives and made our communities and country stronger.
Public service is good for you. You will have opportunities to change the world around you in varying ways and to different degrees, large and small.

You will get opportunities to use your talents to implement your thoughts and beliefs. In concert with others, accomplishments will follow. Great adventure this, for disappointments and failure will follow also. Boredom, however, is not on the agenda.
Public service is good for you. It's unlike any other career. It features long hours, relatively lower rates of pay than comparable positions on Bay Street, and it is often decades before you can witness the positive results of your labor.Some of you might then ask: "If the hours are long and the pay low, why would I do it?"
The answer is simple: It is the most satisfying and personally enriching career you will ever find. This, my friends, is priceless.

Almost 100 years ago, one of Canada's greatest Prime Ministers, Sir Wilfred Laurier, addressed a group of Ontario youth. It was less than a month before his death in February 1919. He admitted that his generation had not solved all of Canada's problems and was leaving much unfinished in their wake. Through public service, Laurier said, Canada's young people would have to face these challenges themselves. And to do so, he left them the following words of advice.

"Let your aim and purpose, in good report or ill, in victory or defeat, be so to live, so to strive, so to serve as to do your part to raise even higher the standard of life and living."
So, one more time I will say: Public service is good for you.

When I think about the importance of public service or public good, for Tamil Sri Lankan Canadian young politician I am always reminded of the impassioned speech that the late Canadian Federal Government Finance Minister Jim Flaherty gave at Ivey Business School students on October 13, 2011, about why Canadian young people should consider serving their county. As he pointed out in that speech, it's not important what political party a person belongs to – what matters is individuals seriously considering engaging in some form of public service or public good at a local, provincial, national or even international level.



In conclusion, I was very much inspired by his speech and his political actions about what is Public Service and I advise that our Canadian Sri Lankan Tamils should understand the concept of public services/ public good clearly before entering Canadian Municipality, Provincials, and Federal politics that is my main purpose/ message of this small article and they should consider Mr. Jim Flaherty as a mentor or example for their Canadian political activities. Also, I encourage my fellow Sri Lankan Canadian Tamil politicians before entering the politics of Canada any level of Government everyone should go to University of Western, London, Ontario website where you can read or listen to his full speech.

(I encourage the Uthayan readers to go to the University of Western Ontario website where you can read or listen to that speech – westernu.ca/lectures/lectures_at_western.html.)


**ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION - (OSTBA)**
EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA
Mailing address: P.O.Box 48068 (Dundas &Sheppard Intersection)
Mississauga ON L5A 4G8

## OSTBA ANNUAL GENERAL MEETING 2023

Date: Wednesday, June 21, 2023
Via Zoom link: 647 795 0504 Pass Code: 292929
Venue: Mississauga Valley Community Centre
1275, Mississauga Valley Blvd, Mississauga, ON, L5A 3R8
Time: 10:00 am

Agenda
-Registration of members in good standing
-Canadian National Anthem
-Thamil Thaai Vaalthu
-A minute silence remembering deceased members
-Adoption of the minutes of the A.G.M held in 2022
-President's Address
-Secretary's Annual Report
-Audited Financial Statements - April 01,2022 to March 31, 2023
-Election of Board of Trustees
-A.O.B

Members attending the AGM through zoom will require to have their video on with their name.

Mr. T.Sivaloganathan, Board Secretary (OSTBA)
Mr. Esa Para Esananda, Board President (OSTBA)

Tel: 416-473-6880 Email: ostba2019@gmail.com



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers



**30**
**வருட சேவைகள்**

**வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு**
**இணங்க புதிய கிளை உதயம்!**

# கனகாம்பிகை

**உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த**
**வட்டி வீதத்தில் தங்க நகை அடவு**

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

## Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
**416 269 7198**

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
**416 754 7198**

(22 பக்கம் தொடர்ச்சி)

# மனோ சாட்சி

"எனது போலீஸ் பாதுகாவலர்களின் குறிப்பேடுகளை பார்த்தால் என்னை சந்திக்க என் வீட்டுக்கு ஜெயராஜும், பசிலும் வந்தது தெரியவரும். இதுவே எனது வாக்குமூலம். என்னை அவசியமாயின் நீங்கள் கைது செய்யலாம். நீதிமன்றில் நிறுத்தலாம். வழக்கு தொடரலாம். ஆனால் விசாரணையின் போது, நான் பெயர் சொன்ன அனைவரும் விசாரிக்கப்படுவார்கள்." என்று கூறி முடித்தேன்.

அப்படியே எழுதப்பட்டிருக்கின்றதா என்று பார்த்து சிங்களத்தில் இருந்ததை வாசித்து ஒப்பமிட்டேன்.

"என்ன செய்ய போகிறீர்கள்?" எழுந்தேன்.

அறையில் மிக கடும் அமைதி. ஊஜட அதிகாரிகளுக்கு தெரியாமல் வேப்பெண்ணெய்யை குடித்து விட்ட நிலைமை.

"கொஞ்சம் பொறுங்கள் சார்" என்று கூறிவிட்டு பணிப்பாளர் வெளியே சென்றார். ஒரு அரை மணித்தியாலம். மாலை 5 மணி. மீண்டும் அந்த பணிப்பாளர் அறைக்குள் வந்தார். இப்பொழுது பேச்சிலே முன்னரை விட அதிக பணிவு.

"சார், விசாரணை முடிந்தது. நீங்கள் போகலாம் சார்." என்று மிக பவ்வியமாக என்னை பார்த்து கூறினார்.

அவர் வெளியே போய், மேலிடத்திற்கு, நான் தந்த வாக்குமூலத்தை பற்றி கூறியிருப்பார். அதை கேட்டவுடன், என்னை உடனடியாக அனுப்பி வைக்கும்படி மேலிடம் இவருக்கு உத்தரவிட்டிருக்கும். இதென்ன ரொக்கட் சயன்சா? சுலபமாக ஊகித்தேன்.

இவரது மேலிடம், அதன் மேலிடத்துடன், அந்த மேலிடம், அதன் மேலிடத்துடன், சங்கிலியாக உரையாடி இருக்கும். இச்செய்தி சங்கிலி தொடராக அதி மேலிடத்திற்கும் செல்லனும். இதுதான் என் விருப்பம்.

அவ்வேளை எனக்கு "சுதந்திர காவலன்" சர்வதேச மனித உரிமை விருது கிடைத்திருந்தது. இலங்கைக்கு என் முன் முயற்சியால் ஐ நா வின் அப்போதைய மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் வந்து சென்றிருந்தார். என் உயிரை பாதுகாக்கும்படி ஐநா சபையின் செயலாளர் நாயகத்தின் மனித உரிமை போராளிகளுக்கான விசேட அறிக்கையாளர், இரு முறை இலங்கை ஜனாதிபதிக்கு எழுதியிருந்தார்.

இவற்றினால்தான் நான் உயிரோடு இருந்தேன். எனக்கு ஆபத்து நிகழ்ந்திருந்தால், அது தங்கள் கணக்கில்தான் விழும் என அரசுக்கு தெரியும். ஆகவேதான் என் மீது புலித்தொடர்புள்ள பயங்கரவாதி முத்திரையை குத்த அரசு முயன்றது.

மேற்கத்திய நாடுகள், மனித உரிமை மீறல்களை கண்டிக்கும் நிலைப்பாட்டில் இருந்தாலும், புலிகளை பயங்கரவாதிகளாகவே தீர்மானித்திருந்தார்கள். புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்த காரணத்தினாலே அன்றைய கூட்டமைப்பின் மீதும் இந்த "பயங்கரவாத" முத்திரையை பல நாடுகள் குத்தி வைத்திருந்தன.

என்னை பொறுத்தவரை நான் மனித உரிமை போராளியாக செயற்பட்ட வேளையில் புலிகளுடனான தொடர்பை அரசியலுடன் மட்டுப்படுத்திக் கொண்டேன். வேறு நான் புலிகளுடன் எதை பேச?

ஆகவே கோத்தாபய போட்ட திட்டம் இப்படி படு கேவலமாக தோல்வி அடைந்தது.

சுமார் ஒன்பது மணித்தியாலம் உள்ளே இருந்தேன். அதற்குள் வெளியே செய்தி பரவி இருந்தது. என்னை ஜயலத் ஜயவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னெண்டோ, லக்ஷ்மன் செனெவிரட்ன, பிரியாணி குணரட்ன ஆகியோர் வரவேற்று, கூட்டி சென்றார்கள்.

எனது கட்சியையோ, ஏனைய தமிழ் கட்சிகளையோ சார்ந்த எவரும் அங்கு வரவில்லை.

# கடந்தவையும் கடப்பவையும் (57)

பொலிகண்டிப் பாதைவழிப் பயணம் என்றால்
கடம்பவனக் கந்தனைக் காணாது கடக்காது - கால்கள்

இடைநடுவில் பாதையொன்றை ஊடறுத்து வந்ததனால்
கடந்திடுத்து கந்தவனக் கடவையது - அவனைக்

காணாமல் வந்த கவலையது அடுத்தநாள்
போகத்தான் செய்தது மறுபடியும் பொலிகண்டிக்கு - அங்கு

எப்போதும் திறந்திருக்கும் கந்தவனக்கடவை
இப்பொழுது மூடியே உள்ளது திருப்பணிக்காய் - அன்று

போர்க்காலச் சூழலிலே மாட்டிக்கொண்ட ஆலயங்கள் - பல
தீட்டுக்களைச் சுமந்தவையாய் இருந்தவைதான் - இதற்கு

கந்தவனத்தானும் விதிவிலக்கு ஆகவில்லை - அங்கும்
வசந்த மண்டபத்துள் இருந்ததாகச் சொன்னார்கள் உடலமொன்று - அன்றைய

தீட்டை அகற்றி மங்கலத்தை மறுபடியும் உண்டுபண்ண
தீட்டுக்காய் எத்தனை பரிகாரங்கள்?

அத்தனையும் செய்துதான் இன்று மீண்டும்
மெத்தப் பெரும் பொலிவோடு ஆலயங்கள் அத்தனையும்

விழாக்கோலம் பூண்டு நிற்க திருவிழாக்களுக்காய்
குழுக்குழுவாய் மக்களும் திரண்டுதான் செல்கின்றார்

புலம்பெயர்நாடுகளில் இருந்தும் தான் - மிக
உயர்ந்த திருப்பணி வேலையது என்பதாலாம்

கந்தவனத்தான் வேலையது இன்னமும் முடியவில்லை ஆதலால் - இந்த
வன்னி மரத்து வேலவனை இம்முறை பார்க்கவில்லை

இம்முறைப் பயணத்தில் பல இடங்களைப் பார்த்த போதும்
எம்மனதில் பெருங்கவலை தந்ததேனோ பொலிகண்டிப்

பாதை ஒன்றே - ஏன்? - அன்று

அதிகளவு கலகலப்பாய் இருந்த இடம்
பெருமளவில் பொலிவிழந்து இருப்பது போல் இருந்ததனால்...

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --



# Albert Campbell Square
## (Scarborough Town Centre)

அல்பேர்ட் காம்பெல் சதுக்கத்தில்

# தமிழின அழிப்பு நினைவு நாள்

## மே 18 வியாழக்கிழமை மாலை 6:00 மணி

## தமிழின அழிப்பின் 14ஆம் ஆண்டு நினைவு நாள்

- International Accountability and Remedial Justice for the Tamil Genocide.
- Recognize Tamil people as a Nation and their right to self-determination.
- Justice for enforced disappearances and release of political prisoners.
- Stop state sponsored Buddhisization, Colonization, Militarization, Sinhalisation and Land Grabs.
- Remove armed forces and release occupied land from the traditional and ancestral homeland of Tamil people.

- தமிழின அழிப்பிற்கான சர்வதேச பொறுப்புக்கூறலும் பரிகார நீதியும்.
- தமிழ் மக்களை ஒரு தேசமாகவும் அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தல்.
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை.
- சிறீலங்கா அரசின் அனுசரணையுடன் இடம்பெறும் புத்தமயமாக்கல், குடியேற்றம், இராணுவமயமாக்கல், சிங்களமயமாக்கல் மற்றும் நில அபகரிப்பு ஆகியவற்றை நிறுத்தல்.
- தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் பூர்வீக தாயகத்திலிருந்து ஆயுதப்படைகளை அகற்றி ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல்.




# TAMIL GENOCIDE
## Remembrance Day

*முள்ளிவாய்க்கால் உறவுகளுக்கு*
*நினைவுத் தீபம் ஏந்துவோம்*

**Join us to commemorate and memorialize the genocide committed against the Tamil people in Sri Lanka**

416 830 7703 | 647 975 0524 | 416 662 2326

**கனடியத் தமிழர் சமூகமும் மாணவர் சமூகமும்**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1047

## கருமாரி அம்மன் ஆலயம் புத்தளம்

*" தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது துணிந்திச்சையே
புண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றோ "*

பொம்மக்கா என்பவர் வழமைபோல பத்தினி அம்மன் கோயிலுக்குச் செல்லுமுன், பத்தினி அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள வில்லுக்குளத்தில் நீராடிக் கொண்டிருந்தார். அப்பொழுது பொம்மக்கா முன் தோன்றிய மூதாட்டியொருவர், உன்னுடைய நாகதோஷம் நீங்க வழிகாட்டுகின்றேன், நான் வணங்கும் கோயிலுக்கு என்னுடன் வா என அழைத்தார். ஆர்வமிகுதியால் எப்படியாவது நாகதோஷத்திலிருந்து விடுபடவேண்டும் என்ற ஆவலோடு மூதாட்டியைப் பின்தொடர்ந்தார்.

காட்டுவழியே அழைத்துச் சென்ற மூதாட்டி, தம்மன் அடவி ஆலய தலவிருட்சத்திற்கு அண்மையில் சென்றதும் திடீரென மறைந்துவிட்டார். அந்தக் கணத்திலேயே தன் உடம்பிலே ஏதோவொரு மாறுதல் ஏற்பட்டதை உணாந்த பொம்மக்கா ஆச்சரியமடைந்தார். தான் நாகதோஷத்திலிருந்து விடுபட்டதை உணர்ந்த பொம்மக்கா, நடந்தவற்றை ஊரவர்களிடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தார். அத்தோடு அமையாது ஊரவர்களின் உதவியோடு, கருமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகிலே திருமடம் ஒன்றினை அமைத்து அங்கேயே தங்கினார்.

மடத்தில் தங்கியவாறே மண், மற்றும் ஓலைகளைக்கொண்டு அம்மனுக்குக் கோயில் கட்டினார். இக்கோயிலிலே சக்தி யந்திரத்தைப் பிரதிஷ்டை செய்ய எண்ணங் கொண்டார். பொம்மக்காவின் முயற்சியின் பயனாக, காசியில் இருந்து சக்தி யந்திரத்தைத் தருவித்து, அதனை கருமாரிஅம்மன் கோயிலிலே பிரதிஷ்டை செய்து, பயபக்தியோடு பூசித்து வந்தார். பொம்மக்காவின் வழிபாட்டுமுறையிலே தியானமே முக்கியமாகக் காணப்பட்டது. இவ்வாறான நிலையிலே கருமாரி அம்மன் ஆலயத்திலே பொம்மக்கா சமாதியடைந்தார். இந்நிகழ்வின் பின் இக்கோயிலின் அருளும் மகத்துவமும் எங்கும் பரவியது. இக்காரணத்தினால் இவ்வூர் மக்கள் கருமாரி அம்மனை பொம்மக்கா அம்மன் எனப் போற்றினர்.

கருமாரிஅம்மன் கோயிலுக்குரிய தலவிருட்சமான ஆலமரத்தை புனிதமானதாகப் போற்றி வணங்குகின்றனர். இக்காரணத்தினால் இவ்விருட்சத்தைத் தீண்டாது, அயலே நின்று வழிபாடியற்றிச் செல்கின்றனர். அம்மனுக்குரிய சிறப்பான நாட்களாகிய செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நெய்விளக்கேற்றி பொங்கல்வைத்து சிறப்பான வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இவ்வாறான நிலையில் ஒவ்வொரு நாகசதுர்த்தி தினத்தன்றும் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஆலமரப்புற்றிலிருந்து வெண்மைநிறமுடைய நாகபாம்பு வெளியே வந்து மக்களுக்குக் காட்சி கொடுத்துச் சென்றது. நாக தரிசனத்தை மக்கள் பயபக்தியோடு ஏற்றதோடு இக்காட்சியைக் காண்போருக்கு சகல நலன்களும் கிடைக்கும் எனவும் நம்பி வழிபட்டு வந்தனர். இக்காட்சியைக் காண நாகசதுர்த்தி நாளில் இக்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்து தரிசித்துச் செல்வது வழக்கமாகக் காணப்பட்டது.

வெண்ணிற நாகத்தோடு வேறு இரு பாம்புகளும் கருமாரி அம்மன் கோயில் சுற்றாடலிலே, சர்வ சுதந்திரத்தோடு சுற்றிதிரிவதாக இவ்வூரவர்கள் கூறியுள்ளார்கள். இப்பாம்புகள் எவருக்கும் தீங்கிழைப்பது கிடையாது. இப்பாம்புகள், தாம் ஏற்றிப்போற்றும் கருமாரிஅம்மனுடையவை என்றும், அவற்றிற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும், இவ்வூரவர்கள் இக்கோயிலுக்கு வரும் ஏனையோரிடமும் கூறுவர். இப்பாம்புகளைத் தரிசிப்பது கருமாரியம்மனைத் தரிசித்தமைக்குச் சமமானது என்ற எண்ணத்தை அனைவரும் கொண்டுள்ளனர். தாயின் கருணைக்கு எல்லையேது என்பதற்கமைய, புத்தளம் மணற்குன்றின் எல்லையிலே தம்மன் அடவியில் எழுந்தருளியுள்ள கருமாரி அம்மனும், தன்மீது ஆராத பக்திகொண்ட மக்களை கண்ணே போலக் காத்துவருகின்றாள்.

**- வளரும்...**

**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party - Family Get-together
- Birthday Party - Graduation Party
- Bridal Shower - Religious Ceremonies
- Engagement Party - Wedding Showers - and more...

SHIVA SUBRAMANIAM (647) 406-4868



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

**12-05-2023 வெள்ளி தொடக்கம் 18-05-2023 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் ‘ராஜயோகம்’

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 /




**மேஷம்:** தொட்டது துலங்கும் வாரம். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். வெளியூர் பயணம் வெற்றித்தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். சோதனைகள் நீங்கும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு விலகும். ஆன்மீக சிந்தனை உருவாகும். நட்பில் பிரிவு ஏற்படும். எண்ணங்கள் மாறுப்படும். மாணவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். செல்வாக்கு பெருகும். செயலில் துணிவு கூடும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். உடல்நிலையில் கவனம் தேவை. சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். புண்ணியம் சேர்க்கும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *1,9,8,4*

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P




**ரிஷபம்:** தார்மீகப் பொறுப்புகள் நிறைவேறும் வாரம். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். புதிய தொழிலமையும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. உதவும் குணம் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணங்கள் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். சிரமங்கள் குறையும். ஆரோக்கியம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன் தொல்லை நீங்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். தேக ஆரோக்கியம் மிளிரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். பழையக்கடன் தீரும். பொறுமையை கையாண்டு முன் கோபத்தை குறைக்க வேண்டும். பிள்ளைகளால் சந்தோ‘ம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். கற்பனை ஆற்றல் பெருகும். காரியத் தாமதம் ஏற்படும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமாட்சி, அதிர்ஷ்ட எண்: *7,9,4,3*


அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,C




**மிதுனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வெளிநாட்டுப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சிக்கனத்தை கடைப்பிடிப்பது நல்லது. ஆடை, அணிகலன் சேரும். மன சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மன அமைதி குறையும். ஆதாயம் பெருகும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். செயல் திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். தொழில் லாபம் பெருகும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாளைய முயற்சி நிறைவேறும். ஊதிய உயர்வு கிட்டும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆண்களின் அதிகாரம் உயரும். நினைத்தது நிறைவேறும். அனுகூலச் செய்தி வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தாய்வழி உறவில் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் கல்வியால் பெருமை சேரும். திருப்பு முனை ஏற்படும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை சுமூகமாகும். உற்சாகம் மேலோங்கும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த தொழில் முயற்சி வெற்றி பெறும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அருணாச்சலேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *8,1,5,3*

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,F




**கடகம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நிம்மதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை துளிர்விடும். வாழ்வில் வசந்தம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். தொழில் மந்த நிலை மாறும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவுகள் குறையும். வரவுகள் திருப்தி தரும். புதிய சொத்துக்கள் சேரும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். செல்வாக்கு உயரும். நீண்ட நாளைய அசைகள் நிறைவேறும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனைகள் அகலும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகமாகும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலம் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். புதிய தொழில் முயற்சிகளை தள்ளிப் போடவும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. மாற்று யோசனை பயன் தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வார்த்தையில் நிதானம் தேவை. மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். சுபிட்ஷங்கள் பெருகும். பணியாளர்களின் ஒத்துழைப்பு தரும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டுக் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: *3,9,2,4*

அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**சிம்மம்:** ஆன்மீகச் சிந்தனை அதிகரிக்கும். நிதி நிலைமை சீராகும். பணவரவு உண்டு. பணப்பற்றாக்குறை நீங்கும். நீண்ட நாள் பிரச்சனைகள் முடிவுக்கு வரும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். பொன்னான காலமாக அமையும். தாய்வழி உறவில் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். கலையார்வம் கூடும். தனவரவில் மேன்மை உண்டு. சேய் நலம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். இனிப்பானச் செய்தியால் மனம் மகிழும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ஆரோக்கியம் சீராகும். அதிர்‘ட வாய்ப்புக்கள் அலைமோதும். நல்லோர் நட்பு கிட்டும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். குழப்பங்கள் அகலும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். நினைத்தது நிறைவேறும். வீடு, மனை யோகம் உண்டு. ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். சச்சரவுகள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பொருள் வரவு திருப்தி தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். மாணவர் திறமை பளிச்சிடும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். கால்நடைகளால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: *3,1,4,9*

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் வசூலாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உள்ளம் மகிழும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். நண்பர்கள், கவனம் தேவை. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். ஆலய வழிபாடு ஆறுதல் தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகரிக்கும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புகள் வந்து போகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொது பிரச்சனைகள் விலகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். வாழ்வில் வளம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். தோ‘ங்கள் ஒதுங்கும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டுக்கள் கிட்டும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: *6,9,2,1*


அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,H




**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். மற்றவரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். தடைகள் விலகும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வீண்செலவு அதிகரிக்கும். வறுமைகள் அகலும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுபணிகளில் ஆர்வம் கூடும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொல்லைகள் அகலும். முகப்பொலிவு கூடும். இடமாற்றம் ஏற்படும். மதிப்பும், மரியாதையும் உயரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். வாழ்த்துச் செய்திகள் வரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் வெற்றி பெறும். புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். நீண்ட நாளைய நோய் விலகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேக பலம் கூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். தொழில் முயற்சி வெற்றி தரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகள் கவனம் தேவை. வேண்டாத விஷயங்கள் விலகும். உடல்நலம் சீராகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்சக் கடவுள், அதிர்ஷ்ட எண்: *2,9,6,8*

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,F




**விருச்சிகம்:** பிள்ளைகளால் சொத்து சேரும் வாரம். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. வெளியூர் பயணம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பொறுப்புக்கள் கூடும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சாதனையான காலம். அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அன்னிய தேசப்பயணம் உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். செய்த்தொழில் லாபம் தரும். புத்துணச்சியோடு செயல்படும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை விலகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மற்றவர்கள் உதவி கிட்டும். திட்டங்கள் நிறைவேறும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டைத் தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். வருமானம் திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: *9,4,3,1*

அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,H

***(தொடர்ச்சி 33 பக்கம்)***

VASANTHAM



Are you or a loved one struggling with ADDICTIONS?

Recovery is Possible

Vasantham Presents:

**Tamil Addiction Recovery Program**

**போதையில் இருந்து விடுபட இலவச வகுப்புகள் தமிழில்**

- **Cost:** Free!
- **When:** Every Saturday 10:00 AM to 12:00 PM
- **Where:** The Hub Mid-Scarborough 2660 Eglinton Ave East
- **How to register:** Call Vasantham Wellness Centre at தொடர்புகளுக்கு அழைக்கவும் - வசந்தம் 416-847-4172
- **Who can participate:** People 18+ who are facing addiction challenges

Funded by the SUAP/ HEALTH CANADA

# அன்னை நீ இல்லாது போனால்

## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

கருவில் என்னைக் களிப்புடன் சுமந்து
உருவம் ஒன்றை மனதிலே கண்டாய்
ஐயிரு திங்கள் அங்கம் சுமந்து
பயந்து நடந்து பக்குவம் பார்த்தாய்
வெளிவரா என்னிடம் வேண்டி நின்றாய்
வெள்ளை உள்ளத்து விருப்பம் யாவையும்
அசைவுகள் கண்டே ஆனந்தம் கொண்டாய்
இசையைக் கேட்கவே ஏற்றவழி செய்தாய்
நாட்கள் செல்லவே நான்வெளி வரும்வரை
பாட்டுப் பாடியே பரவசம் கொண்டாய்
மாதமோ நெருங்கி வரவே மனதினில்
ஆதங்கம் அடைந்தாய் அச்சம் கொண்டே!
உருண்டு படுக்க உடல்தான் விரும்பியும்
நெருங்கும் நாட்களை எண்ணித் தவிர்த்தாய்
எனது உதைகள் இம்சை கொடுத்தும்
மனதிலே மட்டிலா மகிழ்ச்சி பெற்றாய்
திங்களோர் மாற்றம் தேகத்தில் தெரியவே!
பங்கம் வராமல் பார்த்து நின்றாய்
உதிரம் சொட்டிட உனக்கும் வலிக்க
அதனைத் தாங்கி ஆர்வமாய்ப் பெற்றாய்
பாலகன் எனது பால்முகம் காணவோ?
பாலை எனக்குப் பாசமாய் ஊட்டினாய்
என்னுள் துடிக்கும் இதயத்தை விடவும்
உன்னுள் இருக்கும் உறுப்பு துடித்ததே!
தந்தையின் கையிலே என்னைத் தந்தே!
சிந்தை மகிழச் சிரித்து நின்றாய்
பாரினில் உனைப்போல் பரிவுத் தெய்வம்
சேரினில் சிறக்கும் வாழ்வு எவர்க்குமே!

---

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# இவ்வார ராசிபலன்

(32 பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:** புதிய வாய்ப்புக்கள் வரும் வாரம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உதயமாகும். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். நல்லச் செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் முற்றிலும் அகலும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். பயணம் அனுகூலம் தரும். பாராட்டுக்கள் உயரும். ஆடை, அணிகலன் சேரும். வயிறு உபாதைகள் வந்து போகும். களவுப் போனப் பொருள் திரும்ப கிடைக்கும். காரியம் கைகூடும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வீடு, மனை யோகம் உண்டு. பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் போட்டி மறையும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். திருஷ்டிகள் விலகும். மாற்று மருத்துவம் பயன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 5,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J

**மகரம்:** சுபச்செய்தி வரும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வரும். நட்பு வட்டம் விரிவடையும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். உடல்நலம் சீராகும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். மாணவர்கள் படிப்பில் உற்சாகம் காண்பார்கள். வீண் வம்பு விலகும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். வழக்குகள் சாதகமாகும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்குப் பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். திறமைகள் வெளிப்படும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பகைவர் பணிந்து நிற்பர். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். புதுமையை விரும்புவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதியைத் தரும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கர்ம கர்ம வினைகள் அகலும். நண்பர்கள் உதவி கிட்டும். தேகப்பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,M

**கும்பம்:** வியாபாரிகளுக்கு லாபம் கிட்டும் வாரம். மற்றவர்களால் உதவி கிடைக்கும். பெண்களுக்கு யோகம் உண்டு. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். மனக்குழப்பங்கள் அகலும். திருமணம் கைகூடி வரும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியத்தில் வெற்றி உண்டு. நண்பகலில் நல்ல தகவல் வரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப் போகும். உடல்பொலிவு கூடும். பணியில் பாராட்டு கிடைக்கும். வாகனச்செலவு ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் ஏற்படும். கலக்கமான மனநிலை காணப்படும். புதிய சிந்தனை உதயமாகும். சேமிப்பு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். வெளி வட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழிலில் ஏற்றம் உண்டு. பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகமாகும். நினைத்த காரியம் நிறைவேறும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவுகள் குறையும். மாற்ற இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காப்பரக்ஷாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R

**மீனம்:** சுறுசுறுப்பு அதிகரிக்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. ஆரோக்கியம் சீராகும். நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறும். பணியில் பாராட்டுக் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். விலகி சென்றவர் விரும்பி வருவர். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. பாகப் பிரிவினை சுமூகமாகும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி வழி சொந்தம் மூலம் நன்மை உண்டு. கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். வாய்ப்புக்கள் வந்து சேரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் உருவாகி மறையும். விரும்பிய பொருள் கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. சந்தோஷம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,R


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லரை விற்பனையாளர்கள், தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
இனிய புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Tasty தமிழா
TASTY தமிழா தயாரிப்புகள்
இங்கு கிடைக்கும்
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கனித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160

# MORTGAGE FINANCIAL

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL

VACANT LAND CONSTRUCTION




SUBRA MORTGAGE SOLUTIONS

## NESAN

## 416-908-5656

- 1st, 2nd & 3rd Mortgages
- Refinance
- Equity line of Credit
- Self-employed
- Multi-rental properties
- Purchase
- Switches
- Pre-approvals
- Renewal
- New immigrants

**WE DEAL WITH ALL BANKS** Brokerage #10330

**Powered By**

Mortgage Alliance, Scotiabank, radius financial, TD Canada Trust, Home Trust, Equitable Bank, RFA Bank of Canada, MCAP, First National Financial LP, RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd,
Unit #406,
Toronto, ON.
M1B 2W1 canada

www.subra.com

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1414 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 12, 2023

## மனோ சாட்சி என்னை "செய்ய" நினைத்த மஹிந்த — கோத்தா அரசை நான் "செய்த" கதை

### *மனம் திறக்கிறார் மனோ கணேசன்*

(கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் -அத்தியாயம்-13)



புலிகளுடன் தொடர்பு எனக்கூறி, என்னை பயங்கரவாத தடுப்பு பிரிவில் வாக்குமூலம் தர பொலிஸ் மா அதிபர் அழைத்தார்.
"எனக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருந்தது என்பதை ஏற்கிறேன்" என என் வாக்குமூலத்தை ஆரம்பித்தேன்.
ஜனாதிபதி சந்திரிகா, அவரது செய்தியை புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கொடுக்க சொன்னார், என்றேன்.
மேத்தானந்த எல்லாவள தேரர் என்னிடம் "புலிகளை சந்திக்க ஏற்பாடு செய்து தாருங்கள்" என்று கேட்டார், என்றேன்.
(உள்ளே விபரமான செய்தி 22ம் பக்கத்தில்)

## நினைவு கூர்தல் என்றால் என்ன?

### யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடி நின்று தீச்சுடரை ஏற்றி அழுவது மட்டும் நினைவு கூர்தல் அல்ல. தீச்சுடரின் முன்னே நின்று உணர்ச்சிகரமான ஒரு சூழலில் பிரகடனங்களை வாசிப்பது மட்டும் நினைவு கூர்தல் அல்ல. இவை இரண்டையும் விட அது ஆழமானது.
ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் தொகையாகக் கூடி துக்கத்தை வெளிப்படுத்தும்போது, ஒருணர்ச்சிப் புள்ளியில் உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ச் சமூகம் ஒன்று திரள்கிறது.ஆனால் அதற்கும் அப்பால் கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்ற வேண்டும். அரசியல் ஆக்க சக்தியாக மாற்றப்படாத கூட்டுத் துக்கம் காலகதியில் வடிந்து போய்விடும்.காலம் எல்லாக் காயங்களையும் குணப்படுத்தும். எனவே காலகதியில் துக்கத்தின் கூர் மழுங்கிவிடும். அதனால் ஒரு சமூகத்தின் கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றும் செயற்பாடுகளை பரந்துபட்ட அளவில் பொருத்தமான விதங்களில் நிறுவனமயப்படுத்த வேண்டும். (உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

## கனடா வாழ் பன்முகக் கலைஞர் ரஜீவ் சுப்பிரமணியம் தயாரிப்பில் சென்னையில் 'FINDER' படப்பிடிப்பில் மூழ்கியுள்ள இயக்குனர் வினோத் தலைமையிலான திரைப்படத் தயாரிப்பு குழுவினர்





கனடா வாழ் பன்முகக் கலைஞர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பில் சென்னையில் இறுதிக்கட்டப் படப்பிடிப்பில் மூழ்கியுள்ள இயக்குனர் வினோத் ராஜேந்திரன் தலைமையிலான 'FINDER' திரைப்படத் தயாரிப்பு குழுவினரை கனடா உதயன் குழுவினர் நேரடியாகச் சந்தித்து அங்கு இடம்பெறும் படப்பிடிப்பு மற்றும் எடிட்டிங் தொடர்பான விடயங்களை கண்டும் களித்தும் வந்துள்ளனர்.
(உள்ளே விபரமான செய்தி ம் பக்கத்தில்)

## சென்னையில் கனடா அரசியற் செயற்பாட்டாளர் நிமால் விநாயகமூர்த்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற பயனுள்ள கருத்தரங்கு



தமிழ்நாடு- சென்னையில் கடந்த 6ம் திகதி சனிக்கிழமையன்று நடைபெற்ற பயனுள்ள அரசியல் கருத்தரங்கு ஒன்று "ஈழத் தமிழர்களின் பாதுகாப்பில் தமிழ்நாட்டின் தொடர்ச்சியான வகிபாகம்" என்ற தலைப்பில் இடம்பெற்றது.

தற்போது சென்னையில் தங்கியுள்ள கனடா அரசியற் செயற்பாட்டாளரும் கணக்காளரும் நாடு கடந்த தமிழீழ அரசின் முன்னாள் அமைச்சருமான நிமால் விநாயகமூர்த்தியின் ஏற்பாட்டில் அழைக்கப்பெற்ற அரசியல் சமூக ஆர்வலர்கள் பலர் பற்கெடுத்து பயனுள்ள கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அங்கு கலந்து கொண்ட அழைக்கப்பட்டவர்களில் "விடுதலை

இராஜேந்திரன். ஓவியர் புகழேந்தி. சரஸ்வதி அம்மா, ரி. எஸ். எஸ். மணி, தமிழினியன், மனோஜ், வா.மு.சே. திருவள்ளுவர் உட்பட பலரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.
(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)

## ஸ்ரீரங்கம் திருக்கோவில் நிர்வாக அதிகாரி கே. பாலசுப்பிரமணியனுக்கு உதயன் பத்திரிகை பிரதி ஒன்று வழங்கப்பெற்றது



தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற ஆலயமாகத் திகழும் ஸ்ரீரங்கம் திருக்கோவிலில் கடந்த வெள்ளியன்று தரிசனம் முடிவுற்ற பின்னர் உதயன் குழுவினரை அங்கு அழைத்துச் சென்ற தமிழ் நாடு அரசின் இயல் இசைக் கல்லூரிகளின் மேன்மை மிகு இயக்குனர் நடனக் கலைஞர்
சாகிர் உசைன் மற்றும் நில விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி திரு கே. பாலசுப்பிமணியன் ஆகிய இருவரும் 'உதயன்' பிரதம ஆசிரியருடன் நீண்ட நேரம் உரையாடி கனடா வாழ் தமிழ் மக்களின் வாழ்வியல் தொடர்பாக கேட்டறிந்தனர். லோகேந்திரலிங்கத்துடன் எடுத்துக் கொண்டனர் அப்போது கனடா உதயன் பிரதம ஆசிரியர், ஆலய நிர்வாக அதிகாரி திரு கே. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு உதயன் பத்திரிகை பிரதி ஒன்றை வழங்குவதையும் இங்குள்ள படத்தில் காணலாம்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker